வரு வரு
நுண்ணுயிர்
புலவர் கா. கோவிந்தன்

பதிற்றுப்பத்து விளக்கம் எண்: 5 ஆறாம் பத்து

வடு அடும் நுண் அயிர்

ஆசிரியர்:

புலவர். கா. கோவிந்தன்,

திருவத்திபுரம்.

வெளியீடு :

எழிலகம்

செய்யாறு 604 407.

எழிலகம் வெளியீடு: எண்: 7
முதற் பதிப்பு: மார்ச்சு 1990
உரிமை ஆசிரியர்க்கு.

விலை: ரூ. 10-00

கிடைக்குமிடம்:

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
T. T. K. சாலை,
ஆள்வார்பேட்டை சென்னை-18.

அச்சிட்டோர்:

கமலம் பிரஸ்,
காஞ்சிபுரம்-631 502.

பதிப்புரை

சங்கத் தமிழ்நூல்கள் என்ற சிறப்பினுக்கு உரிய பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்-தொகை வரிசையுல் நடுவண் வைத்து மதிக்கப்பெறுவது எட்டுத்தொகை; அது, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் எட்டு நூல்களைக் கொண்டது. அவற்றுள் நான்காவதாகிய பதிற்றுப் பத்து, சேர, சோழ, பாண்டியர் என்ற தமிழ்நாடாண்ட மூவேந்தருள், முதற்கண் வைத்து மதிக்கத்தக்க சேரர்குலக் காவலர் பதின்மர் ஒவ்வொரு வரையும், பத்துப் பத்துப் பாக்களால், தனித்தனியாகப் பத்து புலவர்கள் பாடிய நூறுபாக்களைக் கொண்ட பெருநூலாகும்; அவற்றுள் இரண்டாம் பத்தும், பத்தாம் பத்தும் காணமற் போகக், கிடைத்திருப்பன எட்டுப் பத்துக்களே.

அவற்றுள் இரண்டாம்பத்தில், இமயவரம்பன் நெடுஞ்-சேரலாதனைக், குமட்டூர் கண்ணனாரும், மூன்றும் பத்தில் பல்யானைச் செல்கெழு குட்டுவனைப், பாலைக் கௌதமனாரும், நான்காம் பத்தில், களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைக்-காப்பியாற்றுக் காப்பியனாரும், ஐந்தாம்பத்தில், செங் குட்டுவனைப் பரணரும், ஆறும்பத்தில், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக், காக்கைப் பாடினியார் நச்செள்ளையாரும், ஏழாம் பத்தில், செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலரும், எட்டாம் பத்தில், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும் பொறையை, அரிசில் கிழாரும், ஒன்பதாம் பத்தில், குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப், பெருங்குன்றூர் கிழாரும் பாடியுள்ளனர். கிடைத்துள்ள எட்டுப் பத்துக்களையும், **பத்துப் பாட்டு விளக்கம்** என்ற வரிசையில், ஒவ்வொரு,

பத்திற்குமான விளக்கங்களைத் தனித்தனி நூலாக எழுதி வரிசைப் படுத்தியுள்ளோம்.

அவற்றுள், ஐந்தாம் பத்தின் விளக்கம், **பதிற்றுப்பத்து விளக்கம்; வரிசை ஐந்து; வடுஅடும் நுண்அயிர்** என்ற தலைப்பில் புலவர். கா. கோவிந்தன் அவர்களின் நூல், எம் வெளியீடாக வர ஒப்புதல் அளித்தமைக்குப், புலவர்க்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நிலையில், புலவர் அவர்களின் நூல்களுக்கு அளித்து வந்த ஆதரவினை, எம் வெளியீடாம் இந்நூலுக்கும் அளித்து, வெளியீட்டுத் துறையில், எம் கன்னி முயற்சிக்கு ஊக்கம் அளிக்க வேண்டுகிறோம்.

—பதிப்பகத்தார்

முன்னுரை

தமிழ்மொழி இனிமை வாய்ந்தது. 'இனிமையால் இயன்ற இளமகளிர்' என்ற பொருள் பட வந்த ''தமிழ் தழீஇய சாயலவர்'' என்ற தொடரில் வரும் ''தமிழ்'' என்ற சொல்லே இனிமை எனும் பொருள் தருவதாகும் எனக்கூறித், தமிழ்மொழிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளார் சீவக சிந்தாமணி என்னும் பெருங்காப்பியப் பேராசிரியர் திருத்தக்கதேவர்.

இனிய சொற்களைத் தேர்ந்து, இனிமையாகச் சொல்லாட விரும்பிய தமிழர், தாம் கூற விரும்பும் ஒவ்வொரு கருத்தும் இனிமையுடைய வாதல் வேண்டும்; இனிக்கும் வகையில் உரைக்கப் பெறுதல் வேண்டும் எனவும் விரும்பினார்கள்- அவ்வாறே உரைத்தும் வந்தார்கள்; செந்தமிழ் இலக்கி, யங்கள் அனைத்தும் இச்சிறப்புடையவாகும்.

''உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்'' என்றார் ஒரு பெரியார். தமிழர்வாக்கு இனிமை வாய்ந்தது என்றால், அவர் உள்ளமும், அவ்வுள்ளம் உந்த உளவாகும் அவர் செயல்பாடும் இனிமை வாய்ந்தனவே ஆகும். இது, உண்மை என்பதைப், பழந்தமிழ் இலக்கியங்கள் காட்டும், படப்பிடிப்பினைக்காணும் வாய்ப்பினைப் பெற்றார் அனைவரும் உணர்வர்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நம் பழம்பெரும் மூதாதையர்தம் பண்பாட்டுப் பெருமையினை, இன்றைத் தமிழரும், பிறரும் அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்ற அவாவின் விளைவாக, அக்காலப் புலவர் பெருமக்கள், ஆயிரமாயிரம் பாக்களைப் பாடிச் சென்றார்கள். ஆனால், அவர்கள் பாடிச சென்ற அப்பாக்களின் களஞ்சியத்தைக்,

காக்கத் தவறிவிட்டார்கள் விழிப்புணர்வு அற்ற சிலர் என்றாலும், நம் முதாதையருள் விழிப்புணர்வோடு இருந்த-வர்கள், அழிந்தனபோக அழியா திருந்த அப்பழம் பாக்களை எல்லாம், அரிதின்முயன்று தேடிக் கொண்டார்கள்.

அவ்வாறு தேடிப் பெற்ற அப்பாக்களை ஊன்றிப் பயின்ற புலமைசால் பெரியார்கள் பலரும் ஒன்று கூடி இருந்தும், இப்பாக்களில் பொதிந்து கிடக்கும் பொருள்வளம், அப்-பாக்களின் அடி அளவு ஆகியவற்றை, அளவுகோலாகக் கொண்டு, அப்பாக்களையெல்லாம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்ற தலைப்புக்களில் தொகுத்து நமக்கு அளித்துச் சென்றனர். அவ்வாறு தொகுக்கப் பெற்ற தொகை நூல்களில், இரண்டாவது வரிசையில் நிற்பதான எட்டுத்தொகை நூல்களில் இடம் பெற்றிருக்கும் பாக்களின் நலங்களை, நம்கால மக்களும் உணர்ந்து மகிழ வேண்டும் என்ற அவாவினால் உந்தப் பட்ட காரணத்தால் அவ்வரிசையுள், முதற்கண் வைத்துப் பெருமை செய்யப் பெற்றதான நற்றிணையினை, ''நற்றிணை விருந்து'' என்ற தலைப்பிலும், இரண்டாம் நிலைபெற்ற தாயினும், ''நல்ல குறுந்தொகை'' எனச்சிறக்கப் பெற்றதான குறுந்தொகையினைக், ''குறுந்தொகைக் கோவை'' என்ற தலைப்பிலும், ஆறுவது இடம் அளிக்கப் பெற்றதாயினும். ''கற்றறிந்தார் போற்றும் கலி'' என்ற சிறப்பினைப் பெற்றதான கலித்தொகையினைப், ''பாலைச் செல்வி'', ''குறிஞ்சிக்குமரி'', ''மருத நில மங்கை'', ''முல்லைக்கொடி'', ''நெற்தற் கன்னி'' என்ற ஐந்து தலைப்புக்களிலும், முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விளக்கி வெளியிட்டேன்.

பழந்தமிழர் தொகுத்தளித்த வரிசையிலேயே அவ்வெட்டுத் தொகை நூல் விளக்கங்களையும் அளிக்க வேண்டும் என்

உள்ளம் விரும்பினுலும், சிலபல காரணங்களால், அவ் வரிசை வழிச் செல்ல இயலாமல் போய்விட்டது; இப்போது, அவ்வரிசையுள் நான்காவதாக நிற்பதும், "ஒத்த பதிற்றுப் பத்து" என்ற பாட்டினைப் பெற்றிருப்பதுமாகிய பதிற்றுப் பத்தின் விளக்கத்தினை அளிக்க எண்ணினேன்; ஒவ்வொரு தொகுப்பிலும் பத்துப் பத்துப் பாக்களைக்கொண்ட, பதிற்றுப் பத்தில், முதல் தொகுப்பும், பத்தாம் தொகுப்பும் கிடைத்தில; ஆகவே எஞ்சியுள்ள எட்டு தொகுப்புகளின் விளக்கங்களையே அளிக்க முடிந்தது. அவ்வாறு அளிக்கும் நிலையில், ஒவ்வொரு பத்திலும் உள்ள, பத்துப் பத்துப் பாக்களையும் பயின்று, ஒவ்வொரு பாவிலும், அப்பாவிற்குப் பெருமை சேர்க்கும் சிறுதொடரை, அப்பாட்டின் தலைப்பாகக் கொடுத்து பெருமை செய்துள்ளார்கள் நம் பண்டைத் தமிழ்ச்சான்ருேர்.

அவ்வாறு அவர்கள் சூட்டியிருக்கும் பெயர்களில், ஒவ்வொரு பத்தின் விளக்கத்திற்கு, அப்பத்தின் முதற் பாட்டிற்குச் சூட்டியிருக்கும் பெயரையே, அப்பத்துப் பாட்டின் விளக்கத்திற்குப் பெயர் சூட்டும் முறையினைப் பின்பற்றி, இந்த ஆரும் பத்தின் விளக்கத்திற்குச் "வடுஅடும் நுண்அயிர்" என்ற பெயரைச் சூட்டியுள்ளேன். என் முன்னைய படைப்பு களுக்குத், தமிழகத்துப் பெரியார்களாகிய தாங்கள் காட்டிய பேரன்பையும், பாராட்டையும் இவ்வரிசைக்கும் வழங்கி, மேலும் தமிழ்ப்பணி ஆற்றும் துடிப்புணர்ச்சி, என் உள்ளத்தில் மீண்டும் துளிர்விடத், துணை நிற்க வேண்டுகின்றேன்.

கா. கோவிந்தன்

பொருளடக்கம்

பாடிய புலவர்	1
பாட்டுடைத் தலைவன்	5
பாடற் பண்பு	10
பதிகம்	18
வடுஅடும் நுண்அயிர்	19
சிறுசெங்குவளை	29
குண்டு கண் அகழி	40
நில்லாத்தானை	49
துஞ்சும் பந்தர்	55
வேந்து மெய்ம்மறந்த வாழ்ச்சி	63
சில்வளை விறலி	66
ஏ விளங்கு தடக்கை	71
மாகூர்த் திங்கள்	79
மரம்படு தீங்கனி	86

பாடிய புலவர்
காக்கைப் பாடினியர் நச்செள்ளையார்

பொருளீட்டும் கடமை மேற்கொண்டு, காடும் மலையும் கடந்து தொலைநாடு அடைந்து நெடுநாள் இருந்து பெரும் பொருள் ஈட்டி ஊர்வந்து சேர்ந்த ஓர்இளைஞன், தன் இளம் மனைவி, தான் எதிர்பார்த்து வந்ததுபோல், தன் பிரிவுத் துயரால் பெரிது இளைத்த உடலினளாகாது, பண்டேபோலும் பருத்த உடலினளாகவே இருப்பது கண்டு, இது தோழியின் துணையால் வந்தது எனஎண்ணி, அத்தோழிக்கு நன்றிகூற, அவள் 'அன்ப! உன் ஆருயிர்க்காதலி, யான் எவ்வளவு கூறவும் ஏற்காது இளைத்தேபோயினள்; இறுதியில், இன்று காலை, மனையகம் புகுந்து காக்கை கரையக் கண்டு, உன் வருகை உறுதிஎன உணர்ந்தமையால், மெலிந்த அவள் உடல் பருத்து விட்டது; ஆகவே, அக்காக்கைக்கு நன்றி நவில்க. நள்ளி எனும் வள்ளலுக்குரிய, காட்டில் வாழ்பவராகிய ஆயர்கள்பால் உள்ள, பசுக்கள் பலவும் அளிக்கும் நெய்யில், தொண்டி நகரில் விளைந்த வெண்நெல் அரிசியிட்டு ஆக்கிய சோற்றை, ஏழுபொற்கலங்களில் இட்டுஅளித்தாலும், அது, உன் காதலியின் உடல்மெலிவு தீர்த்த, அந்த உதவிக்கு ஈடாகாது' என உரைத்தாள் என்ற பொருள் அமைய வந்த பாட்டைப் பாடிய சிறப்பால், நச்செள்ளையார் என்ற நயமிகு பெயர்பூண்ட இப்புலவர் நல்லார், காக்கைப் பாடினியார் எனும், பெருமைமிகு சிறப்பினையும் பெற்றுள்ளார்.

''திண்தேர் நள்ளிகானத்து அண்டர்
பல்ஆ பயந்த நெய்யில், தொண்டி
முழுதுடன்விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு

எழுகலத்து ஏந்தினும் சிறிது; என்தோழி
பெருந்தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே''.

இப் பாட்டைப்பாடி, காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் என்ற கவின்மிகு பெயர் பெற்ற இப்புலவர், தளர்ச்சி மிகுதியால் புடைத்துத் தோன்றும் நரம்பும், மெலிந்த உடலும் உடையளாய, தமிழகத்தின் முதுகுடிப் பிறந்த மூதாட்டி ஒருத்தி, காலையில், களம்சென்ற தன்மகனின் வரவை எதிர்நோக்கி, தலைவாயிற்கண் காத்திருக்கும் தன்முன் பலர் வந்து, ''பாட்டி! உன் மகன் பகைவர் படைக்கு அஞ்சிப் புறங்காட்டி ஓடி மறைந்து விட்டான்'' என்று உரைத்தாராக, அது கேட்ட அவள், ஆற்ருெணுத் துயர் கொண்டு, என் மகன் அவ்வாறு தோற்றுப் புறங்காட்டான்; ஒருக்கால் நீங்கள் கூறுவதுபோல் புறங்காட்டியிருப்பனுயின், அவனுக்குப் பால் ஊட்டி வளர்த்த என் உடலைக் கிழித்து எறிவேன்'' எனச் சூளுரைத்து, வாளைக் கையில் கொண்டு களம் புகுந்து, ஆங்கு இறந்து வீழ்ந்து கிடக்கும் வீரர் உடல் களையெல்லாம் புரட்டிப் பார்த்தவாறே சென்றக்கால், ஓரிடத்தே, பல பிணங்களுக்கு அடியில், உடல்சிதைந்து உருக்குலைந்து தானும் ஓர்பிணமாகி வீழ்ந்து கிடக்கும் தன்மகன் உடலைக் கண்டாள்; வீரர் வழிவந்த தன் மகனும் அவ் வீரத்தில் குறையுடையானல்லன் என்பதை அறிந்து, அவள் கொண்ட மகிழ்ச்சி, அவள் அவனைப் பெற்றெடுத்தபோது கொண்ட மகிழ்ச்சியினும் பெரிதாம், என்ற பொருள் அமைந்த புறநானூற்றுப் பாடலைப் பாடிப், பழந்தமிழரின் பேராண்மை யைப் புலப்படுத்தித், தமிழரின் உள்ளத்தில் தலையாய இடம் பெற்றுத் திகழ்கிருர்.

காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் நல்ல புலமை நலம் வாய்க்கப் பெற்றவர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தன்

ஊர் மன்றத்தில், துணங்கை ஆடலைத் தொடங்கி வைக்கும் முகத்தான், ஆடல்மகளிர்க்குத் தலைக்கை தர, அது கண்டு அரசமாதேவி அவன்பால் சினம் கொண்டு தன் கைக்குவளை மலரை அவன் மீது எறிய ஓங்க, அவன் 'அம்மையே! எறியாது அதனை எனக்கு ஈந்தருளுக' எனக் கூறி இருகை விரித்து ஏந்த, அவள் அது செய்யாது சினம்மிகுந்து அவ்விடம் விட்டு அகல, அவன் அவளைத் தடுத்து நிறுத்தித் தான் விரும்பிய அக்குவளை மலரைக் கைக்கொள்ளக் கருதாது போக விடுத்து, விழித்து நின்ற அந்நிகழ்ச்சி ஒன்றையே கொண்டு, ''சேரலாத! உன் கைகள், உன்பால் வந்து பரிசில் வேண்டும் இரவலர்க்கு அளிக்கக் குவிந்து கவிழுமே அல்லது, பிறர்பால் சென்று பொருள் வேண்டி இரந்து மலர்ந்து விரியா என்றும், நீ பகைவர்களின் பற்றற்கரிய பேரரண்களையும் எளிதில் பற்றிக் கொள்ளவல்ல பேராற்றல் படைத்தவன் என்றும், புலவர்கள் புகழ்ந்து பாராட்டக் கேட்டுளேன்; அவ்வுரைகள் பொய்யொடுபட்ட புல்லுரைகளாம் என்பதை, இப்போது கண்டேன்; உன் மனைவிபால் உள்ள சின்னம்சிறுகுவளைமலரைப் பெறவேண்டி, உன் இருகைகளும் மலர்ந்து இரக்கின்றன; மனைவிபால் உள்ள குவளை மலர்மீது உன்மனம் சென்றது; இருகை விரித்து இரந்து கேட்டாய் நீ; கொடுக்க மறுத்து விட்டாள் அவள்; அதைக் கைப்பற்ற முடியவில்லை உன்னால். என்னே உன் கொடை! என்னே உன் கொற்றம்! எனக் கூறி, எள்ளி நகையாடுவார் போல், அவன் கொடைவளம், கொற்றத்திலும், காதற்சிறப்பு ஆகிய பல்வேறு நலங்களையும் ஒரு சேரப் பாராட்டிய புலமை கண்டு, அவரைப் போற்றுவோமாக!

''தடக்கை
இரப்போர்க்குக் கவிதல் அல்லதை, இரைஇய
மலர்பு அறியா எனக் கேட்டிகும் .

நின்
எறியுர் ஒக்கிய சிறுசெங்குவளை
ஈ என இரப்பவும் ஒல்லாள், நீ எமக்கு
யாரையோ எனப் பெயர்வோள் கையதை
கதுமென உருத்தநோக்கமொடு அதுநீ
பாஅல் வல்லாய் ஆயினே; பாஅல்
யாங்கு வல்லுநையே வேந்தர்தம் எயிலே?''

—பதிற்றுப்பத்து : 52 : 9-11; 21-27

குடபுலம் ஆளும் சேரர் குலத்தில் தோன்றிப் பொருள்களை வாரிவாரி வழங்கி, இரவலர்களின் நீண்டகால வறுமைத்துயர் தீர்க்கும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுக்கு, குணதிசையில் தோன்றி, தன் கதிர்களைப் பரப்பி, இரவு நீண்டும் பகல் குறைந்தும் விளங்கும் மாசித் திங்களின், இராப் போதில் வழிநடை மேற்கொள்வாரைத் துன்புறுத்தும், இருளையும் பனியையும் போக்கிப், பேரின்பம் நல்கும், ஞாயிறை உவமை கூறும் அவர் புலமை நயம், அறிந்து இன்புறற்கு உரித்து,

''பகல்நீடாகாது, இரவுப் பொழுது பெருகி,
மாசிநின்ற மாகூர் திங்கள்,
பனிச்சுரம் படரும் பாண்மகன் உவப்ப,
புாய்இருள் நீங்கப் பல்கதிர் பரப்பி
ஞாயிறு குணமுதல் தோன்றியாங்கு
இரவல்மாக்கள் சிறுகுடி பெருக
உலகம் தாங்கிய மேம்படு கற்பின்
வில்லோர் மெய்ம்மறை!''

—பதிற்றுப்பத்து : 59 : 1-9

கடல் சேர்கானல் குடபுலம், ஊதையிற் பனிக்கும் நறவு, பல்ஆவின் நெய்கொள்ளும் அண்டர்வாழும் நள்ளிக்காடு, வெண்ணெல் விளையும், தொண்டி போதும் தமிழகத்துப் பேரூர்களை அறியவும், அவர் துணைபுரிந்துள்ளார்.

பாட்டுடைத் தலைவன்
ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

கண்ணகிக்குச் சிலைகண்ட செங்குட்டுவனையும், அவள் காவியமாம், சிலம்பு அளித்த இளங்கோ அடிகளாரையும் பெற்றெடுத்த பெருமைக்கு, உரியோனாகிய இமயவரம்பன்-நெடுஞ்சேரலாதனின், இளைய மனைவியாகிய, வேளாவிக் கோமான் பதுமன்மகள் ஈன்ற மக்கள் இருவருள், இளையோன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், இவன் சேரநாட்டு அரியணை-யில் அமர்ந்திருந்தபோது, அந்நாட்டின் வட எல்லைக்கு அப்பாற்பட்ட, தண்டாரணியம் என்ற காட்டில் வாழ்ந்திருந்த மறவர் கூட்டம், சேரநாட்டினுள் புகுந்து, அந்நாட்டவரின் ஆட்டு மந்தைகளைக் கவர்ந்து சென்றதாக, அஃதறிந்த இவன், தண்டு கொண்டு தண்டாரணியம் புகுந்து, ஆடு கவர்ந்து வந்தாரைப் பேராடிவென்று, ஆட்டு மந்தைகளை மீட்டுக் கொணர்ந்து, தொண்டி நகரத்தாராகிய அவற்றின் உரியவர்பால் ஒப்படைத்தான். ஆட்சிப் பொறுப்பேற்கும் அவ்விளமைப் பருவத்திலேயே, அவன் ஆற்றிய இவ்வரும் பெரும் செயல்கண்டு, அவனைப் பாராட்டப் புகுந்த அந்நாட்டு ஆன்றோர்கள், அவ்வெற்றிச்செயலை அவன் பெயரோடு இணைத்து, ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என வழங்-கினார்கள்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆற்றலில் சிறந்தவனவன். அவன் சினத்திற்கு ஆளானவர் அனைவரும் அழிந்தே போவர். அவனோடு பகைகொண்ட பின்னரும், உயிர்கொண்டு வாழ்வார் ஒருவரும் இரார்; தன்னால் அழிவுறத் தக்கவர் என, அவனால் அறுதியிடப் பெற்றவர், எத்துணைப் பெரிய பட-

யுடையராயினும், அவன், அவரை அழித்தே தீருவன். எமன் விரித்த வலையில் வீழ்ந்தவர், எவ்வாறு பிழைத்தல் இயலாதோ, அவ்வாறே, களத்தில் அவன் கடுஞ்சினக் கண்வலையுள் அகப்பட்டவரும், உயிர்பிழைத்துப் போதல் இயலாது. பகை அழிப்பதில் அத்துணைவல்லவன் அவன் என்கின்றார், அவனைப் பாடிய புலவர் காக்கைப் பாடினியார்.

> மாற்றரும் சீற்றத்து மாஇரும் கூற்றம்
> வலைவிரித்தன்ன நோக்கலை;
> கடியையால், நெடுந்தகை! செருவத்தானே.
>
> —பதிற்றுப்பத்து : 51 : 35-37

என்ற அவர் கூற்றினைக் காண்க.

அத்துணைப் பெருவீரனாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்பால், பணிபுரிந்த நாற்படையும், அவனைப் போலவே போரில் சிறந்து விளங்கின. ''விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்கும் தன்நாளை எடுத்து'' என வள்ளுவர் போற்றும், வீரர் வழிவந்தவராதலின், அவன் படை வீரர்கள், போரில் பகைவர்களின் வாள், பாய்ந்து பாய்ந்து விளைத்த புண்களால்ஆம் வடுக்கண் விளங்கும் யாக்கையராகவே காணப்படுவர். களம்புகும் அவர்கள், களத்தில் பகைவர் உடலில் பாய்ச்ச உதவும், வேலேந்திச் செல்ல விழைவரே அல்லது, பகைவர் எறியும் வாளாலும் வேலாலும், தம் உடல் ஊறு படாவாறு உதவும் கவசம் அணியக் கருதார்; கவசம் அணியாது கையில் வேல்மட்டும் கொண்டு களம்புகும் அவர்கள், ஆங்குப் படைஅணியின் பின்வரிசையில் நின்று, போரிடவாவது நினைப்பரா என்றால், அதுவும் இல்லை. படையின் முன் வரிசையுள் புகுந்து போரிடவே, அவர்கள் பெரிதும் விரைவர். படைக்கலச்சாலையுள் நுழைந்து படைக்கலம் ஏந்தும் அவர்கள், ''வேந்தன் அளித்த செஞ்சோற்றை, வயிறுபுடைக்க இன்று உண்டோம். நாளை, பகைவர்களின் பற்றற்-

கரிய அரண்களைக் கைப்பற்றி, அவற்றின் அகத்தே இருந்து உண்பதல்லது, வெற்றி காணாது வெளியிற்கிடந்து உண்ணோம்'' எனச் சூளுரைத்தவாறே, படைக்கலம் ஏந்திக் களம் புகுந்து, வஞ்சினம் வழங்கியவாறே, வெற்றிகொள்வர்.

''வாள்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்''

—பதிற்றுப் பத்து: 58: 3

''மெய்புதை அரணம் எண்ணாது, எஃகு சுமந்து
முன்சமத்து எழுதரும் வன்கண் ஆடவர்''

— பதிற்றுப் பத்து: 52: 6-7

''இன்றுஇனிது நுகர்ந்தனம்; ஆயின் நாளை
மண்புனை இஞ்சி மதில் கடத்தல்லது,
உண்குவம் அல்லேம் புகா, எனக்கூறிக்
கண்ணி கண்ணிய, வயவர் பெருமகன்''.

— பதிற்றுப் பத்து: 58: 5-8

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், இவ்வாறு, ஆண்மை ஆற்றல்களில்தான், சிறந்து விளங்கியதோடு, தன்னொத்த பெருவீரர்களையே தன்படைமறவராகவும் பெற்றிருந்ததன் பயனாய், மழவர் என்ற மறமாண்புமிக்க மரபினர், அவன் ஏவல் கேட்டு வாழ்ந்தனர்; குடநாடு அவன் உடைமையாய்த் திகழ்ந்தது.

களம் புகுந்தவழிக் காலன்போலும் கொடியோனாய்க் காட்சிஅளிக்கும் சேரலாதன், நாடு போர்ஒழிந்து அமைதி பெற்றிருக்கும் நாட்களில், இயற்கைக்காட்சிகள் மலிந்த இடம்தேடிச் சென்றும், கூத்தாடும் களம் புகுந்தும் இன்ப வாழ்வு காணத்தவறான். கானற்சோலைகள் மலிந்து கவின்மிக்க

குடபுலம் அடைந்து, நாரைபோலும் கழிதேர் பறவைகள் வந்துதங்கும், புலிநகக் கொன்றைமரங்கள் வளர்ந்தும், நண்டுகள் நடக்கத் தோன்றும் சுவடுகளை, ஊதை தூற்றும் நுண்மணல் மறைப்பதுபோலும், மகிழ்ச்சிமிகு காட்சிகள் நிறைந்தும், இன்பம் தரும் பனந்தோப்பில், பந்தர் அமைத்தும், அப்பந்தரை, நெய்தல் நறவம் போலும் பன்மலர் மாலைகளால் அணிசெய்தும், அதன் கீழ்த் தன்நாட்டு ஆன்றோர் புடைசூழ வீற்றிருந்து, அழகிய இளம் மகளிரின் ஆடல் கண்டும், பாடல் கேட்டும் இன்புற்றிருந்த காட்சியைப், புலவர் காக்கைப்பாடினியர் சிறந்த சொல்லோவியமாக்கி அளித்துள்ளார்.

தன்னூர் மன்றத்தில் ஒருநாள் இரவு. பாண்டில்விளக்கு ஒளிகாட்டத் துணங்கைக் கூத்து நிகழ்வது அறிந்து, அரசமா-தேவியோடு ஆடிடம் அடைந்து, அக்கால மரபுப்படி, ஆடல் மகளிரைத் தழுவித் தலைக்கைதர, அதனால் அரசமாதேவி, ஊடல்கொண்டு தன்னை உறுத்து நோக்கி, அவள் கையிற் பிடித்து வந்த குவளைமலரைத் தன்மீது எறிய ஓங்க, 'எறியாதே என்பால் ஈந்தருள்க' என இருகை விரித்துத் தான் கேட்க, அவள் என்பால் உள்ள அன்பை மறந்த நீ என்னோடு உறவுடையை அல்லை, என்று வெகுண்டுரைத்தவாறே வேறிடம் சென்றுவிட, செய்வதறியாது அவள் செல்வதையே பார்த்திருக்கும் தன்நிலைகண்டு எள்ளிநகையாடிய புலவர் காக்கைப்பாடினியார்க்கு, ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் பரிசாகப் பொன்னணிகள் பல அளித்ததைப் பாராட்டுகிறது பதிற்றுப்பத்துப் பதிகம்.

நாட்டின் நல்வாழ்விற்கு வேண்டும் போர்த்திறத்திலும், வீட்டின் நல்வாழ்விற்கு வேண்டும் அன்புடைமையிலும் சிறந்து விளங்கிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்,

இரவலர்க்குப் பொருள்சுரக்கும் அருள்உடைமையிலும் சிறந்து விளங்கினன். மக்கட்பேரும் மாநிதியை வழங்கிய மாண்புமிகு மனைவியரின், ஊடல் கண்டவழியும் கலங்காத அவன் உள்ளம், இரவலர்களின் வறுமைத்துயர்காட்டும் கண்ணீர்த்துளி கண்டவழி நனிமிகக் கலங்கும். அதனால், இரவலர்கள் தாமே வாராதுபோயினும், அவர்கள் இருக்கும் இடத்திற்குத் தன்பொன்தேரை அனுப்பி, அவர்களைத் தேரேற்றிக் கொண்டுவந்து, அவர் விரும்பவெல்லாம் வழங்கி, மீண்டும் தேரேற்றிக் கொண்டுவிடுவதை வழக்கமாக மேற்கொண்டு வந்தான்.

> "ஒண்ணுதல் மகளிர் துளித்த கண்ணினும்
> இரவலர் புன்கண் அஞ்சும்
> புரவு எதிர்கொள்வனை".
>
> —பதிற்றுப் பத்து: 57: 13-15

> "வாரா ராயினும் இரவலர் வேண்டித்
> தேரில் தந்து அவர்க்கு ஆர்பதம் நல்கும்
> நகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்",
>
> —பதிற்றுப் பத்து: 55: 10-12

அன்பு, அருள், ஆண்மை முதலாம் பல்வேறு பண்புகளையும் ஒருசேரக் கொண்ட உலகாண்ட ஆடுகோட்பாட்டுச்சேரலாதன் முப்பத்தெட்டு ஆண்டுகள் அரியணையில் வீற்றிருந்தான்.

பாடற்பண்பு

காதலித்துக் கடிமணம் கொண்ட மனைவியர்பால் கொண்டுவிடும். மட்டற்ற அன்புப் பெருக்கால், ஆற்ற வேண்டிய கடமையை மறந்து, அவர்பாலே தங்கிவிடுவராயின் அத்தகையார் அரசராயின், பகைவென்றும் நாடுகாத்தும் பெறலாகும் மாண்பினை எய்தல் இயலாது. வணிகராயின், அகநாட்டில் தொலைதூரம் சென்றும், கடல் கடந்தும்சென்று வாணிகம் புரிந்து பெரும்பொருள் ஈட்டும் மாண்பினைப்பெறல் இயலாது. உழவராயின், காலத்தே தொழில் தொடங்கி, நட்டு, இளங்களைகட்டு, எருவு இட்டு நிறை நீர் பாய்ச்சி நன்கு காத்து வருதலால் பெறலாகும் உழவுப் பெரும்பயன் பெற்று மாண்புறுதல் இயலாது. ''மனைவிழைவார் மாண் பயன் எய்தார்'' என்கிறார் திருவள்ளுவர்.

மனைவியர்பால்கொண்ட அன்புப் பெருக்கால் அவரிடத்தே தங்கிவிடுவார் நிலையே இதுவாயின், விறலியர் போலும் ஆடல் மகளிரின் ஆடல்பாடல்களால் ஈர்ப்புண்டு கடமை மறந்து போவார் நிலைகண்டு, உலகம் பழிக்கும் என்பதில் ஐயம்இல்லை. இந்த உலகியல் உண்மையை உணர்ந்தவர், புலவர் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார். ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்பால் அத்தகையதொரு பலவீனம் இருப்பதை உணர்ந்த புலவர், தாமும் ஒருபெண்ணே ஆயினும், தன்இனத்து ஒருத்தியால், அவனுக்கு ஓர் அவக்-கேடு வருவதை அவர் விரும்பவில்லை; அதனால், அவ்வுலகியல் உண்மையை அவனுக்கு உணர்த்த விரும்பினார்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் கண்டு அறிவுரை கூற அவன் தலைநகர் சென்றார்; ஆங்கு அவன் இல்லை; தலைநகரில்

உள்ளார், அவன், அந்நாட்டுக் கடற்கரைக்கண் உள்ளதொரு பூம்பொழிலில் ஓய்வு கொண்டுள்ளான் எனக் கூறினர்; ஆங்கு விரைந்தார் புலவர்; ஆம், அப்பொழிலில், நெய்தல் மலர்களால் அணி செய்யப்பெற்ற அழகிய பந்தலில், அவன் அமர்ந்திருந்தான். அவன் முன் அழகிய விறலி ஒருத்தி ஆடலும், பாடலும் புரிந்து கொண்டிருந்தாள், சேரலாதன் தான்வந்ததையும் உணரமாட்டாநிலேயில், தன்னே மறந்து, விறலியின் ஆடல்பாடல்களில் ஈர்ப்புண்டு கிடந்தான். அந்நிலேயில் தாம் உணர்த்தவந்த உண்மையைத் தெற்றென உணர்த்த முனேந்தால், தன்அறிவுரை, தாம் கருதி வந்த பயனே அளிப்பதற்குப் பதிலாகத், தன்மீது அவன் சினம் கொள்ளவே துணேபுரியும்என்பதை உணர்ந்து, அது, அவன் உள்ளத்துள் புகுந்து உரியபயனே அளிக்கும் ஓர் உத்தியினே மேற்கொண்டார்.

ஆடுகோட்பாட்டுச்சேரலாதனே அணுகி, அவன் தாம் வந்திருப்பதை உணரச் செய்தார்; விறலியின் ஆடல் பாடல்களில் சென்றிருந்த அவன் நாட்டம், மெல்லத் தன்பால் திரும்பி இருப்பதை உணர்ந்த புலவர், அதுவே தருணம் என உணர்ந்து, "ஆடுகோட்பாட்டுச் சேரலாத! இப்பூம்பொழிலில் நெய்தல் மலர்களால் அணி செய்யப்பெற்ற இவ்வழகிய பந்தலில் அமர்ந்து, ஆடும் விறலியின் ஆடல் பாடல்களால் அகமகிழ்ந்திருப்பது, ஆண்டு முழுதும் போர் மேற்கொண்டு, பகைவர் கொண்டுசென்ற உன்நாட்டு ஆனிரைச் செல்வங்களே மீட்டுக் கொணர்ந்த உனக்குத் தேவைதான்; ஆனல், எனக்கோர் அச்சம்; இவ்வாறு, இங்கு நீ மகிழ்ந்திருக்கின்றனே என்பதை அறியும் உன் பகைவர், "நீ மிகவும் மெல்லியன்; விறலியர்பால் ஈடுபாடு கொள்ளும் எளியன்; என எண்ணி விடுவாரோ? அவ்வெண்ண மேலீட்டால், இதுதான் தருணம், உன்னே வெற்றிகொள்ள எனக் கருதிப் படை

யெடுத்து வந்து விடுவரோ என அஞ்சுகிறது என் உள்ளம்'' எனக் கூறி, விறலியரின் ஆடல் பாடல்களில் ஆழ்ந்து போவதால் வரக்கூடிய கேட்டினை உணர்த்துவார்போல், விறலியர்தம் ஆடல் பாடல்களில் ஈடுபட்டுப் போகும் அவன் செயலைக் கண்டித்திருக்கும் முறை பாராட்டற்குரியது.

''குணகுட கடலோடு ஆயிடை மணந்த
பந்தர் அந்தரம் வேய்ந்து,
வன்பிணி அவிழ்ந்த க்ண்போல் நெய்தல்
நனையுறுநறவின் நாடுடன் கமழச்
சுடர்நுதல் மடநோக்கின்
வாணகை இலங்கு எயிற்று
அமிழ்துபொதி துவர்வாய் அசைநடை விறலியர்
பாடல் சான்று நீடினை உறைதலின்,
வெள்வேல் அண்ணல் மெல்லியன் போன்மென
உள்ளுவர் கொல்லோ நின் உணராதோரே?''

—பதிற்றுப்பத்து : 51 : 15-24.

ஆடவரும் மகளிரும் கைகோத்து ஆடும் துணங்கை ஆட்டம் ஒன்றில், ஒரு பெண்ணிற்குக் கைகொடுத்தான் சேரலாதன். இதனை அறிந்த அரசமாதேவி, அவன்மீது சினம்கொண்டு, தன்கையில் பிடித்திருந்த குவளைமலர் மாலையை அவன்மீது எறிய ஓங்கினாள். அது கண்டான் சேரலாதன் குவளைமலர் மென்மை வாய்ந்தது; வீசி எறிந்த அளவே வாடிவிடும் என்ற அதன் இயல்பு உணர்ந்த அவன், அரசமாதேவியை அணுகி, ''தேவி குவளைமல்ரை வீசி எறியாதே; வாடிவிடும்; என் கையில் தந்துவிடு'' எனத் தன் இருகை விரித்து இரந்து நின்றான்; ஆனால் அரசமாதேவியோ, அவன்மீது கொண்ட ஊடல் தணியாமையால், அவள் அவனிடம் தர மறுத்து, ''நீ யாரோ; நான் யாரோ?'' ஆகவே, நின்னிடம் தாரேன்''

னை மறுத்துவிட்டு, அவ்விடம் விட்டு அகன்றுவிட்டான். சேரலாதன் செய்வதறியாது திகைத்து நின்று விட்டான். அப்போது ஆங்கு வந்து சேர்ந்து, சேரலாதன் நிலைகண்ட புலவர், உள்ளுக்குள்ளாகவே மகிழ்ந்தார் ஆயினும், அவனை எள்ளி நகையாடலாயினர்.

''சேரலாத உன் கை, நின்னிடம் வந்து பொருள் வேண்டி நிற்கும் இரவலர்க்கு, அவர் விரும்பும் பொருள் கொடுக்கக் கவிழுமே அல்லது, பிறர்பால் சென்று பொருள் இரக்க மலராது எனப் பிறரெல்லாம் கூறக்கேட்டுள்ளேன்; அதுபொய் என்பதைக் கண்ணெதிர் கண்டுவிட்டேன்; பிறர்பால், அதிலும் உன் மனைவிபால், பொருள் வேண்டி-அதுவும், பொன்னும், நவமணியும அன்று: ஒருசிறு குவளை மலர் வேண்டி, இருகை விரித்து இரந்து நிற்கின்றனை; ஈ என இரத்தல் இழிந்தன்று'' என்ப: அது செய்து இழிந்தவன் ஆகிவிட்டனை:'' எனக்கூறுவதன் மூலம். சேரலாதன், தன் அரசமாதேவிபால் காட்டும் அன்புப் பெருக்கை அறிய வைத்திருக்கும் திறம், அகத்திற்கு இன்பம் அளிக்கவல்ல-தாதல் அறிந்து மகிழ்தற்கு உரித்து;

அம்மட்டோ! புலவர், அவனை ஒரு முறை எள்ளி நகையாடியாது போதாது என உணர்ந்து, மீண்டும் நகை-யாடத் தொடங்கி, ''சேரலாத சிறந்த வீரன் சேரலாதன்: பகைவர்களின் பற்றற்கரிய கோட்டைகளையெல்லாம் வென்று கைக்கொள்ளும் வீறுடையான்'' என்றெல்லாம் நின்னை புகழக் கேட்டுள்ளேன்; அதுபொய் என்பதையும் கண்டு கொண்டேன். உன்மனைவிபால் இருக்கும் ஒரு குவளை மலரைக் கேட்கிறாய் நீ; அவள் அதைத் தர மறுக்கிறாள். மனைவி கையில் உள்ள சிறுகுவளை மலரைக் கைப்பற்ற முடியவில்லை உன்னால்; பகைவர் கோட்டைகளை எவ்வாறு கைப்-பற்றுவாய்?'' எனக்கேட்டு எள்ளி நகையாடினர்.

இவ்வாறு இருமுறை எள்ளி நகையாடியதன் மூலம், இல்லாள்பால் அவன் கொள்ளும் அன்புப்பெருக்கையும், பிறர்க்குக் கொடுத்து வாழ்வதல்லது, பிறர்பால் இரந்துவாழா அவன் கொடைப் பெருமையையும். பகைவர் கோட்டைகளைப் பாழாக்கவல்ல அவன் பேராற்றலையும், ஒருங்கே உணர்த்தியிருக்கும், பதிற்றுப் பத்துப் பாநலம், பாராட்டற்கு உரியது.

''முழாஇமிழ் துணங்கைக்குத் தழூஉப் புணையாகச்
சிலைப்பு வல்லேற்றின் தலைக்கை தந்து நீ,
நளிந்தனை வருதல் உடன்றனள் ஆகி…… … …
நின், எறியர் ஒக்கிய சிறுசெங்குவளை
ஈ என இரப்பவும் ஒல்லாள்; நீ எமக்கு
யாரையோ? எனப் பெயர்வோள் கையதை
கதுமென உருத்த நோக்கமொடு, அது நீ
பாஅல் வல்லாய் ஆயினை; பாஅல்
யாங்கு வல்லுநையோ…………
வேந்தர்தம் எயிலே?''

—பதிற்றுப் பத்து: 52

''பாரி பாரி என்றுபல ஏத்தி, ஒருவன் புகழ்வர் செந்நாப் புலவர்; பாரி ஒருவனும் அல்லன்; மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே'' (புறம்: 107) என்றும், ''அறுகுளத்து உகுத்தும், அகல்வயல் பொழிந்தும் உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும், வரையா மரபின் மாரி போலக், கடாஅ யானைக் கழற்கால் பேகன், கொடைமடம் படுதல் அல்லது படைமடம் படான்'' (புறம்: 142) என்றும் கூறி, வள்ளல்கள் வழங்கும் கொடைவளத்திற்கு, மழையை உவமை காட்டுவது புலவர் வழக்கம்.

அப்புலவர்கள் வழியைப் பின்பற்றி, சேரலாதன் கொடை வளத்திற்கு, மழையை உவமை கொள்வதில் புதுமுறை

ஒன்றை மேற்கொண்டுள்ளார், புலவர் காக்கைப்பாடினியார். கடலில் குடித்த நீரையெல்லாம் உலகம் உய்ய, மழையாகப் பெய்து ஓய்ந்த நிலையில், கடல்நீர் குடித்தபோது பெற்ற கருநிறத்தை இழந்து, மெல்லமெல்ல வெண்ணிறம் பெற்று விரைந்து ஓடி, இறுதியில் மறைந்தே போவது மழையின் இயல்பு. மழையின் இவ்வியல்பினை உணர்ந்திருந்த காரணத்தால், சேரலாதனை, மழையோடு உவமைகாட்ட அஞ்சுவார் போல், ''சேரலாத! வந்து இரப்பார்க்கு எல்லாம், மாரி போல், வரையாது வாரிவாரி வழங்குகின்றனை: ! பெய்து உலகை வாழவைக்கும் கார்முகில் பெய்து தன்தொழில் முடித்த நிலையில், வெண்மையுற்று இல்லாகிப் போவது போல், நீயும், எங்கே, வளன் இழந்து இல்லானாகிப் போய் விடுவையோ என அஞ்சுகிறது என் உள்ளம்; ஆகவே, அந்நிலை நினக்கு உண்டாகாவாறு காக்க இறைஞ்சுகிறது என்நெஞ்சம்'', எனக் கூறியதன் மூலம், சேரலாதன் கொடைவளத்தைப் பாடியதாக அமைந்திருக்கும் நச்செள்ளையார் நாநலம், நயந்து இன்புறற்கு உரியது.

> ''பெய்து புறந்தந்து பொங்கல்ஆடி,
> விண்டுச் சேர்ந்த வெண்மழை போலச்
> சென்று, அருலியரோ பெரும!''

—பதிற்றுப்பத்து: 55:15-17.

தமிழ்நாட்டின் வடஎல்லையாகிய வேங்கடமே, நிலநடுக் கோட்டுக்குச் சற்றே தெற்கில் உள்ளது. ஞாயிறு, உலகைக் கிழக்கு மேற்காகச் சுற்றி வருவது ஒருபால் நிகழ்ந்து கொண்டிருக்க, ஆறுதிங்கள், அக்கோட்டிற்கு வடக்கிலும் தெற்கிலுமாகச் சென்று மீள்வதும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அவ்வகையால், ஆடிமுதல் மார்கழி முடிய, ஞாயிறு வடக்கிலும், தைமுதல், ஆனிமுடிய தெற்கிலும் இருந்து வருகிறான்.

தமிழகம், நிலஉலகில் இடம் பெற்றிருக்கும் நிலையாலும் தைமுதல் ஆனிவரையான காலத்தில் பகற்போது குறைந்து இரவுப்போது மிக்கு இருப்பது இயற்கை நியதி ஆகிவிட்டது. இந்த வான நூல் அறிவினைத், தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறிந்து வைத்துள்ளனர். அதற்-கான அகச்சான்றுகள், சங்கநூல்களில் எண்ணற்றன இருக்கின்றன. அவற்றுள் ஒன்றாம் பெருமையினைப் பதிற்றுப் பத்தும் பெற்று பெருமையுற்றுளது. தைத்திங்களுக்கும், ஆனித்திங்களுக்கும் இடைப்பட்ட திங்கள்களுள் ஒன்றான, மாசித் திங்களில் பகற்போது குறைந்து இருக்கும் என்ற குறிப்பினை பதிற்றுப்பத்துப்பாட்டின் ஓரிரு வரிகள் உணர்த்தி, இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்களின் வான நூல் அறிவிற்குச் சான்று பகர்ந்து கிடப்பது பாராட்டற்கு உரியது.

வேற்றூர் செல்ல விரும்புகின்றான் ஒருவன். செல்ல வேண்டிய இடமோ நெடுந்தொலைவில் இருக்கிறது. மேலும் பகலில் நடத்து சென்றால் வெயிலின் வெப்பம் வாட்டும்; ஆயினும், கருதிச்செல்லும் பணியின் முக்கியத்துவம், அவனைப் போகத் துரத்துகிறது; அதனால்: விடியற்போதிலேயே புறப்பட்டுவிட்டான்; வெளியே வந்தான்; பனி மழைபோல் கொட்டுவது கண்டான்; தாங்கமுடியாக்குளிர்; திறந்த வெளியில் வாழ்ந்து பழகிவிட்ட விலங்குகளும் குளிர்க்-கொடுமையால், உடல் குன்றிக்கிடந்தன. ஆயினும், வினைமுடிக்கவேண்டுமே என்ற வேட்கைமீதூரக், குளிரையும் தாங்கிக்கொண்டு நடக்கின்றான்; அவனுக்கு ஒரு நம்பிக்கை; இரவு கழிந்து, பகல் வந்து விட்டால் குளிரின் கொடுமை குன்றிவிடும் என்ற நம்பிக்கையால் விரைந்து நடக்கின்றான்; ஆனால் அவன் நடக்க, நடக்க, பொழுது புலர்வதாகத் தெரிய வில்லை; அப்போது தான், அவனுக்கு, அது மாசித் திங்கள்;

பகல் குறைந்து இரவு நீளும் காலம் என்ற உணர்வு வந்தது; உள்ளம் கலங்குகிறான்! ஆயினும் சென்று முடிக்க வேண்டிய வினையின் இன்றியமையாமை, தொடங்கின் இடையில் மடங்கல் கூடாது என்ற உள்ளுணர்வுகள் உந்த உறுதி குலையாமல், குளிரின் கொடுமைக்கு அஞ்சி தலைகுனிந்த வாறே செல்கின்றான்; நெடுந்தொலைவு சென்றதும், கழுத்தின் வலிபோகத் தலையைச் சிறிதே நிமிர்த்தினான்; அவன் உள்ளம் இன்பத்தில் ஆழ்ந்து விட்டது! கிழக்கே ஞாயிறு தோன்றி விட்டான்; இருள் அகன்று விட்டது; அவன் வெப்பத்தால் குளிரும் அகன்று விட்டது. அந்நிலையில் அவன் மகிழ்ச்சிக்கு எல்லை காண இயலுமோ? இயலாது; அவ்வழி நடையான் மகிழ்ச்சியை, வறுமையால்வாடி, அது தீர்க்கவல்லானைத் தேடி அலைந்துதிரிந்த இரவலர்கள், தம்போலும், இரவலர்தம் துயர் துடைக்கும் சேரலாதனைக் கண்டவழிக் கொள்ளும் மகிழ்ச்சிக்கு உவமை காட்டியிருக்கும், பத்துப்பாட்டின் பாநலம் பாராட்டற்கு உரியது.

"பகல்நீடாகாது, இரவுப் பொழுதி பெருகி
மாசிநின்ற மாகூர் திங்கள்
பனிச்சுரம் படரும் பாண்மகன் உவப்பப்
புல்லிருள் விடியப் புலம்புசேண் அகலப்
பாயிருள் நீங்கப் பல்கதிர் பரப்பி
ஞாயிறு குணமுதல் தோன்றியாங்கு
இரவல்மாக்கள் சிறுகுடி பெருக
உலகம் தாங்கிய....செல்வர் செல்வ."

—பதிற்றுப்பத்து: 59: 1-7-10.

பதிகம்

''குடக்கோ நெடுஞ்சேரலாதற்கு, வேளள்
ஆவிக்கோமான்தேவி ஈன்ற மகன்,
தண்டா ரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுள் தந்து கொடுப்பித்துப், பார்ப்பார்க்குக்
கபிலையொடு குடநாட்டு ஓர் ஊர் ஈத்து,
வானவரம்பன் எனப் பேர் இனிது விளக்கி,
ஏனை மழவரைச் செருவில் சுருக்கி,
மன்னரை ஓட்டிக்,
குழவி கொள்வாரின் குடிபுறம் தந்து
நாடல் சான்ற நயன் உடை நெஞ்சின்
ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை
யாத்த செய்யுள் அடங்கிய கொள்கைக்
காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்
பாடினார் பத்துப் பாட்டு.

அவைதாம், வடுவடுநுண்அயிர், சிறுசெங்குவளை, குண்டுகண் அகழி, நில்லாத்தானை, துஞ்சும் பந்தர், வேந்து மெய்ம் மறந்த வாழ்ச்சி, சில்வளைவிறலி, எவிளங்கு தடக்கை-மாகூர் திங்கள், மரம்படு தீங்கனி. இவை பாட்டின் பதிகம்.

பாடிப் பெற்ற பரிசில்; ''கலன் அணிக'' என்று அவர்க்கு ஒன்பது காப்பொன்னும், நூறுயிரம் காணமும் கொடுத்துத் தன் பக்கத்துக் கொண்டான் அக்கோ.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் முப்பத்தெட்டி யாண்டு வீற்றிருந்தான்.

1. வடு அடும் நுண் அயிர்

ஆடுகோட்பாட்டுச்சேரலாதன், பகைத்து எதிர்ப்பவர்பால் கடுஞ்சினம்கொண்டு, பெரும்படைத்துணையோடு போர்க் களம் புகுந்து, அப்பகைவரைத் தப்பாது அழிக்கவல்ல தறுகணாண்மையில் தனக்கு நிகர்தானே எனினும், அவன், எப்பொழுதும் போர்நினைவாகவே இருப்பவன் அல்லன். போர் நேர்ந்தபோது, அதை திறம்பட முடிக்கவல்ல அவன், போர்ஒழிந்து அமைதி நிலவும் காலத்திலும், அந்நினைவே யுடையவனாய் இராது. அவ்வுணர்வு அறவே இல்லையாக, எவர்க்கும் எளியனாகி, இயற்கைக்காட்சிகள் மலிந்து, இன்பம் நல்கும் இடம் நாடிச்சென்று, ஆடல்பாடல்களில் அகம் களித்திருக்கும் இயல்புடையவனும் ஆவன். அதனால், தனக்குப் பகையாய் இருந்தாரையெல்லாம் வென்று பணி-கொண்டு, நாட்டைப் பகைவர்பயம் அற்றதாக ஆக்கிவிட்ட உள்ள நிறைவுவரப்பெற்ற அவன், அமைதி நிலவும் இடம் அடைந்து, இயற்கைநலம் துய்க்கும் இன்ப வேட்கைக்கு அடிமைப்பட்டவனாகி, அதற்கு ஏற்புடைய இடம், குடநாடாதல் அறிந்து, ஒருமுறை, ஆங்குச் சென்றிருந்தான்.

ஓயாது ஆடி அசைந்து கொண்டிருப்பதையே தன் இயல்பாகக் கொண்டதும், கரைகாணமாட்டாப் பரப்புடை-யதுமாகிய நீரும், கலங்கிச் சேறுபடுமாறு, காற்று கடுமையாக வீச, மலைபோல் எழுந்துஎழுந்து அடங்கும் பேரலைகளின் ஓவெனும் ஒலி ஓயாது ஒலிக்கும் கடலைச்சார்ந்த, கானற்சோலை களால் கவின்பெற்ற குடபுலம் அடைந்த சேரலாதன், நீர் நிறைந்த பள்ளங்களில் உள்ள மீன்களாகிய உணவினைப், பகலெல்லாம் தேடித்தின்று அலையும் நாரைகள், மாலை

வந்துற்றதும் சென்று தங்கும் குடிலாக நின்று, பயன்தருவனவும், கொத்துக்கொத்தாகக் காட்சியளிக்கும் மலர்களையும், கரிய பெரிய கிளைகளையும் உடையனவுமாகிய, புலிநகக், கொன்றை மரங்கள் மலிந்ததும், மலர்களின் மதுவுண்டு மகிழும் வண்டுக்கூட்டங்கள் மொய்க்கும் மாண்புடையதும், அடம்பக்கொடிகள் அடர்ந்து படர்ந்திருக்கும் கரைகளில், நண்டுகள் மேய்தலால் உண்டாம் அடிச்சுவடுகள் மறையுமாறு, நுண்மணலை, ஊதைக்காற்று ஓயாது தூவும் இடமாயதுமாகிய, அழகிய பனஞ்சோலையே, இருந்துஇன்பம்துய்த்ததற்கு ஏற்புடைய இடமாம் எனத்தேர்ந்தான். உடனே, அப்பொழிலிடையே, ஆடுகோட்பாட்டுச்சேரலாதனும், அவனைத் தொடர்ந்து வரும் அமைச்சர் முதலாம் அரசியற்பணியாளர் களும் ஒருங்கே இருத்தற்கு ஏற்ற பெரிய பந்தல் ஒன்று அமைக்கப்பெற்று, நறவம், நெய்தல், நாகு எனும் பல்வேறு மலர்களால் அழகு செய்யப்பெற்றது. வடஇமயமும், தென்குமரியும், கீழ்க்கடலும், மேல்கடலுமாகிய அந்நான்கு எல்லைகட்கும் நடுவணதாய், அவன் ஆட்சிக்கீழ் உட்பட்ட நாட்டைச் சேர்ந்த நல்லோர் அனைவரும், ஒருசேரவந்து வீற்றிருக்கும் அப்பந்தற்கண், அவரிடையே அமர்ந்திருந்து, அழகின் திருவுருமாம் என மதிக்கத்தக்க மாண்புமிகு ஆடல்மகளிரின் ஆடல்கண்டும், அமிழ்தம் போல் இனிக்கும் அவர்பாடல் கேட்டும் களித்திருந்தான் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனோடு ஆங்குச் சென்று, அவ்வின்பநிகழ்ச்சிகளில் பங்குகொண்டு களித்த புலவர், காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் உள்ளத்தில், ஐயத் தொடுபட்ட ஓர் அச்சம் குடிகொண்டது. ஆடுகோட்பாட்டுச்சேரலாதனோடு அணுக்கமாய் இருந்து பழகியறியாப்பிழையால், அவன் இயல்பை உள்ளவாறு உணரமாட்டாதார், அவன்மேற்கொண்டிருக்கும் இவ்வின்ப நாட்டத்தைக் கண்டு,

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், இன்பத்துறையில் எளியன் போலும் என எண்ணி விடுவரோ? அவ்வாறு எண்ணியதின் பயனாய், அவனை வெற்றிக்கொள்வது எளிது எனக்கொண்டு, அவன்மீது போர்தொடுத்து வந்து அழிந்து போவரோ என்றெல்லாம் எண்ணத்தலைபட்டார். அதனால் அதுபோல் எதுவும் நிகழ்ந்துவிடாமைகுறித்து, அவர்க்கு உண்மை உரைத்து விழிப்பூட்ட விரும்பினார்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் பகைவர்க்கு அறிவுரை கூறக்கருதிய புலவர் நச்செள்ளையார், அதே நிலையில் மற்றொன்றும் கருதினார். ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் மேற்கொண்டு வந்திருக்கும் இவ்வின்ப நுகர்ச்சி, ஓயாது போரே மேற்கொண்டு அலையும் அரசர்க்கு, அவ்வப்போது வேண்டுவதொன்றே என்றாலும், அவர்கள் அதிலேயே ஆழ்ந்துவிடுவாராயின், அழிவு, அவரைத் தேடிவந்து அடைந்துவிடுமாதலின், அவர்கள், அத்துறையில் அளவிறந்து போகாதபடிப் பார்த்துக்கொள்ளவும், அளவிறந்து போகும் நிலையில், அதனால் ஆகும்கேட்டினை எடுத்துக்கூறித் திருத்தவும், அவர்நலம் கருதும் ஆன்றோர் கடமைப்பட்டவராவர். ''இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக, தாம்தம் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து'' என்பது வள்ளுவர் வாக்கு. நாடாளும் இந்நெறி முறையை, நச்செள்ளையார் நன்கு உணர்ந்திருந்தமையால், இன்பத்துறையில் அளவிற்கு மீறிய ஆர்வம் கொண்டு, அமர்த்துறையை அறவே மறந்து விடுவது அறிவுடைமையாகாது என்பதை எடுத்துக்கூறி, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை விழிப்படையப்பண்ணுவதும் தம் கடமையாம் என உணர்ந்தார்.

அக்கடமையுணர்வு வரப்பெற்றமையால், "மழை தரும் கார்மேகங்கள் வந்து தங்குமளவு உயர்ந்த பெருமலைகளை

வாழிடமாகக் கொண்டுள்ளோம்; தீண்டினவர் உயிர்போக்கும் கொடிய நஞ்சுடையோராம்; பகைகண்டு பொருக் கடுஞ்சினம் உடையோம் என்ற உணர்வால் செருக்கித் திரியும் அரவுகள் போல், பெருநிலம்முழுதாளும் உரிமையுடையோம்; எம்மொடு பகைகொள்வாரைப் பாழாக்கும் பெரிய படையுடையேம் என்ற உணர்வால் செருக்குற்று வீற்றிருக்கும் வேந்தர்களை, அரவுகள் தம்வாழிடம் விட்டு வெளிப்படா நிலையில் உள்ளனவாகவும், அவற்றைத், தன்முழக்கொலி ஒன்றினா-லேயே அஞ்சி நடுங்கப்பண்ணி அழித்தொழிக்கும் இடியேறு-போல், அவ்வேந்தர்கள் அவரவர்களின் அரணகத்தே அடங்கியிருக்கும் நிலையிலேயே, உன் போர்முரசின் ஒலி கேட்டே நடுங்கி நிலைகுலையப் பண்ணும் பேராற்றல் வாய்ந்தவன் நீ'' என்றும்,

''தம் எதிர் நின்று போர்புரியும் பேரரசர்கள் ஊர்ந்து வரும் போர்க்களிறுகளின் பொன் தொடி அணிந்த கோடுகளை வெட்டி வீழ்த்துவதே குறியாகக் கொண்டு, வென்று வாகை சூடும் வாள் ஏந்துவதால் விழுச்சிறப்புடையாரையே படை வீரர்களாகத் தேர்ந்து பணிகொள்ளும் போர் உணர்வில் கைவரப் பெற்றவன் நீ'' என்றும்,

''சேரர் படைமறவர் என்ற சிறப்பினை உணர்த்துவான் வேண்டி, தம் தலையில் சூடிக் கொண்டனவும், பகைவர் உடல் களில் தாம் உண்டாக்கிய புண்களிலிருந்து பீறிட்டுப் புறப்-படும் குருதி படிந்து படிந்து, வெண்ணிறம் இழந்து செந்நிறம் பெற்றனவுமாகிய சேரர் தம் பனந்தோட்டுக்கண்ணிகளைப், பிணம் தின்னப் போர்க்களத்தே வந்து குவிந்து கிடக்கும், பருந்து கழுகு முதலாம் பறவைக் கூட்டம், ஊன்துண்டங்கள் என்று கருதிக் கவர்ந்து செல்லுமளவு, உன் படைவீரர்கள், அளவின்றி எடுத்து எறிந்த படைக்கலங்களால் பகைவர்களின்

போர்முழவுகள் தோல் கிழிந்துபோக, அவற்றை அடித்து முழக்கும் பணிமேற்கொண்ட ஏவல் இளையர் அது செய்ய-மாட்டாமையால் சிந்தை வருந்தும் செருக்களம் சென்று, பகைவர் உயிர் போக்கும் நிலையில், தான் கைப்பற்றக் கருதிய உயிரைத் தப்பாது கவரவல்ல கூற்றுவனுக்கு நிகரான கொடுமையுடையவன் நீ'' என்றும் கூறி, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை முன்னிலைப்படுத்திப் பாராட்டுவார்போல், அவன் பேராற்றலைப் பகைவர்க்கு உணர்த்திப், போர் நிகழாமைக்கு வழிவகுக்கும் பணியோடு, இன்பநுகர் நிலையிலேயே என்றும் இருந்து விடுதல் கூடாது; பெரும்படைத் துணையோடு, பேராண்மை நிலையினையும் போற்றிப் பேணுதல் வேண்டும் என, அவனுக்கு அறம் உரைக்கும் பணியினையும் அழகுற செய்து முடித்தார் புலவர் நச்செள்ளையார்.

நுண் மணல் படிவதினாலேயே எளிதில் மறையக் கூடிய, நண்டு நடந்த சுவட்டினை, ''மாறுதே நாவினல் சுட்டவடு'' என்பது போல், என்றும் மறைய இயல்புடைய சுவடுகளையே குறிக்கத்தக்கதான வடு என்ற பெயரால் வழங்கிய வனப்-புடைமையாலும், நண்டு நடந்த சுவடு எளிதில் மறையக் கூடியதே எனினும், மறையா வடுஎனப் பெயரிட்டு அழைத்தற் கேற்ப, அதை மறைக்கும் வினையையும், அரிது முயன்ற வழியே, பயன்தருவதாகிய அடுதல் எனும் வினையால் கூறிய நயமுடைமையாலும், வடு என்றும், அடுதல் என்றும் வழங்கி அருமையுடைத்து என்பதுபோல் காட்டிய ஒரு தொழிலைச் செய்து முடிக்கும் வினைமுதலைக் கூறுங்கால் காற்றடிக்கக் கலைந்து விடும் மணல் என்றும், அதிலும் நுண்மணல் என்றும் கூறிய மாண்புடைமையாலும், இப்பாட்டிற்கு இச்சொல்லாட்சி நலம் செறிந்த, **வடு அடும் நுண் அயிர்** என்பதே பெயராய் அமைந்தது நனிமிகப் பொருத்தம் உடைத்து.

51. ''துளங்குநீர் வியலகம் கலங்கக், கால்பொர,
விளங்கிடும் புணரி உருமென முழங்கும்
கடல்சேர் கானல் குடபுலம் முன்னிக்
கூவல் துழந்த தடந்தாள் நாரை
குவிஇணர் ஞாழல் மாச்சினைச் சேக்கும்,
வண்டு இறைகொண்ட தண்கடல் பரப்பின்
அடும்புஅமல் அடைகரை அலவன் ஆடிய
வடுஅடும் நுண்அயிர் ஊதை உஞற்றும்
தூவிரும் போந்தைப் பொழில்அணிப் பொலிதந்து,
இயலினள் ஒல்கினள் ஆடு மடமகள்
வெறியுறு நுடக்கம்போலத் தோன்றிப்,
பெருமலை வயின்வயின் விலங்கும் அருமணி
அரவழங்கும் பெரும் தெய்வத்து,
வளைஞரலும் பனிப் பௌவத்துக்
குணகுட கடலோடு ஆயிடை மணந்த
பந்தர் அந்தரம் வேய்ந்து
வண்பிணி அவிழ்ந்த கண்போல் நெய்தல்,
நனையுறு நறவின் நாகுடன் கமழச்,
சுடர்நுதல், மடநோக்கின்,
வாள்நகை, இலங்கெயிற்று,
அமிழ்துபொதி துவர்வாய் அசைநடை விறலியர்
பாடல்சான்று நீடினை உறைதலின்
வெள்வேல் அண்ணல் மெல்லியன் போன்மென
உள்ளுவர் கொல்லோ நின் உணராதோரே?
மழை தவழும் பெருங்குன்றத்துச்,
செயிருடைய அரவு எறிந்து
கடுஞ்சினத்த மிடல் தபுக்கும்
பெஞ்சினப் புயலேறு அனையை;
தாங்குநர்,
தடக்கையானைத் தொடிக்கோடு துமிக்கும்

எஃகுடை வாய்த்தர் நின்படைவழி வாழ்நர்,
மறங்கெழு போந்தை வெண்தோடு புனைந்து
நிறம்பெயர் கண்ணிப் பருந்தூறு அளப்பத்
தூக்கணை கிழித்த மாக்கண் தண்ணுமை
கைவல் இளையர் கையலை அழுங்க,
மாற்றரும் சீற்றத்து மாயிரும் கூற்றம்
வலைவிரித்தன்ன நோக்கலை;
கடியையால், நெடுந்தகை! செருவத்தேனே''.

துறை: தும்பை அரவம்
வண்ணம்: ஒழுகுவண்ணம்
தூக்கு: செந்தூக்கு
பெயர்: வடு அடும் நுண் அயிர்

நெடுந்தகை! குடபுலம் முன்னி, போந்தைப்பொழில் அணிப்பொலி தந்து, ஆயிடை மணந்த பந்தர் வேய்ந்து, நெய்தல் கமழ விறலியர் பாடல் சான்று உறைதலின், அண்ணல் மெல்லியன் போன்ம் என உள்ளுவர் கொல்லோ உணராதோர்? ஏறனையை; எஃகுடை வலத்தர் நின்படைவழி வாழ்நர்; கூற்றம் வலைவிரித்தன்ன நோக்கலை; செருவத்தான் கடியையால் எனக்கூட்டிப் பொருள் கொள்க.

இதன் பொருள்: நெடுந்தகை = பெரிய தகுதிப் பாடுடையவனே! துளங்குநீர் வியலகம் கலங்கக் கால் பொர = அசையும் நீரால் நிரம்பிய பெரிய நீர்ப்பரப்பும் கலங்குமாறு காற்று வீசுவதால். விளங்கு இரும்புணரி உரும் எனமுழங்கும் = வெண்தலைகாட்டி விளக்கமுறத் தோன்றும் பெரிய அலைகள் இடிபோல முழங்கும். கடல்சேர்கானல் குடபுலம் முன்னி = கடலைச்சார்ந்த கானற்சோலைகள் மலிந்த குடபுலம் நோக்கிச்சென்று. கூவல் துழந்த தடந்தாள் நாரை = நீர்

நிறைந்த பள்ளங்களில் இரைதேடி அலைந்த பெரிய கால்களை யுடைய நாரைகள். குவியினர் ஞாழல் மாச்சினை சேக்கும் = கொத்துக்கொத்தான மலர்களைக்கொண்ட புலிநகக்கொன்றை மரத்தின் கரியபெரிய கிளைகளில் சென்று தங்கும். வண்டு இறைகொண்ட தண்கடல் பரப்பின் = வண்டுகள் மொய்க்கும் குளிர்ந்த கடற்பரப்பின்கண். அடும்புஅமல் அடைகரை = அடம்பங்கொடிகள் அடர்ந்தகரையில். அலவன் ஆடிய = நண்டுகள் நடந்ததால் உண்டாகும். வடுஅடும் நுண்அயிர்= அடிச்சுவட்டினை மறைக்கும் நுண்மணலை. ஊதை உஞற்றும் = ஊதைக் காற்று தூவும். தூஇரும் போந்தைப் பொழில் அணிதந்து = தூயபெரிய பனஞ்சோலையில் அழகுறத் தங்கி யிருந்து. இயலினள் ஒல்கினள் ஆடும் மடமகள் வெறியுறு நுடக்கம் போல = நடந்தும் நடம்புரிந்தும் ஆடல் இயற்றும் தேவராட்டி, வெறியேறப்பெற்று ஆடும் வெறியாட்டம்போல. தோன்றி = வெளிப்பட்டு. வயின்வயின் விளங்கும் அருமணி அரவு வழங்கும் = ஆங்காங்கே கிடந்து ஒளிவிடும் மாணிக்க மணிகளையுடையவாகிய அரவுகள் உலாவும். பெருமலை பெருந்தெய்வத்து = பெரிய மலையாகிய கண்ணுதற் பெருங் கடவுள் வீற்றிருக்கும் கயிலைமலையும். வளைநரலும் பனிப் பௌவத்து = சங்குகள் முழங்கும் குளிர்ந்த குமரிக்கடலும். குணகுடகடலோடு ஆயிடை மணந்த = குணகடலும் குட-கடலும் ஆகிய அந்நான்கு எல்லைக்கு உட்பட்ட உயர்ந்தோர் அனைவரும் ஒருசேரக் குழுமி இருக்கும். பந்தர் அந்தரம் வேய்ந்து = பந்தலின் மேற்புறம் அணிசெய்யப் பெற்றமை-யால் வண்பிணி அவிழ்ந்த கண்போல் நெய்தல் = பருத்த அரும்புகள் வாய்திறந்து மலர்ந்த, மகளிர் கண்போலும் நெய்தல் மலர்கள். நனையுறுநறவின் நாகுடன் கமழ = தேன் நிறைந்த நறவ மலர்களோடும் புன்னை மலர்களோடும் கலந்து மணம்வீச. சுடர்நுதல் = ஒளிவீசும் நெற்றியும். மடநோக்கின் = மான்விழிபோலும் மடப்பம் நிறைந்த கண்களும். வாள்

நகை இலங்கு எயிற்று = வெள்ளிய ஒளி காட்டும் வெண்பற்களும். அமிழ்து பொதி துவர்வாய் = அமிழ்தம் போல் இனிக்கும் குரல் பொதிந்த, பவளம் போல் சிவந்த வாயும். அசைநடை = அன்னம் போல் அசைந்தாடும் நடையும் போலும் பலநலமும் ஒருங்கே பொருந்திய. விறலியர் பாடல் சான்று நீடினை உறைதலின் = ஆடல் மகளிரின் பாடல் இன்பத்தை, அளவின்றிநுகர்ந்து, ஆண்டே நெடிது இருந்து விடுவதால். நின் உணராதோர் = உன் இயல்பை முற்றும் உணராதவர். வெள்வேல் அண்ணல்=வெள்ளிய வேலேந்திய தலைமைச் சிறப்பமைந்த சேரலாதன். மெல்லியன் போன்ம் = இன்பத்துறையில் எளியன்போலும். என உள்ளுவர் கொல்லோ - என்று எண்ணி விடுவார்களோ? மழைதவழும் பெருங்குன்றத்து = மழைமேகங்கள் வந்து படியும் பெரிய மலைகளில் வாழும். செயிர் உடைய அரவு எறிந்து = நஞ்சுடைய நாகங்களை நடுங்கப்பண்ணி. கடுஞ்சினத்த மிடல் தபுக்கும் = கொடிய சினம் உடையவாகிய அவற்றின் வலியை அழிக்கவல்ல பெருஞ்சினப் புயலேறு அனையை = பேரொலி எழுப்பும் பெரிய இடியேற்றினை ஒப்பாய். நின்படைவழி வாழ்நர் = உன்படையில் பணிபுரிவதால் உயிர்வாழும் உன் படை மறவர். தாங்குநர் = எதிர் நின்று போரிடும் பகைவர்களின். தடக்கையானை தொடிக் கோடு துமிக்கும் = நீண்ட கையினை உடைய போர் யானையின் தொடியணிந்த கோடுகளை அழிக்கவல்ல. எஃகுடை வலத்தர் = படைக்கலங்களையே தேர்ந்து ஏந்தும் தறுகணாளராவர். மறங்கெழு போந்தை வெண்தோடு புனைத்து = தன்னை அணிவார் உள்ளத்தில் மறவுணர்வை மிகுவிக்கும் இயல்புடையதான பனையின் வெள்ளிய ஓலையால் புனையப்பெற்று. நிறம் பெயர் கண்ணி= பகைவரின் குருதிக்கறை படிந்து தன் வெண்ணிறம் இழந்து செந்நிறம் பெற்ற தலைமாலையினை. பருந்து ஊறு அளப்ப = ஊன்துண்டம் எனப்பிறழக் கொண்ட பருந்து, அதை

அணுகிக் கவர்ந்து செல்லற்காம் காலத்தை எதிர்நோக்கி யிருக்குமாறு. தூக்கணை = எடுத்து மேன்மேலும் எறிந்த கணைகள் கிழிந்த மாக்கண் தண்ணுமை = தோலைக்கிழித்து விட்ட கரியகண்ணையுடைய போர்முரசு. கைவல் இளையர் கையளை அழுங்க = அடித்து முழக்கும் இளையோர்களால் தொழிற்படாது கிடந்து அழியுமாறு. மாற்றரும் சீற்றத்து மாயிரும் கூற்றம் = தணித்தற்கு அரிய கடுஞ்சினம் உடைய பெரிய கூற்றுவன். வலைவிரித்தன்ன நோக்கலை = தான் விரித்த வலையில் தான் கவரக்கருதிய உயிரைத் தப்பாதே கவரவல்ல கடுநோக்குடையனுதல் போல், செற்றவர் உயிர் செகுக்கும் சினநோக்கு உடையாய். ஆகவே செருவத்தான் கடியை = ஈண்டு இத்துணை எளியனுகத் தோன்றும் நீ. போர்க்களத்தில் மிகவும் கொடியன் ஆகுவை.

2. சிறுசெங்குவளை

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், சேரநாட்டு அரியணையில் வீற்றிருந்த அதே காலத்தில், தமிழகத்துப் பிறபகுதிகளில் வாழ்ந்து வந்த சில வேந்தர்கள், இவ்வையகத்தில் தம் பெருமையும் பேராண்மையும் மட்டுமே விளங்க வேண்டும். அவ்வேட்கை நிறைவேற வேண்டுமாயின், தம் கடுஞ் சினத்தால் பிறஅரசுகள் கெட்டழிதல் வேண்டும் என்ற பேராசைக்கு அடிமையாயினர். அவ்வாசைக்கு அடிமைப் பட்ட அவர்கள், பரந்து அகன்ற வான்வெளியில், தான் மட்டுமே ஒளிவிட்டு உலாவருதல் வேண்டிக், காயும் கதிர் களைப் பரப்பிவரும் செஞ்ஞாயிற்றின் வடிவத்தையும் வண்ணத் தையும் கொண்ட, தம்வெண்கொற்றக்குடை வழியே தம் ஆசையை வெளிப்படுத்தியதோடு அமையாது, அதை நிறைவேற்றிக் கொள்வான் வேண்டி, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனோடு பகை மேற்கொண்டனர். அவர் செயல் கண்டு பொறாத சேரலாதனும் அவர்மீது போர் தொடுத்து விட்டான். உடனே வெற்றிக்கொடியேந்தி விரையும் விழுச் சிறப்பு வாய்ந்த தன் வேழப்படையும், மணிகள் ஒலிக்கும் மாண்புமிக்க மலைநிகர் தேர்ப்படையும், பெறுதற்கரிய பெரும் பொருள்களைப் பிறநாடுகளிலிருந்து கொணரும் பணிமேற் கொண்டு கடலோடும் கலங்கள், திசைதிரிந்து செல்வதுபோல், வேறு வேறு வழிமேற்கொண்டு விரைந்து சென்று அடையுமாறு முதற்கண்போக்கி, அவற்றின்பின், இடக் கையில் கேடகமும், வலக்கையில், வாள் வேல் போலும் படைக்கலமும் ஏந்திச் செல்வதல்லது, தம் மெய்யைக்காக்கும் கவசம் வேண்டுமே என்ற கவலை கொள்ளாது, படையின் முன் வரிசைக்கண் புகுந்து, போரிடவல்ல பெருவீரர்களைப்

போக்கி, இறுதியாக, அவர்களைத் தொடர்ந்து தானும் களம் அடைந்தான் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். வீரர்கள் தாம் அணிந்து வந்த தும்பைமலர்க் கண்ணிகள், புலவர் பாடும் புகழ்பெறும் வண்ணம் அரிய போர் நிகழ்த்த, பகைவர் படையைச் சேர்ந்த வீரர்கள், உயிரிழந்து போவதோடு, அழியுநர் புறக்கொடை அயில்வேல் ஒச்சாத், தன் அறவழிப் போர் நிகழ்ச்சியால், அவர்கள் புறப்புண்பெருது, முகத்திலும் மார்பிலுமே புண்பெற்றுப் புத்தேள் உலகம் அடையுமாறு, அவனும் அரிய போர் ஆற்றியதன் பயனாய்க், களவெற்றி கொண்டு, அவ்வேந்தர்க்குரிய அரண்கள் பலவற்றைத் தன் உடைமையாக்கிக் கொண்டான்.

வேந்தர் பலரைக் கொன்றும், அவர் அரண்களைக் கைக்கொண்டும் வெற்றிப்புகழ் நாட்டிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், தன் நாட்டகத்தே அவ்வெற்றிகள் குறித்து எடுத்த விழாக்களின் முடிவில், ஆடியும் பாடியும் தன் புகழ் பரப்பும் பாணர் கூத்தர்போலும் இரவலர் பலர்க்கும், அப்போர்களில் தான்பெற்ற பொருள்களை வாரி வாரி வழங்கி வளமார் புகழ்பெருக்கி வாழ்ந்திருந்தான்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் துணைவேண்டாப் போர்ச் சிறப்பினையும், கொடுத்துக் குடிபுரக்கும் கொடை வளத்தையும் கண்டு பாராட்டி, அவன் அரசவைக்கண் வீற்றிருந்தபுலவர் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார், ஒருமுறை அவனோடு சென்று அவன் கலந்த துளங்கைக் கூத்து ஒன்னைக் காண நேர்ந்தது.

துணங்கைக் கூத்து நிகழ்வதற்காகத் தேர்ந்துகொண்ட ஊர் மன்றில், ஏற்றி வைத்திருந்த பாண்டில் விளக்கிலிருந்து புறப்பட்ட ஒளி, அம்மன்றெங்கும் பரவி, அம்மன்றத்தை

மங்கல இடமாக மாற்றித் திகழ்ந்தது. அரசமாதேவி உடன்வர, ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆடிடம்புகுந்ததும், முழவு முதலாம் இசைக்கருவிகள் பலவும் ஒருசேர முழங்க, துணங்கை தொடங்கு நிலைபெற்றது. உடனே, அக்கால மரபுப்படியும், அவ்வாடல் முறைக்கு ஏற்பவும், சேரலாதன், துள்ளி எழும் கொல்லேறுபோல் நடந்து சென்று, ஆடல் மகளிர்க்கு ஆடல் துணையாக, அவர் கையோடு தன்கையைக் கோத்துக் கொடுத்து, அவ்வாடல் நிகழ்ச்சியில் தன்நெஞ்சு நெகிழ்ந்தவனாகித், துணங்கைக் கூத்தினை தொடங்கி வைத்தான்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், ஆடல் மகளிரொடு கைகோத்து ஆடல் தொடங்கியதைக் கண்டாள் அரசமாதேவி. மகளிருள், தன்னை மணங்கொண்ட மனைவியைத் தவிர்த்துப் பிறமகளிரைக் கனவிலும் தொடுதல் கூடாது; தன் கணவன், எனக்கருதும் கற்புநெறி கற்றவள் அரசமாதேவி. அதனால், ஆடுகோட்பாட்டுச்சேரலாதன், ஆடல் மகளிரோடு கைகோத்து ஆடக் கண்டதும், அது மரபு என்பதையும் மறந்து, கடுஞ்சினம் கொண்டாள். மலர்மாலை அடைய, அழகுத்தேமல் அணிசெய்ய, தண்ணெனக் குளிர்ந்த ஈர்இமைகட்கும் இடைப்பட்ட கண்கள், எக்காலமும் அருள் ஒளியேவீச, அரிவையர்க்கு உரிய அறிவு நலம் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற அரசமாதேவி உள்ளத்தில், அந்நிகழ்ச்சியால் ஊடல் உருப்பெற்று விடவே, மெல்லிய மலரின் அகவிதழைஒக்கும், அழகும் மென்மையும் வாய்ந்த, தன்கால்களில் அணிந்திருந்த கிண்கிணிச்சிலம்புகள் கலீர்கலீர் எனக் கடுமையாக ஒலிக்குமாறு, இருந்த இடம்விட்டு விரைந்து எழுந்து, கரைகொல்லும் பெரிய வெள்ளத்தில் அகப்பட்ட மெல்லிய இளந்தளிர்போம் உடல்நடுங்க நின்று, சேரலாதனைச் செறுத்து நோக்கித், தன்கையில் தாங்கி வந்த சிறிய செங்குவளை மலரைச், சினம் மிகுதியால் அவன்மீது எறியக்

கையை ஓங்கினாள். அரசமாதேவியின், அச்சின நிலை கண்ட சேரலாதன், தன் உள்ளத்தில் தவறு இல்லையாகவும், மரபு கருதி, மன்னன் என்ற முறையால் மேற்கொண்ட செயலுக்கும் மாசு கற்பிக்கும் மனைவியைத் தண்டிக்க வேண்டுவதே முறையாகவும், மனைவிபால் கொண்ட மாறா அன்புடைமை-யால், அது செய்ய மாட்டாது, அவள் சினத்தை தவிர்ப்பான் வேண்டி, "அம்மையே! உம் சினம் தாங்கும் வன்மை, அச்செங்குவளைச் சிறுமலர்க்கு இல்லை. அடியேன்மீது எறிந்து அதை அழித்து விடுவது, உம் மென்மைக்கு அழகாகாது. ஆகவே, அதை அடியேனுக்கு ஈந்து அருள் புரிவாயாக" என்று வேண்டி, வருவார்க்கு வழங்கி வழங்கி, வாங்குவார் கைகளுக்கு மேல்நோக்கியேகிடந்து கீழ்நோக்கிக் கவிதலையே கற்ற தன் இருகைகளையும், கீழ்நிலையில் இருத்தி, மேல்நோக்கி விரித்து, இரந்தவாறே அரசமாதேவியை அணுக அடியிட்டான். ஆனால், அந்நிலையிலும் அவள் சினம் அடங்காமையால், "என்பால் சொரிய வேண்டிய அன்பை, ஆடல் மகளிர்பால் காட்டிய நீ, என்னோடு உறவுடையை அல்லை; நீ யாரோ; நான் யாரோ; என்னை அணுகேல்" எனக் கூறியவாறே அவ்விடம்விட்டு அகன்றாள். மனைவியின் கையில் உள்ள குவளைமலரைப் பெற ஆசைகொண்ட ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், அதைத்தர மறுக்கும் அவளைத் தடுத்து நிறுத்தி, அதை வலிதிற் கவர்ந்து கொள்ளின் அவள்சினம் அளவிறந்து பெருகிவிடுமே என்ற, அன்பொடு கலந்த அச்சமிகுதியால், அது செய்ய நினையாது, அவள் செல்லவும், செயல் இழந்து, செய்வது அறியாது, அவள் செல்வதை வாளாப்பார்த்து நின்றான்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் அரசமாதேவிபால் கொண்டிருக்கும் பேரன்புடைமையினைப் புலப்படுத்தும் அக்காட்சி நலம்கண்டு களித்த, புலவர் கக்கைப் பாடினியார்

நச்செள்ளையார், அரசனைமெல்ல அணுகி, ''அரசே! உன் கைகள் வருவார்க்கு வழங்கக் கவியுமேயல்லது, போரில்துணை வேண்டியோ, வறுமையில், பொருள் வேண்டியோ பிறரை இரக்க மலர்ந்துஅறியா, எனப், பலரும் உன்னைப் பாராட்டக் கேட்டுள்ளோம். ஆனால், அதே உன்கைகள், சின்னஞ்சிறு செங்குவளை மலர் ஒன்றிற்காக, மனைவியிடத்திலேயே மலர்ந்து கிடந்து, இரந்து நிற்பதை இப்போது காண்கின்றேம்; இது, 'கொள்ளுதல்தீது, கொடுத்தல் நன்ருல்' என்ற கொடைமுறை இயல்பொடு பொருந்தியதோ, உன் புகழுக்குப் பெருமை தருவதோ ஆகாது. மேலும், சேரலாத! அதுவோ, ஒருசிறிய செங்குவளை மலர்; அதைத் தாங்கி நிற்பவரோ, தண்ணீர் இடைப்பட்ட தளிரேபோல் நடுங்கும் ஒரு தளரியலாள். அதுவும் நின் அரசமாதேவி அதைவிரும்பும் நீயோ, அரசர் பலரின் அரண்கள் பலவற்றைக் கவர்ந்து கொண்டஆற்றல் மறவன் எனப் பலராலும் பாராட்டப் பெற்றவன். அங்ஙன-மாகவும் அதைக் கைப்பற்றிக்கொள்ளும் ஆற்றல் இழந்து விழிக்கின்றனை. இதுசெய்யமாட்டாத நீ, பெருநிலம் முழு-தாளும் பேரரசர்களின் பற்றற்கரிய பெரிய கோட்டைகளை எவ்வாறு கைப்பற்ற வல்லையோ? அறியேம்!'' எனக்கூறி எள்ளி நகையாடுவார்போல், அவன் அளப்பில் ஆற்றலும், கரைகாணக் காதலும் ஒருசேரப்புலப்படுமாறு பாக்கள் புனைந்து பாராட்டுவாராயினர்.

சினம் கொண்டவள் எறியக் கருதியது ஒரு சிறிய செங்குவளை மலர் என்பதால், அதன் மென்மையும், அச்சிறு-மலரையும், அத்துணை மெல்லியலாளிடமிருந்து கவர்ந்து கொள்ளக்கருதாது, இரந்து பெற, இருகை விரித்தான் என்பதால், அவன் அன்பின் அகலமும் புலப்படவந்த சிறப்பால், சிறு செங்குவளை என்ற தொடரே, அச்செய்யுட்குப் பெயராய் அமைந்து விட்டது.

52. "கொடி நுடங்கு நிலைய கொல்களிறு மிடைந்து,
வடிமணி நெடுந்தேர் வேறுபுலம் பரப்பி,
அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்
பெருங்கலி வங்கம் திசை திரிந்தாங்கு,
மைஅணிந்து எழுதரும் மாயிரும் பல்தோல்,
மெய்புதை அரணம் எண்ணாது, எஃகு சுமந்து
முன்சமத்து எழுதரும் வன்கண் ஆடவர்,
தொலையாத் தும்பை தெவ்வழி விளங்க
உயர்நிலை உலகம் எய்தினர் பலர்பட
நல்லமர் கடந்த நின் செல்லுறழ் தடக்கை
இரப்போர்க்குக் கவிதல் அல்லதை, இரைஇய
மலர்பு அறியா எனக் கேட்டிகும்; இனியே,
சுடரும் பாண்டில் திருநாறு விளக்கத்து
முழாவிமிழ் துணங்கைக்குத் தழஉப் புணையாகச்
சிலைப்பு வல்லேற்றின் தலைக்கை தந்து நீ
நளிந்தனை வருதல் உடன்றன ளாகி,
உயவும் கோதை, ஊரலம் தித்தி,
ஈரிதழ் மழைக்கண், பேரியல் அரிவை
ஒள்ளிதழ் அவிழகம் கடுக்கும் சீறடிப்
பல்சில கிண்கிணி சிறுபரடு அலைப்பக்,
கொல்புனல் தளிரின் நடுங்குவனள் நின்று, நின்
எறியர் ஒக்கிய சிறுசெங்குவளை
ஈயென இரப்பவும் ஒல்லாள், நீ எமக்கு
யாரையோ எனப் பெயர்வோள் கையதை
கதுமென உருத்த நோக்கமொடு, அது நீ
பாஅல் வல்லாயாயினை; பாஅல்
யாங்கு வல்லுநையோ? வாழ்க நின்கண்ணி!
அகலிரு விசும்பில் பகல்இடம் தரீஇயர்,
தெறுகதிர் திகழ்தரும் உருகெழு ஞாயிற்று

உருபுகிளர் வண்ணம் கொண்ட
வான் தோய் வெண்குடை வேந்தர்தம் எயிலே'',

துறை : குரவைநிலை
வண்ணம்: ஒழுகு வண்ணம்
தூக்கு: செந்தூக்கு
பெயர்: சிறுசெங்குவளை

வங்கம் திசைதிரிந்தாங்கு களிறுமிடைந்து, தே பரப்பி அரணம் எண்ணாது, தோல் எஃகு சுமந்து எழுதரும் ஆடவர், தும்பை விளங்க, பலர்பட, அமர்கடந்த நின் தடக்கை, கவிதல் அல்லதை மலர்பு அறியா எனக் கேட்டிகும்; இனியே, துணங்கைக்குத் தலைக்கை தந்து வருதல் உடன்றனளாகி, அரிவை, நடுங்குவனள் நின்று எறியர் ஓக்கியகுவளை இரப்பவும் ஒல்லாள் பெயர் வோள் கையதைப் பாஅல் வல்லாய் ஆயினை; வேந்தர்தம் எயில் யாங்கு வல்லுநையோ? எனக் கூட்டிப் பொருள் கொள்க.

இதன் பொருள் : அருங்கலம் தரீஇயர் = தங்கள் நாட்டில் கிடைத்தற்கு அரியவாய பொருள்களை, அவை கிடைக்கும் பிறநாடுகளிலிருந்து கொண்டு வருவதற்காக. நீர்மிசை நிவக்கும் = கடல்மேல் மிதந்து செல்லும். பெருங்கலி வங்கம் = பெரிய ஆரவாரத்தையுடைய கப்பல்கள். திசை திரிந்தாங்கு = திசைமாறித் திசைமாறிச் செல்வதுபோல். கொடிநுடங்கு நிலைய கொல்களிறு மிடைந்து = போர்க்கொடி பறக்கும் நிலைகளையுடையவாய போர்க்களிறுகள் நெருங்கிச் செல்ல. வடிமணி நெடுந்தேர் வேறுபுலம் பரப்பி = தெளிந்த ஓசையினை எழுப்பும் மணிகள் பூண்டநெடிய தேர்களைப் பகைப் புலம் நோக்கிப் போக்குவித்து. மெய்புதை அரணம் எண்ணாது = தம்மெய்யைக் காக்கும் கவசங்கள் அணிவதைக் கருதாதே. மைஅணிந்து எழுதரும் மாயிரும் பல்தோல் = கார்மேகக்

கூட்டம்போல் கருத்து எழும் பெரிய பல கேடகங்களோடு, எஃகு சுமந்து = வேலும் வாளும் போலும் படைக்கலங்களை மட்டுமே ஏந்தி. முனைசமத்து எழுதரும் வன்கண் ஆடவர் = போர்க்களத்தின் முன்னணியில் நின்று போரிடும் வீரர்களின். தொலையாத் தும்பை தெவ்வழி விளங்க = தோல்விகாணுமை குறித்து அணியும் தும்பை மலர்க்கண்ணிகள், பகைவர் படையிடைய பாராட்டப் பெற்றுப் புகழ்பரப்ப. உயர்நிலை உலகம் எய்தினர் பலர்பட = விழுப்புண் பெற்று வானுலகடையும் புகழ்பெற்றவராய்ப் பகைவர் படையைச் சேர்ந்த பலர் மடியும் வண்ணம். நல்லமர் கடந்த நின்செல் உறழ் தடக்கை = நல்ல அறவழிப்போர் ஆற்றிவென்ற உன், பகைவர்க்கு இடியேறு போலும் கொடுமை விளைக்கும் பெரியகை. இரப்போர்க்குக் கவிதல் அல்லதை=இரவலர்க்கு ஈதற் பொருட்டுக் கவிழ்வது அல்லது. இரைஇய = பிறரை இரத்தற்பொருட்டு. மலர்பு அறியா எனக் கேட்டிகும் = மலர்தலை அறியாது எனப் பலர் கூறக்கேட்டுள்ளோம். இனியே = ஆனல், இப்போதோ என்றுல். சுடரும் பாண்டில் திருநாறு விளக்கத்து — கொழுந்து விட்டு எரியும் பாண்டில் விளக்கின் மங்கல ஒளியில் நிகழ்கின்ற. முழாவிமிழ் துணங்கைக்கு = முழவு முதலாம் இசைகள் முழங்க நிகழும் துணங்கைக்கூத்தினை நிகழ்த்தும் மகளிர்க்கு. தழூஉப்புணையாக = அவர்கள் தழுவி நின்று ஆடத்துணை புரியும்புணையாக. சிலைப்பு வல்லேற்றின் தலைக்கை தந்து = உங்காரமிட்டவாறே துள்ளித்திரியும் கொல்லேறுபோல் நடந்துசென்று, கைகொடுந்துத் துவக்கிவைத்து. நளிந்தனை வருதல்=அவ்வாடல் மகிழ்ச்சியால் மனம்நிறைந்து வருதலை. உடன்றனளாகி = கண்டு ஊடல் கொண்டவளாகி. உயவும் கோதை = ஆடிஅசையும் மாலையும். ஊரல்அம் தித்தி = உடல் எங்கும் பரந்த அழகுத் தேமலும். ஈர்இதழ் மழைக்கண் = தண் எனக்குளிர்ந்த இமைகட்கு இடைப்பட்ட அருள்மல்கும் கண்களும். பேரியல் அரிவை = பெண்டிர்க்குப் பெருமைதரும்

பண்புகளும் ஒருங்கே உடைய உன் மனைவி, ஒள் இதழ் அவிழ் அகம் கடுக்கும் சீறடி = ஒள்ளிய நிறம் காட்டும் இதழ்கள் விரிந்த மலரின் அகவிதழ்போலும் தன் மெல்லிய சிறிய அடிகளில் அணிந்துள்ள. பல்சில கிண்கிணி = சிலவும் பலவுமாகிய கிண்கிணிச் சிலம்புகள். சிறுபரடு அலைப்ப = சிறியகணுவின் கண்கிடந்து ஒலிக்குமாறு. கொல்புனல் தளிரின் நடுங்குவனள் நின்று = கரைகளை அழித்துக் கொண்டு ஓடும் பெருவெள்ளத்தின் இடைப்பட்ட இளந்தளிரேபோல் நடுங்குவாளாய் நின்று. நின் எறியர் ஓக்கிய சிறுசெங்குவளை = உன்மீது எறிய ஓங்கிய சிறிய செங்குவளை மலரை. ஈயென இரப்பவும் ஒல்லாள் = எறியாதே எனக்கு ஈவாயாக என நீ இருகை விரித்து இரக்கவும் அதற்கு இசையாளாகி நீ எமக்கு யாரையோ எனப்பெயர் வேள் கையதை = நீ எம்மோடு உறவுடையை அல்லை; நீயாரோ, யான் யாரோ எனக் கூறியவாறே அவ்விடம்விட்டு அகலும் அவள் கையில் உள்ளதான அக்குவளைமலரை. க து ம் என உறுத்த நோக்கமொடு பாஅல் வல்லாய் ஆயினை நீ = விரைந்து சென்று, செறுத்துநோக்கிக் கைப்பற்றிக் கொள்ளமாட்டாதான் ஆகிவிட்டனை; அ த் த கை யோ ஞ கி ய நீ. அகல் இரு விசும்பில் = அகன்ற பெரிய வானத்தின்கண். பகல் இடம் தரீஇயர் = பகற்காலம் ஒன்றிற்கே இடம் உண்டாதற் பொருட்டு. தெறுகதிர் திகழ்தரும் உருகெழு ஞாயிற்று = கொடிய வெப்பம் பொருந்திய கதிர்களைப்பரப்பும் செந்நிறம் காட்டும் ஞாயிற்றினுடைய. உருபு கிளர் வண்ணம் கொண்ட = வடிவையும் விளங்கும் வண்ணத்தையும் கொண்ட. வெண்குடை வேந்தர் தம் எயில் = வெண்கொற்றக் குடையுடையவர்களாகிய வேந்தர்களுக்கு உரிய அரண்களை. பாஅல்யாங்கு வல்லுநையே = வென்று கைப்பற்ற எவ்வாறு வன்மையுடையை ஆகுவையோ? அறியேம். வாழ்க நின் கண்ணி = நின்தலைமாலை வாழ்வதாக.

மகளிர் கைபுணைந்து ஆடும் துணங்கை கூத்தில், அம் மகளிரால் மதிக்கத்தக்கான் ஓர் ஆடவன் முதல்கை கொடுத்து ஆட்டத்தைத் தொடங்கி வைத்தல் வழக்கம் என்பதும், அவ்வாறு முதல்கை கொடுத்தல், தலைக்கை தருதல் என வழங்கப்படும் என்பதும் பின்வரும் வரிகளாலும் தெளிவாதல் காண்க.

''மெல்லிணர்க்கண்ணி மிலைந்த மைந்தர்
எல்வளை மகளிர் தலைக்கை தரூஉ த்து''

—புறம்: 24: 829

''நிரைதொடி நல்லவர் துணங்கையுள் தலைக்கொள்ள''

—மருதக்கலி: 8: 16.

''மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து''

—முருகாற்றுப்படை :216

நாடாளும் அரசனின் மனைவியேயாயினும், கணவன் வேற்று மகளிர்பால் கருத்து செலுத்தப் பொருது ஊடல் கொண்டுவிடுவர். அதுவே மனைவியர்க்கு மாண்பாகும் என்பதை, அரசவைக்கண் மகளிர் ஆடலும் பாடலும் கேட்டு அகம் மகிழ்ந்து மெய்ம்மறந்துபோன கணவன் நிலைகண்டு ஊடல்கொண்டு, அரசவை ஆகவே, ஊடல் காரணம் கூறாது, தலைநோய் காரணம் கூறி, அரசவை விடுத்து வெளியேறிய கோப்பெருந்தேவியார் செயல், உறுதி செய்வது காண்க.

''கூடல் மகளிர் ஆடல் தோற்றமும்,
பாடல் பகுதியும் பண்ணின் பயங்களும்
காவலன் உள்ளம் கவர்ந்தன என்று தன்
ஊடல் உள்ளம் உள் கரந்து ஒளித்துத்
தலைநோய் வருத்தம் தன் மேலிட்டுக்
குலமுதல் தேவி கூடாது ஏக''.

—சிலம்பு : 16 :131-136

தன்பால் பரத்தையர் ஒழுக்கம் இடங்கொண்டு விட்டதோ என்ற ஐய உணர்வால் தலைப்புண்டு, மனைவி ஊடல் கொண்டு விடுவளாயின், கணவன் மனைவிக்கும் பணிந்து போவதே நல்லது. அப்போதுதான் ஊடலை அடுத்துக், கூடல் பெற்று இன்பம் காண இயலும். ஊடலின் இந்நுணுக்கம் உணர்ந்தவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். அதனால்தான், கோப்பெருந்தேவி ஊடிச் சினங்கொண்ட வழியும், அடங்கி அடிபணிந்து நிற்பானாயினன். மனைவியர் ஊடி இருப்புழி, கணவன்பார் நடந்து கொள்ளவேண்டிய முடிவுபற்றிய ஆன்றோர் அறிவுரைகளில் ஒரு சில இதோ:

''துணிநீங்கி ஆடல் தொடங்கு, துனி நனி
கன்றிடின் காமம் கெடூஉம்''

—பரிபாடல் 6 :97-98

''ஊடலிற் தோற்றவர் வென்றார்; அது மன்னும்
கூடலிற் காணப்படும்''.

— திருக்குறள் : 1327

''செலியரத்தை நின் வெகுளி, வாலிழை
மங்கையர் துனித்த வாண்முகத்து எதிரே''.

—புறம்: 6: 23-24

3. குண்டு கண் அகழி

வருவார்க்கு வழங்கி வளமார் புகழ்பெறத் துணைபுரிவது, வற்றாப் பெருநிதியே ஆதலின், ஈத்துப்பெறும் புகழின்பால் வேட்கையுடையவர், பொருளீட்டும் பணியினையும் பெருக மேற்கொள்ளுதல் வேண்டும் என்ற உண்மை உணர்ந்தவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். அதனால் கொடுத்துப் புகழ் வளர்க்கும் அக்கோமகன், பொருட்செல்வத்தை அளவின்றிப் பெறுவான்வேண்டி, அண்டை நாடுகள்மீது போர் தொடுத்துச் சென்று, அந்நாட்டவரை வெற்றிகொண்டு, அவர்கள் பணிந்து வந்து திறையாகப் பெரும்பொருள் அளித்தவழி, அப்பொருளை மட்டுமே கொண்டு, ஆட்சிப் பொறுப்பினை அவர்பாலே அளித்து மீள்வதை வழக்கமாக மேற்கொண்டு இருந்தான். அவ்வாறு, பகைவென்று திறைகொள்ளும் வழக்காறுடைய அவன், அது குறைவின்றி நிறைவேறத் துணைபுரியவல்ல பெரிய படையையும் பெற்றிருந்தான். அவன் படையைச் சேர்ந்த போர்க்களிறுகள், போகும் நெறியில், யாதேனும் ஓர் அரசனையும், அவ்வரண் வாயிற்கதவையும் கண்டுவிட்டால், உடனே கடுஞ்சினம் கொண்டு விடும். பெருகி வழியும் மதநீர்கண்டு வண்டுக்கூட்டம் விடாது வந்து மொய்க்குமளவு மதம்பட்டுவிடும். தனக்குக் காவலாய்த் தன் இருபக்கமும் வருவார் ஏந்திவரும் குத்துக்கோலையும் மதியாது. காட்டில் வாழ்ந்திருந்த காலை, புலிகள் பலவற்றோடு போராடிவென்று அழித்த போரில் பெற்ற, பெரிய பெரிய தழும்புகள் கிடந்து அணிசெய்யும் தன் நெற்றி முதலாக, நீண்டு தொங்கும் கையை மேலே உயர்த்தி வளைவாகச் சுருட்டிக்கொண்டு, தன்மீது அமர்ந்து தன்னை ஏவிவரும் பாகரின் கைத்தோட்டியையும் தூளாக்கிவிட்டு,

அவர் ஆணையையும் கடந்து, அம்மதிற்கதவுகளை மோதி அழித்துவிடும்.

அத்தகு வேழங்கள் மலிந்த நாற்படையுடைமையால், வெற்றிக்கொடி பறக்க வாழ்ந்திருந்த ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், ஒருமுறை, தன்கோயிற்பண்டாரம் குறையுற்று விட்டதாக, பகைவென்று திறைகொள்ளும் வேட்கையுடையனாயினான். உடனே, அதைக்குறைவற நிறைவேற்ற வல்ல இடம் எது எனத் தேர்ந்து, ஆங்குச்சென்று பாசறை கொண்டான். படைகொண்டு வந்திருப்பவன் பேரரசன்; பேராற்றல் படைத்தவன்; பெரும்படையுடையான்; என்றாலும், அவன் கருதி வந்திருப்பது பகைநாட்டு மண் அன்று; அந்நாட்டுப்பொன்; ஆகவே, அது அளித்தால் அவன் போரிடாதே போய்விடுவன் என்பதை அறிந்த அந்தப் பகைநாட்டு மன்னன், வளம்குறைந்து வாழ்விழந்த நிலையை என்றும் கண்டறியாமையால், பொன்னும் நவமணியும் போலும் புதுப்புது வருவாய்களால் பொலிவுபெற்ற தன் நாட்டுச் செல்வத்தின் பெரும்பகுதியைத் திறையாகத் தந்து, ‘இதுகொண்டு என்னை வாழவிடுவாயாக’ என வேண்டிக் கொண்டானாக, அதுகொண்டு அவனுக்கு வாழ்வளித்த ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், நாற்புறங்களிலும் வான்உயர் மலைகளே அரணாக நிற்க, அம்மலை நாட்டின் இடையே காவற்காட்டினால் சூழப் பெற்றிருக்கும், தன் தலைநகர் நோக்கித் திரும்பிவிட்டான்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனோடு சென்று, வென்று திறைகொண்ட அவன் வெற்றிச் செயலைக் கண்டுகளித்து, அவனோடு வந்துகொண்டிருந்த புலவர் காக்கைப்பாடினியார், இடைவழியில் ஒரு பெரிய அரணைக் கண்ணுற்றார். வானளாவ உயர்ந்து வளைந்து வளைந்து கிடந்த பெரு மதிலும், தன்

வாழிடம் வந்து வீழ்ந்தாரை வலிதிற்பற்றி அழிக்கும் ஆற்றல் வாய்ந்த முதலைகள் வாழும் ஆழம்மிக்க அகழியும், வல்வில் பொறியும், கருவிரல் ஊகமும், கல் உமிழ்கவணும் போலும் எந்திரப் படைகள் அமைக்கப் பெற்ற வாயிலும் கொண்டிருந்தது அவ்வரண். அதுமட்டுமன்று; அது அத்தகு அமைப்பு உடைமையால் அதைக் கைபற்றக் கருதுவார் ஒருவரும் இரார்; ஒருகால், அதன் அமைப்பாற்றல் அறியாது, அதைக் கைப்பற்றும் கருத்துடையராய் வருவார் எவரேனும் உளராயின், அவர் தோற்பது உறுதி, ஆகவே அமரில் தோற்று ஆண்மை இழக்கும் அவரைப், பெண்மையுடையவராகக்கொண்டு, அவர்க்கும் பெண்டிர் அணியாம் சிலம்பைக் காலில்கட்டி, தழை ஆடையை இடையில் உடுத்திப் போக விடுவோம் என்ற அரணகத்தாரின் தறுகணாண்மையினைப் புலப்படுத்த, வாயில் முகப்பில் கட்டி நாலவிட்ட சிலம்பும் தழையும் அரண்நோக்கி வருவாரை வரவேற்றுக் கொண்டிருப்பதையும் கண்டார் காக்கைப் பாடினியார்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் படைபோகு இடைவழியில், அதுகாறும் அழிவுறாது, அத்துணை அமைப்பு நலனோடு காட்சி நல்கும் இவ்வரணுக்கு உரியார் யாராய் இருத்தல் கூடும் என வியந்து நின்று எண்ணிப் பார்க்கவே புலவர்க்கு உண்மை புலனாயிற்று. அவ்வரண், அப்போது அவ்வரண்கத்தே வாழ்பவன், தன் ஆற்றலால் பெற்றது அன்று. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் முன்னோர்களுக்கு அடங்கிய அரசாகவும், அவர் அன்பைக் கவர்ந்த அரசாகவும் வாழ்ந்தமையால், அவர்களால் அன்பளிப்பாக அளிக்கப் பெற்று, பிற எப்பகைவராலும் பாழுறா வண்ணம் காக்கப் பெற்றது அது. சேரர் குலத்தவரின் சிறந்த துணை அதற்கு உளது என்ற உண்மை உணராது, அதைவென்று கைப்பற்ற

வந்த ஒருவனையும், முன்னோர் சென்ற நன்னெறி போற்றும் நல்லியல்புடைமையால் அழித்து, அவ்வரண் அழிவை, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் தடுத்து அளித்துள்ளான்.

அவ்வரணின் இவ்வரசியல் உரிமையை உணர்ந்தமை-யால் அவ்வரணின் நல்வாழ்வில் நாட்டம் சென்றது புலவர் நச்செள்ளையார்க்கு. ஆனால், தனக்கும் அவ்வரணுக்கும் உள்ள அவ்வுறவினை ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் அறிவான்; அவன் படைவரிசையின் முன்னணியில் வீறு கொண்டுவரும் அவன் வேழப்படை அதை அறியாது. அதனால், அவ்வரணையும், மரப்பலகைகளை இரண்டும் பலவுமாக இணைத்து, இரும்பு ஆணிகள் கொண்டு இறுகப்-பிணித்து, ஆக்கப்பெற்று பின்னே கணையமரம் நின்று தாங்க, வாயிலை அடைத்து நிற்கும் கதவினையும் கண்டுவிட்டால் அக்களிறுகள் அடங்கியிரா. அந்நிலையே மதம்பட்டு, போர் வெறிகொண்டு விரைந்துதோடி அழித்துவிடும் என்பதை உணர்ந்தமையால், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் படை வரிசையின் முன்னே வந்து கொண்டிருந்த புலவர், அப்படை நடுவே, நெடுந்தேர்மீது அமர்ந்துவரும் சேரலாதன்பால் சென்று, ''வேந்தே! அதோ காண், ஓர் அரண் தோன்று-கிறது. அது, உன்முன்னோரால் அளிக்கப்பெற்று, உன்னால் காக்கப்பெறும் நட்பரசர் அரணாகும். ஆகவே, அது அழிவுற்றுப் போகாது, நின்று நிலைபெறுவதில் உனக்குப் பெரும்பொறுப்பு உண்டு. ஆனால், அது, உன் களிற்றுப் படையின் கண்களில் பட்டுவிட்டால், அது பாழுற்றுப் போய்-விடும். ஆகவே, அவ்வரண் நிற்கும் இவ்வழிச் செல்வதை விடுத்து, வேறுவழி மேற்கொள்வாயாக. தலைநகர் சென்று சேர, அது, சற்று வளைந்து கிடந்து தொலைவுடையதாயினும், அவ்வழி மேற்கொள்வதே நன்று. உடனே, அதற்காம் ஆணையை இப்போது விடுவாயாக!'' என வேண்டி,

அவ்வரண் அழிவைக் காக்குமுகத்தான், பொருள் வேண்டிய வழியே, போருக்குப்போகும் அவன் அறப்போர் உள்ளம், பகை அரணைப் பார்த்த அளவே பாய்ந்து பாழாக்கும் அவன் படைப்பெருமை, நட்பரசர் நாட்டை நாசம் செய்ய நினையா நல்உள்ளம் முதலாம் பல்வேறு நல்வியல்புகளையும் நயமாகப் பாராட்டியுள்ளார்.

தன்கண் வீழ்ந்தாரைப்பற்றி உயிர்போக்கும் முதலைகள் வாழுமளவு ஆழம் உடைய அகழியால் சூழப்பட்டதேனும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் அருள் உள்ளத்தினாலேயே அழிவுற்றிலது என்ற பொருள் தோற்றுவித்து, அவன் அருள் ஆண்மைச் சிறப்புக்களை உணரத் துணைபுரிந்த நயம், **குண்டு கண் அகழி** என்ற தொடர்க்கே உண்மையாதல் கண்டு, இப்பாட்டிற்கு, அத்தொடரால் பெயரிடப்பட்டுளது.

53. ''வென்றுகலம் தரீஇயர், வேண்டுபுலத்து இறுத்து, அவர்
வாடாயாணர் நாடுதிறை கொடுப்ப
நல்கினை ஆகுமதி எம் என்றருளிக்,
கல்பிறங்கு வைப்பின், கடறு அரையாத்த நின்
தொல்புகழ் மூதூர்ச் செல்குவை யாயின்
செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும்
எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்,
கோள்வல் முதலைய **குண்டு கண் அகழி**,
வானுற ஓங்கிய வளைந்துசெய் புரிசை,
ஒன்னாத் தெவ்வர் முனைகெட விளங்கி
நின்னில் தந்த மன்எயில்' அல்லது,
முன்னும் பின்னும்நின் முன்னோர் ஓம்பிய
எயில் முகப்படுத்தல் யாவது? வளையினும்
பிறிதாறு சென்மதி, சினங்கெழு குரிசில்!
எழூஉப் புறம் தரீஇப், பொன்பிணிப் பலகைக்

குழூஉ நிலைப் புதவின் கதவுமெய் காணின்,
தேம்பாய் கடாத்தொடு, காழ்கை நீவி;
வேங்கை வென்ற பொறிகிளர் புகர்நுதல்
ஏந்துகை சுருட்டித் தோட்டி நீவி,
மேம்படு வெல்கொடி நுடங்கத்
தாங்கல் ஆகா, ஆங்கு நின் களிறே''

துறை: செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம்: ஒழுகு வண்ணம்
தூக்கு: செந்தூக்கு
பெயர்: குண்டு கண் அகழி

குரிசில்! கலம் தரீஇயர் இறுத்து, அவர் திறை கொடுப்ப அருளி, மூதூர் செல்குவை ஆயின், இடைவழிக்கண் இதோ நிற்கும் இவ்வரண், நின்னில் தந்த எயிலும், முன்னோர் ஓம்பிய எயிலும்ஆம்; அதன் கதவுகாணின், நின்களிறு தாங்கல் ஆகா; ஆகவே, முகப்படுத்தல் யாவது? வளையினும் பிறிதாறு சென்மதி எனக் கூட்டுக.

இதன் பொருள்: சினங்கெழு குரிசில் = சினம் மிக்க சேரலாதனே! வென்று கலம் தரீஇயர் = பகை வளர வென்று அவர் செல்வங்களைக் கொண்டு வருதற்காக. வேண்டு புலத்து இறுத்து = அவ்வினை குறைவற நிறைவேறுதற்கு ஏற்ற இடத்தே சென்று தங்கி. அவர் = அதுகண்ட அப்பகைவர். நல்கினை ஆகுமதி எம்என்று = எம்மைக் காத்து அருள்புரிவாயாக என்று கூறி. வாடா யாணர் நாடு திறை கொடுப்ப = வற்றாத வளம் செறிந்த தங்கள் நாட்டுப் பொருள்களைத் திறையாகத்தர. அருளி = அதுகொண்டு அருள் அளித்து. கல்பிறங்கு வைப்பின் = மலைகள் மலிந்த நாட்டில். கடறு அரையாத்த = காவற்காடு சூழ்ந்த. நின்

தொல்புகழ் மூதூர் செல்குவை ஆயின் = உன்னுடைய பழம்பெரும் புகழ்வாய்ந்த தலைநகராம் மூதூர்க்கு மீண்டுசெல்குவையாயின். செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும் = சித்திர வேலைப்பாடுகள் விளங்கச் செம்பொன்னால் செய்யப்பட்ட சிலம்போடு, அழகிய தழை ஆடையும் கட்டி நாலவிட்டிருப்பதும். எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில் = எந்திரப் பொறிகளில் வைத்து எறியப்படும் அம்புகள் போலும் அரிய பொறிப்படைகளையுடையது மாகிய வாயிலும். கோள்வல் முதலைய குண்டுகண் அகழி = அகப்பட்டாரைப் பற்றிக் கொல்லவல்ல முதலைகள் வாழும் ஆழம் மிக்க அகழியும். வானுற ஓங்கிய வளைந்து செய்புரிசை = வானளாவ உயர்ந்து வளைந்துவளைந்து போகுமாறு ஆக்கிய மதிலும் (ஆகிய உறுப்பு நலம் உடையதுமாய் அதோ தோன்றும் அரண்.) ஒன்னாத் தெவ்வர் முனைகெடவிலக்கி நின்னில் தந்த மன்எயில் = மனம் ஒன்று படாத பகைவர் வந்து வளைத்துப் போரிட அப்போரை அழித்து, உன்னால் காக்கப்பெற்ற அழியா அரணும். அல்லதை = மேலும். முன்னும் பின்னும் நின் முன்னோர் ஓம்பிய எயில் = உன் முன்னோர்கள், முன்னும் பின்னுமாகப் பலமுறை காத்துநிறுத்திய அரணுமாம். எழூஉப் புறம் தரீஇ = கணையமரத்தால் பின்புறம் காக்கப்பெற்று. பொன்பிணிப் பலகை = கரும் பொன்னாகிய இரும்பு ஆணிகளால் இறுகப் பிணிக்கப்பட்ட பலகைகளால் ஆகிய. குழூஉ நிலைப்புதவின் கதவு மெய்காணின் = பல்வேறு நிலைகளையுடைய கோட்டை வாயிற்கதவுகளைத் தெளிவாகக் கண்டுவிட்டால். தேம்பாய் கடாத்தொடு = வண்டுக் கூட்டம் வந்து மொய்க்கும் மதநீர் பெருக்குவதோடு. காழ் கை நீவி = குத்துக்கோலையும் மதியாது கடந்து. வேங்கைவென்ற பொறிகிளர் புகர்நுதல் = வேங்கைப்புலியையும், வேங்கை என மருண்ட வேங்கை மரத்தையும் வென்று அழித்தலால் உண்டான வடு விளங்கும் புள்ளிகள் பொருந்திய நெற்றி வரையும். ஏந்து கை சுருட்டி

= உயர்த்திய துதிக்கையைச் சுருட்டி. தோட்டிநீவி = தன்னை அடக்க உதவும் தோட்டியையும் கடந்து. மேம்படு வெல்கொடி நுடங்க = போரில் வென்று உயர்த்திய, தன்மீது நின்று பறக்கும் வெற்றிக்கொடி படபடக்க விரைந்து. நின் களிறு = உன் போர்க்களிறு. ஆங்குத் தாங்கல் ஆகா = அதை அழிக்குமாதலின், ஆங்கு அதைத் தடுத்து நிறுத்துவது ஆகாதாகிவிடும். (ஆகவே) எயில் முகப்படுத்தல் யாவது = உன்படையை அவ்வரண் நோக்கிப்போக விடுவது யாதாய் முடியும். வளையினும் = இது தவிர்த்த வேறு வழிகள் வளைந்து வளைந்து செல்லுமாயினும். பிறிதாறு சென்மதி = அவ்வேறு வழிகளையே மேற்கொண்டுசெல்வாயாக!''

அரண்மனைக் கருவூலம் வறண்டு, வந்து இரப்பார்க்கு வாரி வழங்குவது தடைபட்டுப் போகும் நிலை ஏற்படாமை குறித்தே, அரசர்களும் வீரர்களும் பிறநாடு மீது படை-யெடுத்துச் செல்வர். ஆங்குப் பகைமன்னர், அஃது அறிந்து திறைதந்து பணிந்து போவராயின், அதுகொண்டு, அவர் நாட்டை அவர்களே ஆளவிடுத்து மீள்வர். பண்டைப் போர்க் காரணங்களுள் ஒன்றான இதை, ''வென்று கலம்தரீஇயர் வேண்டுபுலத்து இறுத்து அவர் வாடாயாணர் நாடு திறை கொடுப்ப நல்கினையாகுமதி எம்மென்றருளி'' என்ற இப்பாட்டின் வரிகள் உணர்த்தி நிற்கின்றன. இதற்கான இலக்கியச் சான்றுகள் எண்ணற்றன உள. ஒரு சில இதோ:

''வேந்து தந்த பணிதிரையால்
சேர்ந்தவர் கடும்பு ஆர்த்தும்''.
''பிணிக்கதிர் நெல்லின் செம்மல் மூதூர்
நுமக்கு உரித்தாகல் வேண்டின் சென்று அவற்கு
இறுக்கல் வேண்டும் திறையே''.
''யாம் தன் இரக்கும் காலைத் தான்எம்

உண்ணுமருங்குல் காட்டித் தன் ஊர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்,
திருந்தலை நெடுவேல் வடித்திசின் எனவே''.

என்ற புறநானூற்று வரிகளை [22, 97, 180] காண்க.

கோட்டை மதிற்கண், பல்வேறு பொறியியல் படைக் கலன்களைப் பொருத்தி வைப்பதோடு, அரண் கோடல் போரில் தோற்றுப் பின்னிடும் பகைவீரர்களை, மகளிர்கோலம் கொள்ளப் பண்ணிப் பழித்தற்காக, மகளிர் உடுக்கும் தழை-யாடை, அணியும் காற்சிலம்பு, ஆடி மகிழும் பந்தும், பாவையும் போலும் பொருள்களை வாயிற்கண் தோரணமாகக் கட்டி நாலவிடுவது பழங்கால வழக்காறு என்பதை உணர்த்தும் ''செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும் எந்திரத்-தகைப்பின் அம்புடை வாயில்'' என்ற இப்பதிற்றுப்பத்து வரிகளோடு ''செருப்புகன்று எடுத்தசேண் உயர் நெடுங்கொடி வரிப்புனை பந்தொடு பாவை தூங்க'' என்ற திருமுருகாற்றுப்-படை வரிகளும் (67-68) ஒத்து இருப்பது காண்க.

4. நில்லாத் தானை

ஆண்மை ஆற்றல்களில், அக்கால அரசர்கட்கெல்லாம் தலைமை வகிக்கும் தகுதிப்பாடு உடையவனாக விளங்கினான் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்; ஆனால், அப்பெருநிலையால் செருக்குற்று, போர்வெறி கொண்டு, அழிவுப்போர் புரிந்து அலைந்தானல்லன். காரணம் இன்றிக் களம்புகக் கருதான். தனக்குக் கேடு விளைக்கும் தகாநினைவு பிறர்பால் எழக்கண்ட வழியே, அவன் உள்ளம் அமர்மேற்செல்லும். அந்நிலை கண்ட பின்னர், அவனால் அடங்கியிருப்பது ஆகாது. ஒருகால், சிறிதுகாலம் அடங்கியிருக்க அவன் நினைப்பினும், அச்செய்தி கேட்டுச் சிலநாழிகை அடங்கியிருப்பதும் அவன் நாற்படைக்கு இயலாது. அமைதி நிலவும் அவன்நாட்டு அரண்களில், அமைதிவாழ்வு மேற்கொண்டு அடங்கியிருக்கும் அவன்படை, அவன் நாட்டின்மீது ஆசைகொண்டு, அதைக் கைக்கொள்ளும் கருத்துடையராகி, அக்கருத்தினைத் தங்கள் நாற்படைக்கும், அப்படைத்தலைவர்க்கும் அறிவிப்பான் வேண்டிப் போர் முரசினை முழக்கினாராக, அதுகேட்டு, வாளும் வேலும் முதலாம் படைக்கலம் ஏந்தி வீரர் திரள, அவரை ஏவல் கொண்டவாறே படைவீரர் சூழவந்து எல்லைகடந்து உட்புகுந்து சேரலாதனின் எல்லைப்புறத்தில் பாசறை அமைத்துப் பாடிகொள்ளும் பகையரசர் நாற்படையில், முன் வரிசைக்கண் நிற்கும் வேழப்படையைக் கண்ணுற்ற அக்கணமே, எல்லை காக்க விரைந்துவிடும். அதுகாறும், அடங்கியிருந்த அப்படையை, அந்நிலை உண்டான பின்னரும் அடக்கி நிறுத்துவது இயலாது. ஆடுகோட்பாட்டுச் சேரலாதனே வந்து, 'சிறிது பொறுங்கள்' எனக் கூறி நிறுத்தினாலும், அது நில்லாது, தங்கள்நாட்டு மண்மீது ஆசைகொண்டு வந்த

அந்நாற்படையை அறவே அழித்தொழித்த பின்னரே அவன் நாற்படை அமைதி நிலை அடையும்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இப்படைப் பெருமையினையும் அதைப்பணிகொள்ளும் அவன் பேராற்றலையும், புலவர் காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் பண்டே அறிந்திருந்தார். ஆனல், அரசர் என்ருல், ஆற்றலில் சிறந்திருப்பதும், அதற்கேற்ற படைத்துணை பெற்றிருப்பதும் இயற்கை; ஆகவே அவை உடைமையால், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், புலவர் பாராட்டும் பெருமையுடையவனுகிவிடான் ஆதலின், அவனைச்சென்று காணும் ஆர்வம், புலவர்க்கு, அவன் படைப் பெருமை கேட்டபோது பிறக்கவில்லை. ஆனல் அப்போது உண்டாகாத அவ்வார்வம் அவன் கொடைப்புகழ் கேட்டதும் உண்டாகிவிட்டது.

ஆற்றல்மிகு ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், அருள் நிரம்பிய உள்ளத்தவனுமாவன். தன் அரண்மனையின் தலைவாயிற்கண் நின்று, தம் வறுமை கூறி இரப்பவர்க்கு அவர்கள் பிறிதோரிடம் சென்று மேலும் இரவாப்பெருவாழ்வு பெறுவதற்கு ஏற்ப, வாரி வாரி வழங்குவன். 'பெறுதற்கு அரிய பொருள்; அரும்பாடுபட்டு ஈட்டியது; ஆகவே இதை நாமே அடைவோமாக' எனக்கருதி, எதையும் தனக்கென வைத்துக் கொள்ளாது, அனைத்துப் பொருளையும் அள்ளி அள்ளித்தருவன் என்ற அவன் கொடைப்புகழ், தமிழ் நாடெங்கும் சென்று பரவியிருந்தமையால், அவனைக்காணும் ஆர்வம் உந்த, அவனுடு அடைந்து, அவனைக் கண்டார்புலவர் காக்கைப்பாடினியார்.

புலவர், அரசவை புகுந்து அவனைக்காணும் அந்நிலையிலும் அவன் அருட்பணியே மேற்கொண்டிருந்தான். சங்கு

வளை ஒலிக்கும் முன்கைகள்; மலைமூங்கில்போலும் பருமையும் மென்மையும் வாய்ந்த தோள்கள்; அருள் சுரக்கும் விழிகள்; அழகெலாம் திரண்டு வந்தாற்போலும் வடிவம்; இத்தகு இயற்கை நலங்களோடு, பூந்துகில் ஆடை, பொன்னும் நவமணியும் கொண்டு ஆக்கிய அணிகள்; வண்டுகள் விடாது மொய்க்குமளவு புதுமை நலம் கெடாப் பூ மல்கும் கார்குழல் போலும் செயற்கை நலங்களும் ஒரு சேரப்பெற்ற இளம் நங்கையர் பலர் ஒன்றுகூடி, ஆடுகோட்பாட்டுச்சேரலாதனின் மறப் புகழ்பரப்பும் பாடல்களைப் பாடியும், அப்பாடற் பொருள் புலப்படுமாறு ஆடியும் அவ்வரசவையை அணிசெய்ய, அவ்வாடல் பாடல்களால் அகம் நிறைவெய்திய மன்னவன், அவ்வாடல் மகளிர்க்கும், அவர்பின் வந்து வரிசைவரிசையாக நிற்கும் ஏனைய இரவலர்க்கும், பொன்னையும் பொருளையும் வரையறையின்றி வழங்கி வழியனுப்பி விடைகொடுக்கும் விழுமிய காட்சியைக் கண்டு களித்தார் புலவர்.

ஆடுகோட்பாட்டுச்சேரலாதனின் நாளோலக்க நலம் காணும் வாய்ப்பினைப்பெற்றமையால், அவன் ஆண்மை ஆற்றல்களின் விளைவாம் வெற்றிகளால் உண்டாகும் புகழினும், அவன் அன்புஅருள்களின் விளைவாம் கொடையால் ஆம் புகழே பயன்மிகுந்தது, பாராட்டற்கு உரியது என்பதை அறிந்த புலவர், அதை அவனுக்கு அறிவித்து, அவன் அருள் உள்ளத்தை மேலும் வளர்க்க விரும்பினார். ஆனால், எடுத்த எடுப்பிலேயே அது கூறினால், 'பாடிப் பரிசில் பெற்றுப் பிழைக்கும் இரவலர் இனத்தைச் சேர்ந்தவர்கள்தானே புலவர்களும்; அதனால்தான் இவரும் இது கூறினார்' என அவன் எண்ணிவிடுதலும் கூடும் என அஞ்சினார். அதனால், முதற்கண், பகைவர் தம் படைவரிசையின் முன் நிற்கும் வேழப் படையைக் கண்ட அளவே, அடக்கவும் அடங்காது பாய்ந்து தாக்கும் அவன் படைப் பெருமையைப்

பாராட்டிப், பின்னர், ''வேந்தே! விறலியர் உன் மறப்புகழ் பாட, நீ வெற்றி பல, பெற்று வேந்தர் வேந்தனாய் விழுச்சிறப்பு எய்துவதோடு, உன் புகழ்பாடும் அவ்விறலியர்க்கும், அவர் போலும் பிற இரவலர்க்கும் உன் வளங்களை வாரி வழங்குமுகத்தான் வளமார் புகழ்பெருக்கி வாழ்வதை விடாது மேற்கொள்வாயாக!'' என வாழ்த்தி, விரும்பியதே செய்து முடித்தார் புலவர் செள்ளையார்.

பகைவர்தம் போர்க்களிறுகளைக் கண்ட அளவே, அடக்கவும் அடங்காது விரைந்து பாயும் நாற்படையுடையான் என்ற தொடரே, அவன் ஆண்மையினையும், அத்துணைப் படையுடைய அவன்பால், அருளும் அளவின்றி அமைந்து கிடந்தது என்பதால், அவன் அருள் உள்ளத்தையும் ஒருசேர உணர்த்தும் சிறப்புடைமையால், **நில்லாத்தானை** என்ற அத்தொடரால், இப்பாட்டு, பெயர் பெறுவதாயிற்று.

54. வள்ளியை என்றலின் கண்டு வந்திசினே;
உள்ளியது முடித்தி; வாழ்க நின் கண்ணி!
வீங்குஇறைத் தடைஇய அமைமருள் பணைத்தோள்,
ஏந்துஎழில் மழைக்கண், வனைந்து வரல் இளமுலைப்,
பூந்துகில் அல்குல், தேம்பாய் கூந்தல்,
மின்இழை விறலியர் நின் மறம்பாட,
இரவலர் புன்கண்தீர, நாள்தொறும்
உரைசால் நன்கலம் வரைவில வீசி,
அனையை ஆகன்மாறே; எனையதூஉம்
உயர்நிலை உலகத்துச் செல்லாது, இவண் நின்று
இருநிலம் மருங்கின் நெடிது மன்னியரோ!
நிலம்தப விடூஉம் ஏணிப்புலம் படர்ந்து,
படுகண் முரசம் நடுவண் சிலைப்பத்,
தோமர வலத்தர் நாமம் செய்ம்மார்,

ஏவல் வியங்கொண்டு இளையரொடு எழுதரும்
நல்லார் யானைகாணின்,
நில்லாத்தானை இறைகிழவோயே! ''

துறை: காட்சி வாழ்த்து
வண்ணம்: ஒழுகு வண்ணம்
தூக்கு: செந்தூக்கு
பெயர்: நில்லாத் தானை

புலம் படர்ந்து, முரசம் சிலைப்ப, நாமம் செய்ம்மார் எழுதரும் ஒல்லார் யானை காணின் நில்லாத்தானை இறை-கிழவோய்! வள்ளியை ஆதலின் காண்கு வந்திசின்; விறலியர் மறம்பாட, நன்கலம் வரைவில வீசி, அனையை ஆகன்மாறு; அனையதூஉம் உயர்நிலை உலகத்துச் செல்லாது நெடிது மன்னியரோ; உள்ளியது முடித்தி! வாழ்க கண்ணி! என முடிக்க.

இதன் பொருள்: நிலம்தப இடூஉம் ஏணிப்புலம் படர்ந்து = பகைவர்க்குரிய நிலப்பகுதி குறைபடுமாறு, அவர் எல்லைக்கு உட்பட்ட இடத்தே சென்று பாசறை அமைத்து. படுகண் முரசம் நடுவண்சிலைப்ப = பேரொலி எழுப்பும் கண்ணையுடைய போர்முரசு. அப்பாசறை நடுவே இருந்து முழங்கிற்றுக. தோமரவலத்தர் = அது கேட்ட அளவே தண்டேந்திய வலக்கையினராய். நாமம் செய்ம்மார் = பகைவர்க்கு அச்சம் தரும் போரினைச் செய்தற் பொருட்டு. ஏவல்வியம் கொண்டு = படையெழுச்சி அறிவிக்கும் அம்முரசின் முழக்கினையே, மன்னர் ஏவலாகக் கொண்டு போருக்கு எழும். இளையரோடு எழுதரும் = இளம் வீரர்களோடு போர்க்களம் நோக்கிப் போகும். ஒல்லார்யானை காணின் = பகைவரின் யானைப் படையினை கண்டால். நில்லாத் தானை = அடங்கியிராது

அமர்நோக்கி விரையும் படையினையுடைய. இறைகிழவோய் = அரசுரிமை வாய்ந்தவனே! வள்ளியை என்றலின் காண்கு வந்திசின் — வள்ளன்மையுடையாய் என அறிந்தமையால் வந்துளேன். வீங்குஇறைதடைஇய அமை மருள் பணைத்-தோள் = சந்து பொருந்தியவளை அணிந்த, மூங்கில் போலும் பருத்த தோளும். மழைக்கண் = குளிர்ந்த கண்களும். எந்துஎழில் = சிறந்த அழகும். வனைந்துவரல் இளமுலை = தொய்யில் எழுதப்பட்ட இளம் முலைகளும். பூந்துகில் அல்குல் = பூத்தொழில் பொருந்திய பட்டாடை அணிந்த அல்குலும். தேம்பாய் கூந்தல் = வண்டு மொய்க்கும் கூந்தலும். மின்-இழை விறலியர் = ஒளிமின்னும் அணிகளும் உடையராகிய விறலியர். நின்மறம்பாட = உன் வெற்றிப்புகழை விளங்கப் பாட. இரவலர் புன்கண் தீர = அதுகேட்டு, அவ்விறலியர் போலும் இரவலர்களின் வறுமைத் துயர் போக. நாடொறும் உரைசால் நன்கலம் வரைவில வீசி=நாள்தோறும், புகழ்மிக்க நல்லபல பொருள்களை வரைவின்றி வழங்கி. அனையை ஆகன்மாறு = அவ்வருளியல்பு உடையை ஆதலாலே, எனையதூஉம் உயர்நிலை உலகத்துச் செல்லாது = ஒருசிறிது காலமும், உயர்நிலை உலகம் சென்று மறைந்துவிடாமல். இவண் நின்று, இருநில மருங்கின் நெடிது மன்னி உயரோர = பரந்த இப்பேருலகில், இவ்வரச வாழ்வில் இருந்து நெடிது காலம் நிலைபெறுவாயாக! உன்னியது முடித்தி = அவ்வாறு வாழும் நிலையால், யான் கருதிவந்ததை முடித்துத் தருவாயாக! வாழ்க நின் கண்ணி — உன்தலைமாலை வாழ்வதாக.

5. துஞ்சும் பந்தர்

''யாண்டு பல ஆகவும் நரைஇல ஆகுதல் யாங்கு ஆகியர்?'' என வியந்து கேட்டார்க்கு விடையளிக்குங்கால், புலவர் பிசிராந்தையர், தம் மனைவியரின் மனையற மாட்சி-யினையே தலையாய காரணமாகக்கொண்டு முதற்கண் கூறி-யுள்ளார். ''மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின், வாழ்க்கை எனைமாட்சித் தாயினும் இல்''; ''இல்லது என் இல்லவள் மாண்பானுள்''—நல்ல மனைவியர்க்கு வள்ளுவர் வழங்கும் நற்சான்றுரைகள் இவை. ஆகவே, எத்துணைப் பெரிய வாழ்வினராயினும், அவர்தம் மனைவிமார் மாண்பில-ராயின், அவர் வாழ்க்கை பயன்மிகு வாழ்க்கையாக அமையாது. ''புகழ் புரிந்த இல் இலோர்க்கு இல்லை, இகழ்வார்முன் ஏறுபோல் பீடுநடை'' என்றார் வள்ளுவர். ஆகவே, மனையற மாட்சிமிக்க மனைவியரைப் பெறுவது மன்னர்க்கும் இன்றி அமையாததாகும். ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுக்கு அம்மனையறச்செல்வம் குறைவறப் பொருந்தி யிருந்தது. ''கற்பும் காமமும், நற்பால் ஒழுக்கமும், மெல்லியற்பொறையும், நிறையும், வல்லிதின் விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும். பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்'' எனத் தொல்காப்பியர் கூறும் குணநலம் அனைத்தையும் கொண்டாளை மனைவியாகப்பெற்று, ''அத்தகையாள் கணவன்'' என வழங்கத்தக்க அளப்பில், பெருமைக்கு உரியவனாய் விளங்கினான்.

வீட்டில் அமைதிகாப்பவள் மனைவி என்றால், நாட்டின் அமைதி காப்பவர் ஆன்றோர் பெருமக்களாவர். ''அதன்கடை, சான்றோர் பலர்யான் வாழும் ஊரே'' எனக், கூறிய

காரணங்கள் அனைத்திற்கும் மேலாக, சான்றோர் உண்மை-யாம் காரணத்தையே பிசிராந்தையாரும் விதந்து கூறுவது காண்க. ஆகவே, வீட்டின் அமைதிகாக்கும் நல்லாளை மனைவியாகப்பெற்ற ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், நாட்டின் அமைதிகாக்கும் நல்லோர்துணை நாடுவதிலும் வெற்றியே கண்டான். உள்ளம் உரைசெயல் என்ற மூன்றாலும் சிறந்த உயர்ந்த பெரியார்கள் பலரைத், தன்அரசவைக்கண் வைத்துப் பேணிப்புரந்து வந்தான்.

வீட்டில் மனைவியும், நாட்டில் மாண்புமிகு சான்றோரும் நல்லாட்சி புரிவது, வீடும் நாடும் பெருநிதி பெற்றவழியே ஆகும் ஆதலின், ஆடுகோட்பாட்டுச்சேரலாதன், தன்நாட்டின் செல்வம் செழிக்க வழிபல வகுத்திருந்தான். அதன்பயனாய், அந்நாட்டுக் கடற்கரைக்கண் ஆங்காங்கே காட்சிதரும் பேரூர் களுக்குச் சென்று கண்டால், அப்பேரூர்களின் தாழை மணங்-கமழும் கானற்சோலைகள்தோறும் கட்டப் பெற்றிருக்கும் பண்டக சாலைகளில், கடல்வாணிகத்தின் வழியாகப் பெற்ற பொன்னும் நவமணியும் போலும் விலைமதிக்க ஒண்ணாவான் நிதிகள் வரையறை இன்றிக் குவிந்து கிடக்கும்.

இவ்வாறு செல்வம் கொழிக்கும்நாட்டிற்குப் பகைவர் பலராவர். ஆகையால், அத்தகு வளநாடு பெற்றவர், பகை வென்று நாடு காக்கும் பேராண்மையுடையராதலும் வேண்டும். ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்பால் அந்த ஆற்றலும் அமைந்து கிடந்தது. தன்னினும் பேரரசு செலுத்துவார் நாடுகள் மீது படையெடுத்துச் சென்று, தங்கள் தூசிப்படையின் அழிவுகண்டே அவர்கள் அலறிப்புடைத்து புறங்காட்டி ஓடிவிட, அன்னார் நாடுகளின் பெரும் பகுதியைத் தனதாக்கிக் கொள்ளும் திறுகணாளனாகிய அவன், தன் ஆற்றல் அறியாமையினால், தன் நாட்டின் மீது படை

தொடுத்து வருவாரின் வாட்படை முதலாம் படைக்கலங்கள் அனைத்தையும் பாழ்செய்து துரத்துவன். அத்தகைய உரமும் ஊக்கமும் நிறைந்த உள்ளம் உடைமையால், ஆடுகோட்-பாட்டுச் சேரலாதன், அக்காலத்தில் சிறந்த வீரர்கள் எனப் பாராட்டப் பெற்றவர்களாகிய மழவர்களையும், குடவர்களையும் வென்று பணி கொள்ளும் பேறுடையனாகவும் வாழ்ந்-திருந்தான்.

வளம்மிக்க நாடும், வன்மைமிகு ஆற்றலும், மாண்புமிகு மனைவியும், பண்புமிகு பெரியோரும் ஆகிய அனைத்து வகையாலும் சிறந்து விளங்குவதிலேயே, ஒருவன் வாழ்வு, பயன் நிறை வாழ்வாகி விடாது. "ஈதல் இசைபட வாழ்தல்", உரைப்பார் உரைப்பவை எல்லாம், இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ்" என ஈகையால் வரும் புகழ்பெற்று வாழ்வதே வாழ்வின் பயனும் என்றார் வள்ளுவர். ஆகவே, அவ்வாறு பெருவாழ்வு வாழ்பவர், வறுமையில் வாடுவார் தம் பெரும்பசி போக்கும் பேரற நெறியிலும் நிற்றல் வேண்டும். அதுவே அவர் வாழ்வின் பயனும். அவர் வாழ்வே பயனுடை வாழ்வாம். இவ்வுண்மையையும் உணர்ந்திருந்தமையால், ஆடுகோட்பாட்டுச்சேரலாதன், தன் அரசப் பெருங்கோயிலின் வாயிற்கண் வந்து நிற்கும் இரவலர்களின் வறுமைப்பிணி போக்கும் பெரும்பணியை, நாள்தோறும் விடாது மேற்-கொண்டு வந்தான். தன் நாடு செல்வத்தில் சிறந்து விளங்கினமையால், வறுமையுற்று இரப்பவர் அருகிவிட்ட காரணத்தால், இரவலர் வாராத நாட்களில், தன்பொற்-றேரைப் பிறநாடுகளுக்குப் போக்கி, வளம் இழந்த அந்நாடு களில் கிடந்து வருந்தும் வறியோர்களைத் தேரேற்றிக் கொணர்ந்து, முதற்கண் அவர்தம் வயிறுகாய் பெரும்பசி போக்கிப் பின்னர், அவர் வேண்டும் வானிதிகளை வழங்கி, மீண்டும் தேர்மீதே கொண்டு சென்று விடுவன்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், இவ்வாறு அனைத்து வகையாலும் சிறந்து விளங்குகிருன் என்பதால் அவன்பால் பேரன்புகொண்டு அவனைக் காணும் ஆர்வம் வந்த, அவன் நாடடைந்த புலவர், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் கொடைத் தொழில் அளவின்றிப்போவதைக் கண்டார். இரப்பவர் எது கேட்பினும் கொடுப்பது, எவ்வளவு கேட்பினும் கொடுப்பது எனக், கொடுத்தமையால் கெட்டு அழிந்தவர் பலராவர். அவ்வாறு வரையறையின்றி வழங்கி வந்தால், வானளாவ உயர்ந்த மாநிதியும் குறைந்து விடும். அதனுல் அவன் வாழ்நாளின் இறுதிநாட்கள் வழங்குவதற்று வனப்பிழந்து போய்விடும். இரவலர்களும், பேணுவார்அற்றுப் பசிநோயுற்றுப் பாழுற்றுப்போவர் என உணர்ந்தார் புலவர். உணர்ந்த புலவர், தம் உணர்வை உள்ளத்திற்குள்ளேயே அடக்கிக் கொண்டிராது, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை அடைந்து, ''அரசே! உன்பெருமையெலாம் கேட்டு, உன்னைக் காணவந்துளேன்யான். இன்று நீ பெற்றிருக்கும் இப்பெருவாழ்வு என்றும் நின்று நிலைபெறவேண்டும் எனத்துடிக்கிறது எம் உள்ளம். கடலில் படிந்து, பெருநீர்பருகி, கார்நிறம் பெற்று, வானிடை எழுந்து பெருமழை பெய்த கார்முகில், பின்னர்த், தன்னிடையே இருந்த தண்ணீரெல்லாம் தீர்ந்து போனமையால் வெண்முகிலாகி விரும்புவார் அற்றுப் போய்விடுவதுபோல, உன் வாழ்நாளில், கழிந்தது போக உள்ள நாட்கள், வழங்கி வாழும் வான்பயன் அற்ற வீண்நாட்களாகக் கழிதல் கூடாது என விழைகிறது என் உள்ளம். ஆகவே, அதற்கேற்ற வகையில், உன் வாழ்க்கை முறைகளை வகுத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்'' என அறம் உரைத்து ஆகும்நெறி காட்டினர்.

பெயர்த்தெடுக்கமாட்டாது குவிந்து கிடக்கும் செல்வங்கள் மலிந்த பண்டக சாலையின் பெருமை கூறவந்த புலவர்,

செல்வங்கள் தேங்கிக்கிடப்பதை, மெய்ம்மறந்து வீழ்ந்து கிடப்பதாகிய உறக்கம் எனும்பொருள் உணர்த்தும், துஞ்சுதல் எனும் தொழிலால் உணர்த்திய சிறப்பால், **துஞ்சும் பந்தர்** என்ற அத்தொடரே, இப்பாட்டிற்குப் பெயராய் அமைந்துளது.

55. ''ஆன்றோர் கணவ! சான்றோர் புரவல!
நின்நயந்து வந்தனென்; அடுபோர்க் கொற்றவ!
இன்னிசைப் புணரி இரங்கும் பௌவத்து,
நன்கல வெறுக்கை **துஞ்சும் பந்தர்க்**
கமழும் தாழைக் கானலம் பெருந்துறைத்
தண்கடற்படப்பை நன்னட்டுப் 'பொருந!
செவ்வூன் தோன்று வெண்துவை முதிரை
வாலூன்வல்சி மழவர் மெய்ம்மறை!
குடவர்கோவே! கொடித்தேர் அண்ணல்!
வாராராயினும் இரவலர் வேண்டித்,
தேரில்தந்து அவர்க்கு ஆர்பதன் நல்கிடும்
நசைசால் வாழ்மொழி இசைசால் தோன்றல்!
வேண்டுவ அளவையுள் யாண்டுபல கழியப்,
பெய்து புறம்தந்து பொங்கல் ஆடி,
விண்டுச் சேர்ந்த வெண்மழை போலச்
சென்று அருலியரோ, பெரும! அல்கலும்
நனந்தலை வேந்தர் தார்அழிந்து அலற
நீடுவரை அடுக்கத்த நாடுகைக் கொண்டு
பொருது சினம் தணிந்த செருப்புகல் ஆண்மைத்,
தாங்குநர்த் தகைத்த ஒள்வாள்
ஓங்கல் உள்ளத்துக் குருசில்! நின்நாளே!''

துறை : செந்துறைப் பாடாண்பாட்டு
வண்ணம் : ஒழுகு வண்ணம்
தூக்கு: செந்தூக்கு
பெயர்: துஞ்சும் பந்தர்

கணவ! புரவல! கொற்றவ! பொருந! மழவர் மெய்ம்மறை! கோவே! அண்ணல்! தோன்றல்! பெரும! குருசில்! நின்நயந்து வந்தனென்; நின்நாள் வெண்மழைபோலச் சென்று அருலியரோ எனக்கூட்டுக.

இதன்பொருள்: ஆன்றோருள் கணவ = நற்குணநற்செய்கைகளால் நிறைந்த நல்லோரின் கணவனே; சான்றோர் புரவல = பெரியோர்களைப் பேணிப்புரப்பவனே. அடுபோர்க் கொற்றவ = பகைவரைப் பாழ்செய்யும் பெரும்போர் செய்ய வல்லவனே! இன்னிசைப்புணரி இரங்கும் = இனியஓசை எழுப்பும் அலைகள் ஓயாது ஒலிக்கும். பௌவத்து நன்கல. வெறுக்கை = கடல்வழியாக வந்த சிறந்த செல்வங்கள். துஞ்சும் பந்தர் = தேங்கிக்கிடக்கும் பண்டக சாலைகளையும். தாழை கமழும் கானலம் பெருந்துறை = தாழை மணக்கும் கானற்சோலைகள் உள்ள பெரிய கடற்றுறைகளையும். தண்கடல் படப்பை = குளிர்ந்த கடலைச்சேர்ந்த வளம்மிக்க நிலப்பகுதிகளையும் உடைய. நன்னாட்டுப் பொருந = நல்ல நாடாளும் போரில் வல்லவனே! செவ்வூன் தோன்றா = தன்னோடு கலந்த சிவந்தஊன் தோன்றாவாறு அரைத்த. முதிரை வெண்துவை = துவரையால் ஆன வெண்ணிறத் துவையலையும். வால்ஊன் வல்சி = வெள்ளிய ஊன் பெய்து ஆக்கிய சோற்றையும் உண்ணும். மழவர் மெய்ம்மறை = மழவர் என்ற வீரர்க்கு மெய் புகுகவசம் போல் நின்று பணிகொள்பவனே! குடவர் கோவே = குடநாட்டவரின் தலைவனே! கொடித்தேர் அண்ணல் = வெற்றிக்கொடி பறக்கும் நெடிய தேர்ஏறி வரும் தலைவனே! இரவலர் வாராராயினும் = நாட்டில் வறுமை இன்மையால் இரவலர் வாராது போயினும். வேண்டி = அவர்களை அழைத்துப்பொருள் அளிக்கும் பெருவாழ்வைப் பெறுவான் விரும்பி, தேரில் தந்து = பிறநாடுகளிலிருந்து தேரில் கொணர்ந்து. அவர்க்கு ஆர்பதன் நல்கும் = அவர்களுக்கு

உண்ணும் உணவினை நனிமிகக் கொடுக்கும். நகைசால் வாழ்மொழி = கேட்டார் பிணிக்கும் இன்சொல்லே வழங்கும். இசைசால் தோன்றல் = புகழ்பெற்ற தலைவனே! பெரும = பெருமானே! நனந்தலை வேந்தர் = பெருநாடு ஆளும் பேரரசர்கள். அல்கலும் தார்அழித்து அலற = நாள்தோறும் தம்தூசிப் படைஅழியக் கண்டு ஆற்றாது புலம்புமாறு. நீடுவரை அடுக்கத்த நாடு கைக்கொண்டு = பெரியமலைப்-பக்கத்தைச் சேர்ந்த அவர்நாட்டின் பகுதியைக்கைக்கொண்டு. பொருது சினம் தணிந்த செருப்புகல் ஆண்மை = போரிட்டுத் தீர்ந்தமையால் அவர் பால் கொண்ட சினம் தணியப் பெற்ற போர்விரும்பும் பேராண்மையினையும், தூங்குநர் தகைத்த ஒள்வாள் = அறியாதுவந்து எதிர்த்தவர்களை அழித்தொழித்த ஒளிவீசும் வாட்படையினையும், ஓங்கல் உள்ளத்துக் குருசில் = உயர்ந்த உள்ளத்தையும் உடைய குருசிலே! நின்நயந்து வந்தனென் = உன்னை விரும்பி உன்பால் வந்துளேன் யான். வேண்டுவ அளவையுள் யாண்டு பலகழிய = உனக்கு வேண்டும் ஆண்டுகள் எனஅறிந்து உனக்கு வகுத்த உன்வாழ் நாளில் பலஆண்டுகள் கழிந்துபோக. நின்நாள் = உள்ள உன்வாழ்நாட்கள். பெய்து புறம் தந்து = முதற்கண் பெருமழை பெய்து உலகத்து உயிர்களை ஓம்பி. பொங்கல் ஆடி = பின்னர்ச்சிறுசிறு பிசிராசிப் பரந்து. விண்டு சேர்ந்த வெண்மழை போல = மலையை அடைந்து பயற்றுப் போகும் வெண்முகில் போல. சென்று அருலியர் = பயன்இன்றிக் கழிந்து விடாவாகுக.

பாணர் போலும் இரவலர்கள் தம்மைத் தேடிவந்து தம் வாயிற்கண் நின்று பொருள் வேண்டும் நிலைவாய்க்காத போது புரவலர்கள், அவ்விரவலர்களைக் கூவி அழைத்துப், பொருள் வழங்குவர் என்பது மதுரைக்காஞ்சி வரிகளாலும் உறுதியாதல் காண்க:

''பாணர் வருக! பாட்டியர் வருக!!
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக! என
இருங்கிளைப் புரக்கும் இரவலர்க்கு எல்லாம்
கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடு வீசி''.

—மதுரைக்காஞ்சி: 749-752.

6. வேந்து மெய்ம் மறந்த வாழ்ச்சி

சேரநாட்டுத் தலைநகரில் அன்று ஒரு பெரிய விழா. விழாவிற்கும் சிறப்பளிக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் ஆங்காங்கே நிகழ்ந்து கொண்டிருந்தன. ஆடுகோட்பாட்டுச்சேரலாதனோடு சென்று, அந்நிகழ்ச்சிகளைக் கண்டு களித்து வந்த புலவர், ஓரிடத்தே, கூத்தர்களின் முழாமுழங்கக் கேட்டு, சேரலாதனை யும் அழைத்துக் கொண்டு ஆங்குச் சென்றார். கூத்தர்களின் முழாவொலிக்கு ஏற்ப, ஆடல்புரியும் வீரர்களின் ஆடல்திறம் கண்டு களித்துக்கொண்டிருந்த மக்கள் திரள், ஆங்குத் தங்கள் மன்னனைக் காணவே, வீரர்க்குள் வீரனாகிய அவன் ஆட்டத்தைக் காணும் ஆர்வம் பெருக, அவனையும் களத்திற்கு அழைத்துச் சென்றனர். ஆனால், அவ்வாட்டத்தைப் பண்டு ஆடிப் பழகி அறியாமையால், வீரர்களுக்கு ஒப்பாக அவனால் ஆடமுடியவில்லை. மன்னனின் முடியாமை கண்ட மக்கள், அவனை நகையாடத் தொடங்கினார்கள். ஆடுகோட்பாட்டுச் சேரலாதனோ செய்வதறியாது விழிக்கத் தொடங்கினான். அப்போது, அம்மக்கள் கூட்டத்தின் இடையே இருந்து, ஆடற்காட்சிகளைக் கண்டு களித்திருந்த புலவர், ஆடரங்கு புகுந்து, மக்களின் எள்ளல் சிறுமொழிகளை அடக்கிவிட்டு, "சேரநாட்டு மக்களே! உங்கள் மன்னன், இதோ நிற்கும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், கூத்தாடிகள் ஆடும் இவ்வாட்டத்தில் தன் திறம் காட்டமாட்டாச் செயலால், மன்னன் புகழ் பெருகுவதல்லது குறைவுறாது. இவன், இக்கூத்தாடும் களத்தில் ஆடப்பிறந்தவன் அல்லன். அவன் ஆடவேண்டிய இடமும் காலமும் வேறே; ஆங்கு அந்த ஆட்டத்தில் இவனை வெற்றி கொள்வது எவர்க்கும் ஆகாது. வெற்றிப் போர் முரசு முழங்கக் கேட்ட அக்கணமே, உழிஞை மலர்சூடி,

பொற்பூண் விளங்கும் கையில் பெரிய வாள் ஏந்திக் களம் புகுந்து, தன் ஆற்றல் அறியாது தன்னோடு பகை கொண்டு போர் தொடுத்து வரும் வேந்தர்கள் மீது பாய்ந்து போரிட்டு, அவர்கள் இவ்வுலக வாழ்வை மறந்து, அவ்வுலக வாழ்வைப் பெறுமாறு, அவர் உடல்களை வெட்டிச் சாய்த்து விட்டு, அவ்வெற்றிக் களிப்பால், போர்க்களத்தின் இடையே, தன் பொற்றேர் மீது நின்று, வாளை உயரத் தூக்கியவாறே, போர் முரசின் முழக்கிற்கு ஏற்ப ஆடுவதில், இவனுக்கு நிகர் இவனே; இவன் ஆடப்பிறந்த ஆடல் அது; அதில் வல்லன் இவன். இதில் வல்லனல்லனாதல் இவனுக்கு இழிவு தருவதாகாது. ஆகவே, இவன் வாழ, இவன் கண்ணி வாழ யானும் வாழ்த்துகின்றேன்; நீங்களும் வாழ்த்துங்கள்!'' எனக் கூறி, இழித்தும் பழித்தும் உரைத்த அவர் வாய்கள், அவனை வாழ்த்த வழிவகுத்து, மன்னன் மானத்தைக் காத்தார்.

வேந்தர்கள் மெய் மறத்தலாவது, இவ்வுலக வாழ்வு இழத்தலே ஆயினும், நிலையில்லாத இவ்வுலக வாழ்வு இழந்த அவர்கள், அதன் பயனாய் அடையப் போவது, நிலை-யேறுடைய அவ்வுலக வாழ்வு ஆதலின், வேந்தர்கள் மெய்ம் மறத்தலான் வரும் இறப்பினை, வாழ்ச்சி எனும் பெயர் கொடுத்து அழைத்த சிறப்புடைமையால் **வேந்தர் மெய்ம் மறந்த வாழ்ச்சி** என்ற தொடரே, அச்செய்யுட்குப் பெயராய் அமைந்துளது.

56 ''விழவு வீற்றிருந்த வியலுள் ஆங்கண்
கோடியர் முழவின் முன்னர் ஆடல்
வல்லான் அல்லன்; வாழ்க அவன் கண்ணி !
இலங்கும் பூணன், பொலங்கொடி உழிஞையன்
மடம் பெருமையின் உடன்று மேல்வந்த
வேந்து மெய்ம்மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத்து ஆடும் கோவே''.

முரசம் துவைப்ப வாள் உயர்த்து பூணான், உழிஞையன் களத்து ஆடும்கோ வியலுள் ஆங்கண், முழவின் முன்னர் ஆடல் வல்லான் அல்லன்; வாழ்க அவன் கண்ணி! எனக் கொண்டு கூட்டுக.

இதன்பொருள்:—வலம்படு முரசம் துவைப்ப = வெற்றி முரசம் முழங்க. வாள் உயர்த்து = வாளை உயரத்தூக்கி. இலங்கும் பூணன் = ஒளிவீசும் அணிகள் அணிந்து. பொலங் கொடி உழிஞையன் = பொன்னால் ஆன உழிஞைக் கொடியைச்சூடி. மடம் பெருமையின் = அறியாமை மிகுதி-யால். உடன்றுமேல் வந்த = பகைகொண்டு தன்மேல்வந்த. வேந்து = பேரரசர்கள். மெய்ம்மறந்த வாழ்ச்சி = தம் உடம்பை மறந்து, அழியா வீட்டுலக இன்ப வாழ்வைப் பெறுதலால். வீந்து உகு = இறந்து வீழும். போர்க்களத்து = போர்க்களத்தில். ஆடுங்கோ = வெற்றிக்கூத்து ஆட-வல்லவனாகிய வேந்தன். விழவு வீற்றிருந்து = விழா நிகழ்ச்சிகள் மிகச் சிறப்புற நிகழும். வியலுள் ஆங்கண் = அகன்ற ஊரில். கோடியர் முழவின் முன்னர் = கூத்தர்களின் முழாவோசைக்கு ஏற்ப. ஆடவல்லான் அல்லன் = ஆடும் தொழிலில் வல்லவன் அல்லன். அவன் கண்ணி வாழ்க = அவன் தலைமாலை வாழ்வதாக.

7. சில்வளை விறலி

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் கொடைப் புகழ் கேட்டு, அவன்பால் பேரன்பு கொண்ட புலவர் காக்கைப்-பாடினியார் நச்செள்ளையார், வேறுசில விறலியர்களையும் உடனழைத்துக் கொண்டு சேரநாட்டுத் தலைநகர்க்கு வந்து சேர்ந்தார். சேரலாதனைக் கண்டு பரிசுபெறும் பெருவேட்கையுடையராய் வந்த புலவர்க்கு, ஆங்குப் பெரியதொரு ஏமாற்றமே காத்துக் கிடந்தது. அரண்மனையில், ஆடுகோட்-பாட்டுச் சேரலாதன் இல்லை. தலைவாயிற் காவலனை அணுகி வினவ, அவன், "வாகை பலசூடி, வெற்றிவிழாக் கொண்டாடி, அதற்கு அறிகுறியாகத் துணங்கைக் கூத்தாடிய எம் கோமான், 'எம்மை வெல்பவர் இவ்வையகத்தில் இலர்' என வஞ்சினம் வழங்கிச் செருக்கித் திரியும் அரசுகளும் சில உளவாதல் அறிந்து, அவர்தம் ஆணவம் அடங்கச் சென்று, அவர் உடற்புண் சொரியும் செங்குருதி வெள்ளத்தால், தன் பனந்தோட்டுக் கண்ணியும், வீரப் பொற்கழலும் செந்நிறம் பெறுமாறு கடும்போர் நிகழ்த்தும் களத்தில் உள்ளான். ஆண்டுச் சென்று காண்மின்" என்றனன்.

காவலன் உரைத்தது கேட்டுக், காக்கைப் பாடினியார் பெரிதும் கவலைக்கு உள்ளானார். அத்துணைத் தொலைவு கடந்து சென்று அவனைக் காண்பது அவரால் ஆகாது. ஆனல், உடன் வந்திருக்கும் விறலியர்களின் வறுமை எவ்வாறாயினும், ஆண்டுச் செல்க எனத் தூண்டுவதாயிருந்தது. ஆதனல், ஆடல் துறைக்கு வேண்டும் ஒரு சில வளைகளையே அணியக்-கற்ற, அத்துணை இளையவராகிய அவ்விறலியர், வயிறுகாய் பசியோடு, வழிநடை வருத்தத்திற்கும் உள்ளாகி, நனிமிக

வருந்துவர் என்றாலும், வறுமையின் கொடுமை, அதுதீர்க்கும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்பால் செல்லத் துரத்தவே, ''விறலியர்காள்! செல்லும் வழிகள், புல் நிறைந்தும் பரல் மறைந்தும் மெத்தென்றே இருக்கும். அவ்வழியில் விரைந்து ஓடாது பையப் பைய நடந்து சென்றால், வழிநடை வருத்தம் தோன்றாது. அவ்வழிச் சென்று, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் கண்டு, தம்மிடையேயிருந்து எழும் இன்னொலி கேட்கும், ஆறலைகள்வர்போலும் கொடியவர்களின் வாள்பிடித்த கைகளையும் வணங்கப்பண்ணும்பெருமை வாய்ந்த நரம்புகளைக்கொண்ட பேரியாழில், குரல் என்னும் நரம்பினை மீட்டி, பாலைப்பண்ணை எழுப்பி, அழியுநர் புறக்கொடை அயில்வேல் ஒச்சா, அவன் கழிதறுகண்மையைப் பொருளாகக் கொண்டபாடலைப் பாடிப் பரிசில்பெறச் செல்வோம் வருதிரோ?'' என்று மெல்ல வினவினார்.

சேரநாட்டின் தலைநகர் வந்து சேர்வதற்கே அவ்விறலியர் பெரும்பாடுபட்டு விட்டனர். அந்நிலையில், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் பாசறை கொண்டிருக்கும் பகைப்புலம் சென்று சேர்வது தம்மால் இயலுமோ? என்ற முடியாமை ஒரு புறம் இருக்க, பகைவெல்லும் உள்ளம் உடையனாய்ப் பாசறை வாழ்க்கை மேற்கொண்டிருக்கும் அவன், ஆங்கடையும் தமக்குப் பரிசில் அளிப்பனோ என்ற ஐயமும் ஒருபால் எழவே, வாய்திறந்து விடைமொழி தாராது வாளா இருந்தனர். ஆனால், முகக்குறிப்பால் அகக்குறிப்பறியும் முதறிவு படைத்த நச்செள்ளையார், அவர் உள்ளக் கருத்தை உணர்ந்து கொண்டார். அதனால், ''விறலியர்காள்! சென்றால் அவன் பரிசில் தருவனோ என்ற ஐயம் உங்கட்குவேண்டாம். அவனை யான் நன்கு அறிவேன். மனைமாட்சியின் நன்கலம், பெறத் தக்கபேறுகளுள் தலையாயபேறு,என்றெல்லாம் பாராட்டத்தக்க மக்கள் செல்வத்தைத் தந்தவர், என்ற சிறப்போடு, பொன்-

வளம் காட்டும் சிலம்பு முதலாம் அணிபல் அணிந்தும், அடக்கம் முதலாம் அரிய ஒழுக்க நெறி நின்றும், விருந்தோம்பல் வாழ்க்கைக்கு வளம் என்பதுபோலும் அறிவுநலம் வாய்க்கப் பெற்றும், தற்காத்தும், தற்கொண்டான் பேணியும் பெறலாகும் புகழ்பல பெற்றும், தன்அன்பைக் கவர்ந்தவராகிய தன் ஆருயிர்க் காதலியரின் கண்களில் நீர்சுரக்கக் காணினும், காண்பன்; தன்பால் பொருள் வேண்டிவரும் இரவலர்களின் கண்ணீர்த்துளிகளைக் காணப்பொறுன் அவன். ஆகவே, அவன்யாண்டு இருப்பினும், எத்தொழில் மேற்கொண்டு இருப்பினும் நம்மைக் கண்ட அப்போதே, அன்பு காட்டி வரவேற்று, நாம் விரும்புவ எல்லாம் வழங்குவன். ஆகவே, ஆண்டுச் செல்லத்துணிந்தோம் யாம்; நீவிரும் வருதிரோ?'' என உடன்பாட்டு வினு எழுப்பி, உடன் அழைத்துச் செல்ல வழிவகுத்தார்.

விறலியராவார், மெய்ப்பாடுதோன்ற ஆடவல்லவராவர்; அவ்வாறு ஆடல் தொழில் மேற்கொள்ளும் மகளிர், அவ்வாடல் தொழிற்கு ஏற்ற, இளமையுடையராதலும் வேண்டும். ஈண்டுக் கூறும் விறலியர், அத்தகு இளமை நலம் வாய்க்கப் பெற்றவர் என்பதை, பலவளை அணியும் பெதும்பைப் பருவத்தார் போலாது, சில்வளையே அணியும் வனப்புடையார் என்பதால், உணர்த்திய சிறப்பால், **சில்வளை விறலியர்** என்ற தொடரால், இப்பாட்டிற்குப் பெயர் சூட்டியுள்ளார்கள்.

57. ''ஓடாப் பூட்கை மறவர் மிடல்தப,
இரும்பனம் புடையலொடு வான்கழல் சிவப்பக்,
குருதி பனிற்றும் புலவுக் களத்தோனே,
துணங்கை ஆடிய வலம்படு கோமான்;
மெல்லிய வகுந்தின் சீறடி ஒதுங்கிச்

செல்லா மோதில்? சில்வளை விறலி!
பாணர் கையது பணிதொடை நரம்பின்
விரல்கவர் பேரியாழ் பாலைபண்ணிக்
குரல்புணர் இன்னிசைத் தழிஞ்சிபாடி,
இளந்துணைப் புதல்வர் நல்வளம் பயந்த
வளங்கெழு குடைச்சூல், அடங்கிய கொள்கை,
ஆன்ற அறிவின், தோன்றிய நல்லிசை,
ஒண்ணுதல் மகளிர் துனித்த கண்ணினும்
இரவலர் புன்கண் அஞ்சும்
புரவு எதிர்கொள்வனைக் கண்டனம் வரற்கே'',

துறை: தும்பை அரவம்
வண்ணம்: ஒழுகுவண்ணம்
தூக்கு: செந்தூக்கு
பெயர்: சில்வளை விறலி

விறலி! கோமான் புலவுக் களத்தோன்; புரவு எதிர்கொள்வனை பாலைபண்ணி தழிஞ்சிபாடி கண்டனம் வரற்குச் செல்லாமோ எனக் கூட்டிப் பொருள் கொள்க.

இதன் பொருள்: சில்வளை விறலி=சிலவளையே அணியும் இளம் விறலியே! துணங்கை ஆடிய வலம்படு கோமான் = வெற்றிக்கு அறிகுறியாகத் துணங்கைக் கூத்தாடிய வீரத்திருமகனாகிய ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். ஓடாப்பூட்கை = போரில் புறங்காட்டாமையினைக் கொள்கையாகக் கொண்ட பகைநாட்டு வீரர்களின். மிடல்தப = வலிகெட்டு அழிதலால். இரும்பனம் புடையலொடு வான்கழல் சிவப்ப = தான் அணிந்து சென்றிருக்கும் பெரிய பனந்தோட்டால் ஆகிய மாலையோடு பெரிய வீரக்கழலும் செந்நிறம் பெறுமாறு. குருதி பனிற்றும் = அவ்வீரர்களின் உடற்குருதி

துளித்துப் பரவும். புலவுக் களத்தோன் = புலால்நாறும் போர்க்களத்தில் உள்ளான். இளம் துணைப் புதல்வர் = இளமையும், முதுமைப் பருவத்தில் துணையாம் தன்மையுடை-யாருமாகிய புதல்வர்களாம். நல்வளம் பயந்த = நல்ல செல்வத்தைப் பெற்றளித்தவரும். வளங்கெழு குடைச்சூல் = வளம் பொருந்திய பொன்னால் செய்த சிலம்பையும். அடங்கிய கொள்கை = அடக்கம் முதலாம் ஒழுக்க நெறிகளை யும். ஆன்ற அறிவின்=நிறைந்த அறிவினையும். தோன்றிய நல்லிசை = பலரும் பாராட்டும் பெரிய புகழையும். ஒண்ணுதல் = ஒளிவீசும் நெற்றியையும் உடையவரும் ஆகிய. மகளிர் = மனைவியரின். துனித்த கண்ணினும் = ஊடல் கொண்டு உறுத்து நோக்கும் கண்களைக் காட்டிலும். இரவலர் புன்கண் அஞ்சும் = இரவலர்களின் வறுமைத் துயர்காட்டும் கண்நோக்கிற்கே அஞ்சும். புரவு எதிர்கொள்வனை=இரவலர் களைப் புரப்பதையே தொழிலாகக் கொண்டு வாழ்பவனாகிய அச்சேரலாதனை. பாணர் கையது = நம் பாணர் கையில் உள்ளதும். பணிதொடை நரம்பின் = பணியாதாரையும் பணிவிக்கும் இன்னிசை எழுப்பும் நரம்புகளை உடையதும். விரல்கவர் பேரியாழ் = விரலால் தடவிஇசை எழுப்ப வல்லது மாகிய பேரியாழில். பாலை பண்ணி = பாலைப் பண்ணை எழுப்பி. குரல்புணர் இன்னிசை = குரல் என்னும் நரம்போடு இணைத்து எழும் இசையில். தழிஞ்சி பாடி = தழிஞ்சி எனும் துறைஅமைந்த பாடலைப்பாடி. கண்டனம் வரற்கு = சென்று கண்டு பரிசில் பெற்று வருதற்கு. மெல்லிய வகுந்தின் = மெத்தென்ற நிலத்தில் அமைந்து கிடக்கும் வழியில். சீறடி ஒதுங்கி = சிறிய கால்களில் பையப்பைய நடந்து. செல்லாமோ = செல்வோம் வருதியோ?

8. ஏவிளங்கு தடக்கை

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் மலைநாட்டான் ஆதலின், காதுவெளுக்குமாறு பேரிரைச்சல் செய்யும் சில்வீடு எனும் வண்டுகள், துளை செய்துகொண்டு வாழும் பொரித்த அடி மரத்தையும், சின்னஞ்சிறு இலைகளையும் உடையவாகிய, வேல மரங்களே மலிந்த மலைக்காட்டு நிலமாகிய ஆங்கு, நெல்லும் கரும்பும் போலும், நன்செய்ப்பொருள்வளம் இல்லையாயினும், அதனால் அது குறைபாடுடையதாகாது. அந்நிலங்களை உழுது பயன்கொள்ளும் உழவர்களின் அயரா உழைப்பிற்-கேற்ற பெரும்பயனை வழங்க, அவ்வன்னிலங்கள் தவறுவதில்லை. மழைவளம் காணு அம்மேட்டுநிலங்களைப், பெரிய கலப்பைகளில், உரம்மிக்க காளைகளைப் பூட்டி ஆழஉழுங்கால், அவ்வன்னிலத்துக்கு அடியில், மறைந்துகிடக்கும் மாணிக்கங்கள், தாமே வெளிப்பட்டுப் படைச்சால்தோறும் பேரொளிகாட்டித் தோன்ற, உழவர்கள், உழுதொழில் மேற்-கொண்ட அப்போதே, பெரும்பயன் பெற்றுவிடுவர். அத்தகு பெருவளம் மிக்க பரந்த நாட்டை ஆட்சிபுரிந்து வந்தான் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்.

அவன்நாடு, அத்துணைச் செல்வநலம் உடையதாகவும், அவன் புகழ்பாடும் பெரியோர்கள், அவ்வளம் காட்டி அவனை வாழ்த்துவது இலர். நாடு அளிக்கும் நல்வளம் அது. ஆகையால், அது, அவனுக்குப் புகழ் அளிப்பதாகாது. மேலும், தம்புகழைத் தாமே ஈட்டிக்கொள்ள அறியாதாரே, தம்நாடு அளிக்கும் நலத்தால் தம்புகழ் நாட்ட நினைப்பர். அக்குறைபாடு, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுக்கு இல்லை. தன் ஆண்மை ஆற்றல்களினாலேயே பெரும்புகழ் நாட்ட வல்லவன் அவன்.

உண்மையான வீரனுக்குரிய பண்புகளால் நிறைந்தவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். அவன் மட்டும் அன்று; அவன்கீழ்ப் பணிபுரியும் அனைத்து வீரர்களும் அவனைப் போலவே பண்புமிகு பெருவீரராவர். தாம் சேரர்படைவீரர் என்பதை உணர்த்தும் பனந்தோட்டு மாலையை, அவர்கள் என்றும் மறந்து அறியார். தாம் விரும்பும் குவளைமலர்க் கண்ணியையும், அப்பனந்தோட்டின் வெண்ணார் கொண்டே தொடுத்துக் கொள்வர். 'அரசகுலத்தவர்பால் அத்துணைய, மாறா அன்புடைய அவர்கள், களம்பலபுகுந்து, வாள்வடுப் பெறுவதை வாழ்வின் பேறாகக்கொண்டு, அத்தகைய விழுப்-புண்கள் பல விளங்கும் பருவுடல் உடையவராவர். பகை-வர்க்கு இடியேறு போலும் பெருங்கேட்டினை விளைக்கவல்ல தம் கைகளில், பகைவர் உயிர்குடிக்கும் கொடிய படைக் கலங்களை ஏந்தும்போதும், "வேந்தன் அளித்த செஞ்சோற்றை, இன்று வயிறுபுடைக்க உண்டோம். நாளை, பகையரசர்களின் பற்றற்கரிய பெரிய கோட்டைகளைக் கைக்-கொண்டு உட்புகுந்து, ஆங்கு உண்பதல்லது வெற்றி காணாது வெளியே கிடந்து உண்ணோம்" என்ச்சூளுரை புகன்றவாறே படைக்கலம் ஏந்தும் அவர்கள், தாம் உரைத்த சூள் பொய் படாவாறு அரும்போர் ஆற்றவல்லவரும் ஆவர். அம்மட்டோ! அவர்கள் உரைத்தவஞ்சினம் என்றும் பொய்யாகாது. வஞ்சினம் வழங்கும் தங்கள் நாக்கிற்கு, ஓர் இழுக்கு நேராவாறு, அவ்வஞ்சினம் வாய்ப்ப வென்று, "பொய்யா நாக்கு" என்ற பெருமையைத் தங்கள் நாக்கிற்குச் சூட்ட வல்லவர். மேலும், எளிதில் அழிக்கலாகா அகலமும் திண்மை-யும் வாய்ந்தவை எனப் பாராட்டத்தக்க, பகைவர்களின் பெரிய பெரிய அரண்களையெல்லாம், எளிதில் பாழாக்கவல்ல பெரியவில்லையும், கூரிய அம்புகளையும் பணிகொள்ளவல்ல கைவன்மை வாய்க்கப் பெற்றவர். விற்போர் புரிந்து புரிந்து, விரிந்துஅகன்ற மார்புடையராகி மாண்புமிகப் பெற்றவர்.

தன்குலத்தவர் அனைவரையும் பொதுவகையால் குறிக்கும் வானவரம்பர் என்ற பெயர், தன்பெருநிலையால் தனக்கே உரித்தாகப் பெற்ற ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், அத்தகு பெருவீரர்களையே தேர்ந்து, தன்படையில் பணி-யாற்றச் செய்தும், அவர்க்கு, உணவு உறையுள்களால் குறைநேராவாறு நின்று காத்தும் பெருமையுற்று விளங்கினன்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், தன் அறிவு ஆற்றல் களால் பெற்ற இப்புகழே, அவனுக்குப், பெருமை அளிப்ப-தாகும் என உணர்ந்த ஆன்றோர்கள், அவன், அத்தகு வளநாடு உடையனாகவும், அதுகூறி, அவனைப் பாராட்டாது, அவன் படையில் பணிபுரியும் போர்வீரர் பெருமைகளையும், அவ்வீரர்களை ஓம்பிப் பணிகொள்ளும், அவன் பெருமை-களையும் கூறியே பாராட்டுவராயினர்.

அம்மரபுகண்டு மகிழ்ந்த புலவர் காக்கைப் பாடினி-யாரும், அவன்பால் பரிசில் பெற விரும்பும் விறலியர், அவன் ஆண்மை தோன்றும் ஆடல்களே மேற்கொள்வாராக! பாணர்கள், அதுவே பொருளாகக் கொண்டு, பாட்டிசைப்பார்-களாக! என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வீரராவார், பெரிய கைகளை மட்டும் பெற்றிருப்பதாலோ, கூரிய அம்புகளை மட்டும் கொண்டிருப்பதினலோ, பயன் பெறுவார் அல்லர்; அவ்வம்புகளை எய்யும் திறம் அறிந்து எய்யவல்ல அறிவும் ஆற்றலும் அமைந்த கையுடையராய வழியே பயன் பெறுவர். இந்த உண்மையை, **ஏ விளங்கு தடக்கை** என்ற தொடர், உணர்த்துவதால், அத்தொடரே, இச்செய்யுட்டொடருக்குப் பெயராய் அமைந்து பெருமை தருகிறது.

58. ''ஆடுக விறலியர் ! பாடுக பரிசிலர் !
வெண்தோட்டு அசைத்த ஒண்பூங்குவளையர்,
வாள்முகம் பொறித்த மாண்வரி யாக்கையர்,
செல்உறழ் மறவர்தம் கொல்படைத் தரீஇயர்
'இன்று இனிது நுகர்ந்தனம்ஆயின், நாளை
மண்புனைஇஞ்சி மதில் கடந்தல்லது
உண்குவம் அல்லோம் புகா' எனக்கூறிக்
கண்ணிகண்ணிய வயவர் பெருமகன்!
பொய்படுபு அறியா வயங்கு செந்நாவின்,
எயில்எறி வல்வில், ஏவிளங்கு தடக்கை
ஏந்துஎழில் ஆகத்துச் சான்றோர் மெய்ம்மறை!
வானவரம்பன் என்ப, கானத்துக்
கறங்கிசைச்சிதடி பொரியரைப் பொருந்திய
சிறியிலை வேலம் பெரிய தோன்றும்
புன்புலம் வித்தும் வன்கைவினைஞர்
சீருடைப் பல்பகடு ஒலிப்பப் பூட்டி
நாஞ்சில் ஆடிய கொழுவழி மருங்கின்
அலங்குகதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடுகிழவோனே''

துறை : செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம் : ஒழுகுவண்ணம்
தூக்கு : செந்தூக்கு
பெயர் : ஏவிளங்கு தடக்கை

நாடு கிழவோனே (12-19), வயவர் பெருமகன் (2-8) சான்றோர் மெய்ம்மறை (9-11) வானவரம்பன் என்ப(12). ஆகவே அதுவேகூறி, விறலியர்காள் ஆடுக! பரிசிலர்காள் பாடுக! (1) எனக்கூட்டிப்பொருள்கொள்க.

இதன் பொருள் : கானத்துக் கறங்கு இசைச் சிதடி = காடுகளில் ஒலிக்கும் பேரிரைச்சலையுடைய சில்வீடு எனும்

வண்டுகள் வாழும். பொரிஅரை பொருந்திய = பொரித்த அடிமரத்தை உடையவாகிய. சிறியிலை வேலம் = சிறிய இலைகளைக் கொண்ட வேலமரங்கள். பெரிய தோன்றும் = மிகுதியாகத் தோன்றும். புன்புலம் வித்தும் = புன்செய்களை உழுது பயிர் செய்யும். வன்கை வினைஞர் = வன்மைமிகு கைகளையுடையவராகிய உழவர். சீருடைப் பல்பகடு = செய்யும் தொழிலில் சிறப்புவாய்ந்த பலஎருதுகளை; ஒலிப்பப்பூட்டி = அவற்றின் கழுத்து மணிகள் ஒலி எழுப்புமாறு பூட்டி; நாஞ்சில் ஆடிய கொழுவழி மருங்கின் = கலப்பை கொண்டு உழுத கொழு சென்ற படைச்சால்களின் பக்கத்தில். அலங்கு-கதிர்த் திருமணி பெறூஉம் = விட்டு விட்டு ஒளிகாட்டும் ஒளிக்கதிர்களையுடைய அழகிய மாணிக்க மணிகளைப் பெறும். அகன்கண் வைப்பின் நாடுகிழவோன் = அகன்ற இடங்களைக் கொண்ட பேரூர்களையுடைய நாட்டிற்கு உரியோனாகிய ஆடுகோட்பாட்டுச்சேரலாதனை. வெண்தோட்டு அசைந்த ஒண்பூங் குவளையர் = வெள்ளி பனந்தோட்டு நாரினால் கொடுத்த ஒள்ளிய நிறம் காட்டும் குவளைமலர் மாலையுடைய-வராய் வாள்முகம் பொறித்த மாண்வரியாக்கையர் = வாள் முனையால் வகுப்பட்ட மாண்புமிகு தழும்புகளையுடைய உடம்பினராய். செல்உறழ் மறவர் = பகைவர்க்கு இடியேறு போலும் கேடு விளைக்கும் மறமாண்பு உடையராய். தம்கொல் படை தரீஇயர் = தங்கள், பகையழிக்கும் பெரும் படைக்கலங்களை ஏத்திவருவார். இன்று இனிது நுகர்ந்தனம் ஆயின் = இன்று, நுகரக்கடவ உணவுகளை இனிதே நுகர்ந்தேமாயினும். நாளை = நாளை. மண்புனை இஞ்சி மதில் கடந்தல்லது புகா உண்குவம் அல்லேம் = மண்ணை அரைத்துக் கட்டிய பகைவர்களின் அரண் மதில்களைக் கடந்தபின் அல்லது உணவு உட்கொள்வேம் அல்லேம். எனக்கூறி = என்று வஞ்சினம் வழங்கி. கண்ணி கண்ணிய வயவர் = தாம் அணிந்த தலைமாலைக்கு ஏற்பத் தலையாய வெற்றிகொள்ளும் வீரர்களுக்கு.

பெருமகன் = தலைவன் என்றும். பொய் படுபு அறியா வயங்கு செந்நாவின் = தாம் கூறும் சூளுரை என்றும் பொய்த்துப் போதலை அறியாத, வாய்மையால் விளக்கம் பெற்ற செவ்விய நாவினையும். எயில்எறிவல்வில் ஏவிளங்கு தடக்கை=பகைவர் மதில்களை எறிந்து பாழாக்கும், வலிய வில்லும் அம்பும் விளங்கும் பெரிய கைகளையும். ஏந்து எழில் ஆகத்து=உயர்ந்த அழகிய மார்பினையும் உடைய. சான்றோர் மெய்ம்மறை = வீரர்க்கு மெய்புகு கவசம் போன்ற காவல் அளிப்பவன் என்றும். வானவரம்பன் = வானவரம்பன் எனும் பெயருடையான் என்றும். என்ப = கூறுவர். ஆகவே, விறலியர் ஆடுக = விறலியர்காள் அதுவே கூறி ஆடுவீராக! பரிசிலர் பாடுக = பரிசிலர்காள்! அதுவே கூறிப் பாடுவீராக!.

சேரர் ஆட்சிக்குட்பட்ட மலைநாட்டு மண், மணி வளம் மிக்கது. ஏர் கொண்டு உழும்போதே கலப்பையின் கொழுமுனைகள், மண்ணில் புதைந்து கிடக்கும் மணிகளை மேலே கொணர்ந்து விடும்; இந்த வளத்தைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாராட்டுவது போலவே, கானவர், கிழங்கு தேடிப் பழங்குழிகளை அகழ்ந்த வழி. ஆங்குக் கிழங்குகளோடு மணிகளும் காணப்படும், ''குன்றத்துப் பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு கண்ணகன் தூமணி பெறூஉம்'' (குறுந்தொகை : 379); கானவன் யானைக் கொம்பு கொண்டு, மலைப்பாறைகளைப் பொன் தேடிப் பிளந்த வழி, ஆங்குப் பொன்துகள்களோடு மணிகளையும் பெறுவன், ''கானவன், பொருது தொலை யானை வெண்கோடு கொண்டு நீர் திகழ் சிலம்பின் நன்பொன் அகழ்வோன், கண்பொருது இமைக்கும் திண்மணி கிளர்ப்ப'' (அகம் : 282) எனப் பிற சான்றோர்களும் பாராட்டுவர்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் வீரர்கள், ''இன்று இங்கு உணவு உண்டோம்; நாளை கோட்டையை வென்று

கைக்கொண்டல்லது உண்ணோம்'' என வஞ்சியை கூறிக் களம் புகுவது போலவே, போர் படைத் தலைவர்களும், பேரரசர்களும் போர்க்களம் புகுவதன் முன்னர் வஞ்சினம் கூறுவது வழக்கமாம்.

''நாளை, மதிலகத்து மன்னவன் மகளை மணங்கொள்வது இயலாதாயின், களத்தில் பகைவர் தம் வேலேறுண்டு வாளகம் புகுந்து விடுவேனாக'',

''சுணங்கணி விளமுலை அவளொடு நாளை
மணப்புகு வைகல் ஆகுதல் ஒன்றே;
ஆரமர் உழக்கிய மறங்கிளர் முன்பின்
நீளிலைஎஃகம் அறுத்த உடம்பொடு
வாரா உலகம் புகுதல் ஒன்று''—புறம் : 341

என வீரன் ஒருவன் உரைக்கும் வஞ்சினம் காண்க.

''பகைவரைப் புறங்காணேனாயின், மனைவியைப் பிரிவேனாகுக; கொடுக்கோல் புரிந்தேன் ஆகுக; நண்பரொடு பெறும் இன்ப வாழ்க்கையை இழப்பேனாகுக; தென்புலம் காக்கும் பாண்டியர் வேற்றுக் குடியில் சென்று பிறப்பேனாகுக''

''அவர்ப் புறம் காணேனாயின், சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக;
அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறை திரிந்து
மெலிகோல் செய்தேனாகுக; ...
கண்போல் நண்பிற் கேளிரொடு கலந்த
இன்களி மகிழ்நகை இழுக்கி, யான் ஒன்றே,
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலம் காவலின் ஒரீஇப் பிறர்

வன்புலம் காவலின் மாறியான் பிறக்கே''

—புறம் 71

என ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனும்,

''சிறுசொல் சொல்லிய வேந்தரை வென்று, அவர் போர் முரசினைக் கைக்கொள்ளேனாயின், குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக; புலவர்கள் என்னைப் பாடாராக; இரப்போர்க்கு ஈயமாட்டா இன்மை வந்தடையுமாக.''

''சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி முரசுகொண்டு
ஒருங்கு அகப் படேஅனாயின்.........
குடிபழி தூற்றும் கோலேன்ஆகுக!..........
புலவர் பாடாது வரைக என் நிலவரை!
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே'',

—புறம்: 72

எனத் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும்,

''சென்று புகும் போர்க்களத்தில், பகைவர் கெட்டழியப் போரிடமாட்டேனாயின், என்மார்பு, குலமகளிரைப் புல்லாது விலைமகளிரைப் புணரும் பழியுடையோன் ஆகுக''

''சென்று அவன்
வருந்தப் பொரேன் ஆயின், பொருந்திய
தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைக என்தாரே''.

எனச் சோழன் நலங்கிள்ளியும், உரைத்திருக்கும் வஞ்சினங்களைக் காண்க.

9. மாக்கூர்த் திங்கள்

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், அருள் நிரம்பிய உள்ளத்தவன். தன்னை அடைந்தாரின் துயர் தீர்த்து வாழ் வளிக்கும் தண்ணளி உடையான். தங்கள் குலக்கொடியும் இலாஞ்சனையுமாக விளங்கும் வில்லைப், படைக்கலமாகக் கொண்டு போர்புரியும் வீரர்களுக்குத் தலைமை தாங்கும் தறுகணாளன். பிறர் எவரும் பெறாத பெருநிலையைப் பெற்று விட்ட பெருமிதத்தால் செம்மாந்து வீற்றிருப்பவராகிய வேந்தர்களுக்கெல்லாம் வேந்தனாக விளங்கும் விறல்படைத்-தவன். தம் நிலைகெட்டு வருவார் அனைவர்க்கும், அடைக்கலம் அளிக்கும் அருளாளன் என்ற அவன் பல்வேறு பெருமைகளை யும் ஒருசேர உணர்ந்தமையால், அவனைக் காணும் ஆர்வமே பெருகி நிற்க, சேணெடும் வழிநடந்து சேரநாடு செல்லற்கு ஏற்புடைக்காலம்தானா என்பதையும் எண்ணிப் பாராமல், பனிக்கொடுமை மிகுந்ததான, பின்பனிக்காலத்து முற்பகுதி யாம் மாசித் திங்களிலேயே, அவன் மாநகர் நோக்கிப் புறப்-பட்டு விட்டார், புலவர் காக்கைப் பாடினியார்.

வேனிற்பருவத்திற்கு வரவேற்பு வழங்கும் காலம் அது வாகலின், பகற்போதில் ஞாயிற்றின் வெய்யிற்கொடுமை தாங்க முடியாததாகும். ஆகவே அக்கொடுமை மிகுவதற்கு முன்பே, வழியின் பெரும்பகுதியைக் கடந்துவிடவேண்டும் என்று கருதிப் பொழுதுபுலரப் பலநாழிகை உள்ள போதே துயில்நீத்துப் புறப்பட்டுவிட்டார். அவரோடு, ஆடுகோட் பாட்டுச்சேரலாதன்பால் பரிசில்பெற விரும்பிய வேறுசில பாணர்களும் வழித்துணையாயினர். மனைப்புறம்போந்து, மாநகர் போகும் பெருவழியில் அடியிட்டதும், பனிக்கொடு-

மெய்ய உணரத்தலைப்பட்டார் புலவர். வறுமையின் கொடுமையால், பொருள்தேடிப்போகும் தம்போலும் ஒருசிலர் தவிர்த்து வேறுஎவரும் அப்பெருவழியில் தென்பட்டாரல்லர். காடு புகுந்து உணவு தேடும் விலங்குகளும், குளிரின் கொடுமையால் அது செய்யாது, கூனிக் குறுகிக் குன்றுந்து கிடந்தன. கொட்டும் பனியால் குளிர்க் கொடுமை மிகுந்துளதேனும், பொழுது புலர்ந்து ஞாயிறு வெளிப்பட்டதும், அத்துயர் தீர்ந்துவிடும் என்பதால், அக் கொடுமையத் தாங்கிக் கொண்டே நடந்து சென்றார். ஆனால், அவ்விரவு, அவர் எதிர்பார்ப்பது போல் அவ்வளவு விரைவில் கழிவதாகக் தோன்றவில்லை. நடக்க நடக்க அது வளர்ந்து கொண்டே சென்றது. உடன்வரும் பாணர் தலைவன், அடிக்கொருமுறை கீழ்வானத்தை நோக்க தலைப்பட்டான். ஆனால், அவர் நம்பிக்கை தகர்ந்ததேயல்லது, ஆங்கு விடிவெள்ளியும் தோன்றியதாகத் தெரிந்திலது. அதனால் அவர் வருத்தம் மேலும் மிகுந்தது. பரிசிற்பொருள்பால் உள்ள பெருவேட்கையால் அக்கொடுமையைத் தாங்கிக் கொண்டு நடந்து சென்றார்கள். பலகாவதம் கடந்ததும், பாணர்தலைவன் திடுமென மகிழ்ச்சிக்குரல் கொடுத்தான். உடனே அனைவரும் கீழ்வானை நோக்கினர். அடிவானத்தில் சிறிதே ஒளிபடர்ந்திருந்தது. அதைத் தொடர்ந்து, விடியற்காலத்துப் புல்இருள் மெல்ல அகல, சிறிது நாழிகைக்கெல்லாம், இரவில், அணுவிற்கும் இடம் இல்லாதபடி, எங்கும் நீக்கமற நிறைந்திருந்த பேரிருள் அனைத்தும் அகன்றுவிட்டது. மேலும் சிலநாழிகைக்கெல்லாம், ஞாயிற்றின் சுடுகதிர்கள் தலைகாட்டவே, பனிமழை இருந்தஇடம் தெரியாது மறைந்து விட்டது. இரவின் இருட்செறிவாலும், பனியின் குளிர்க்கொடுமையாலும் பட்டதுயரம் எல்லாம் பறந்தோடிப்போயின. அம்மனம்நிறை மகிழ்ச்சியால், வழிகளை விரைந்து கடந்து சேரநாடு அடைந்து சேரலாதனைக் கண்டார். கீழ்த்திசையில்

தோன்றி, இருள் அகற்றியும், பனித்துயர் தீர்த்தும் நலம் பயக்கும் இளஞாயிறேபோல், தமிழகத்தின் குடதிசை நாடாம் சேரநாட்டில் தோன்றி, பகையிருள் போக்கியும், பரிசிலர்களின் பசித்துயர் தீர்த்தும் குடிபுரக்கும் ஆடுகோட்பாட்டுச்சேரலா-தனின் நலம்கண்டு நயந்து பாராட்டினர்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் அன்பை நனிமிகப் பெற்று, அவன் புகழ்பாடும் பணிமேற்கொண்டு, அவன் அரசவைப் புலவராய் வீற்றிருக்கப் பெற்றமையால், அவன் பால் அமைந்து கிடக்கும் வேறுபல நலங்களையும் கண்டு கொண்டார். நன்செய் நிலங்கள் நல்கும், செந்நெல் செங்கரும்பு போல்வனவும், காடுகளில் பெறலாகும் யானைக்-கோடு, மான்மதச்சாந்து போல்வனவும், மலைதருபொருள்-களாம் அகில் ஆரம் போல்வனவும் கடல் வாணிகம் வழங்கும் பவளம் முத்து போல்வனவும் ஆகிய நால்வேறு செல்வங்-களையும் நனிமிகப் பெற்றிருந்த அவன், அவற்றை, இரவோர்க்கு ஈதல்போலும், அறநிகழ்ச்சிகளுக்கு இத்துணைய, நாடுகாத்தல் போலும், பொருள் நிகழ்ச்சிகளுக்கு இத்துணைய, வேனில் விழாப்போலும், இன்ப நிகழ்ச்சிகளுக்கு இத்துணைய எனப் பகுத்துப் பயன் கொள்ளும் திறம் உடைமையால், ''ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் இத்துணைப் பேரரசனாய் விளங்குதற்கு, அவன்பால் கிடந்து துணைபுரியும் பண்புகள்-தாம் யாவை?'' எனப் பல்லாற்றானும் ஆராய்ந்து கண்டும், அறிந்து கொள்ளமாட்டாத அவன்அளப்பில் பெருநிலைகண்டு, அவன்பால் கழிபெரும் காதல் கொண்டார் காக்கைப்-பாடினியார்,

அப்போது, அவன் ஆண்மை ஆற்றல்களையும், பண்பு பெருமைகளையும், பண்டு அறியாமையால் அவனோடு பகை

கொண்டு வந்து போரிட்ட அரசர் சிலர், அவனால் வலியழிந்த நிலையில் தம் பிழை உணர்ந்து, அரும் பெரும் பொருள்களைத் திறையாகத் தந்து, பணிந்து வாழ்வு வேண்டி நிற்கவும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், அவர்கள்பால் சென்ற சினம் தணியானாய், அவர் அழிவே கருதினான். ஆடுகோட்பாட்டுச் சேரலாதனோடு அரசவைக்கண் வீற்றிருந்த புலவர், அடைந்தார்க்கு அடைக்கலம் நல்கும் நல்லோனாகிய அவனுக்கு, பகைவர்தம் பிழையுணர்ந்து பணிந்தவழியும், அவர்மீது பகையுணர்வே கொள்வது பொருந்தாது என உணர்ந்து, அதனால் அவன் புகழ் மாசுறுமே என்று அஞ்சி, அக்கணமே தம் இருக்கைவிட்டு எழுந்து, ''சேரலாத ! பண்டு பகைகொண்டு அலைந்தவர், பின்னர்த் தம் பிழை உணர்ந்து, தங்கள்பால் உள்ள அரிய பொருள்களைத் திறையாகத் தந்து பணிந்து விட்ட பின்னர், அவர்கள், நின்னால் புரக்கத்தக்க நண்பர்களேயல்லது பகைவர் ஆவார். அவர் நாடும், உன் அளிபெறத்தக்கதேயல்லது, உன்னால் அழிவு காணத்தக்கது அன்று. ஆகவே, அவர் கொடுப்பனகொண்டு அவர் நாட்டைக் காப்பது, தங்கள் நாட்டின் நலம் நாடும் அவர்கட்கு மட்டுமேயல்லாமல், உனக்கும் கடனாகும். ஆகவே, அக்கடமை நெறியினை இன்றே மேற்கொண்டு, இவர் பிழை மறந்து பிழைத்துப் போக விடுக!'' எனக்கூறி, அவன் புகழ்க் கேடுறுமைக்கு வழிவகுத்து விழுப்புகழ் கொண்டார்.

விலங்குகள் உடல் குன்றும் கொடுமை தருவது, மாசித் திங்களில் பெய்யும் பனியே ஆகவும், அப்பனியின் கொடுமையை, அப்பனிகொட்டும் காலமாகிய மாசித்திங்கள் மீது ஏற்றி, மாவினம் குன்றுதற்குக் காரணமாம் மாசித் திங்கள் என்றுகூறிய உபசார வழக்கு நயத்தால், **மாகூர் திங்கள்** என்ற அத் தொடரால், இச்செய்யுள் பெயர் பெற்றுளது.

59. "பகல் நீடாகாது, இரவுப் பொழுது பெருகி,
மாசி நின்ற **மாகூர் திங்கள்**
பனிச்சுரம் படரும் பாண்மகன் உவப்பப்
புல்இருள் விடியப், புலம்பு சேண் அகல,
பாய் இருள் நீங்கப், பல்கதிர் பரப்பிச்
ஞாயிறு குணமுதல் தோன்றியா அங்கு,
இரவல் மாக்கள் சிறுகுடி பெருக,
உலகம் தாங்கிய, மேம்படு கற்பின்
வில்லோர் மெய்ம்மறை! வீற்றிருங் கொற்றத்துச்
செல்வர் செல்வ! சேர்ந்தோர்க்கு அரணம்!
அறியாது எதிர்ந்து, துப்பின் குறையுற்றுப்
பணிந்து திறை தருப நின் பகைவராயின்,
சினம்செலத் தணிமோ! வாழ்க நின் கண்ணி!
பல்வேறு வகைய நனந்தலை ஈண்டிய
மலையவும் கடலவும் பண்ணியம் பகுக்கும்
ஆறு முட்டுறுஅது அறம்புரிந்து ஒழுகும்
நாடல் சான்ற துப்பின், பணைத்தோள்,
பாடுசால் நன்கலம் தரூஉம்
நாடு புறம் தருதல் நினைக்குமார் கடனே".

துறை: செந்துறைப் பாடாண் பாட்டு
வண்ணம்: ஒழுகு வண்ணம்
தூக்கு: செந்தூக்கு
பெயர்: மாகூர்த்திங்கள்

ஞாயிறு தோன்றியாங்கு, குடிபெருக, உலகம் தாங்கிய கற்பின் வில்லோர்குடியில் தோன்றிய மெய்ம்மறை! செல்வர் செல்வ! சேர்ந்தோர்க்கு அரணம்! பகைவர் பணிந்து திறை தருவராயின் சினம் தணிமோ! பண்ணியம் பகுக்கும் ஆறு முட்டுறுது ஒழுகும் துப்பின் பணைத்தோள் உடைய நினக்கு,

நன்கலம் தருஉம் நாடு புறந்தருதலும் கடனும். வாழ்க நின் கண்ணி! எனக் கூட்டிப் பொருள்கொள்க.

இதன் பொருள்:—பகல் நீடு ஆகாது = பகற்காலம் நீளாமல். இரவுப்பொழுது பெருகி நின்ற = இராக்காலம் நீண்டு செல்லும். மாகூர் மாசித் திங்கள் = விலங்குகள் குளிரால் குன்றுக்கும் மாசித் திங்கள்களில். பனிச்சுரம் படரும் பாண்மகன் உவப்ப = பனிமிக்க கொடிய வழிகளைக் கடந்து செல்லும் பாணன் மகிழுமாறு. புல் இருள் விடிய = புல்லிய இருள் சூழ்ந்த விடியற்காலம் கழிய. புலம்பு சேண் அகல = இருளாலும் குளிராலும் ஆகும் வருத்தம் அறவே நீங்கி ஒழிய. பாய் இருள் நீங்க = இராக்காலத்தே எங்கும் பரந்திருந்த பேரிருள் அகல. பல்கதிர் பரப்பி = தன் ஒளிக்கதிர்கள் முன்னே பரப்பி. ஞாயிறு குணமுதல் தோன்றியாங்கு = பின்னர், ஞாயிறு கீழ்த்திசை அடிவானத்தில் தோன்றியது போல. இரவல் மாக்கள் சிறுகுடி பெறுக = இரவலர்களின் வறுமையால் வாடியகுடி வளம்பெற்றுப் பெருகுமாறு. உலகம் தாங்கிய மேம்படு கற்பின் = உலகை இனிது ஆண்ட மேம்பட்ட ஆட்சியுடையோராகிய. வில்லோர் மெய்ம்மறை= விற்கொடி உயர்த்திய சேரர்குடியில் தோன்றி, மெய்புகுகவகம் போல் நின்று காப்பவனே! வீற்றிருக்கும் கொற்றத்துச் செல்வர் செல்வ = செம்மாந்து வீற்றிருக்கத்தக்க கொற்றம் உடைமையால் சிறந்தோராகிய வேந்தர்க்கெல்லாம் வேந்தனாய் உள்ளோனே! சேர்ந்தோர்க்கு அரணம்=தன்னை அடைந்தவர்க்கு அரணாய் நின்று காப்பவனே! நின்பகைவர் = உன் பகைவர். அறியாது எதிர்ந்து = உன் ஆற்றல் அறியாது எதிர்த்துப் போரிட்டு. துப்பின் குறையுற்று = உன் ஆண்மையால் ஆற்றல் இழந்து. பணிந்து திறை தருவராயின் = பணிந்து வந்து திறை தருவாராயின். சினம் செலத் தணிமோ = பண்டு கொண்ட சினம்கெட அவர்பால்

தண்ணளி கொள்வாயாக! பல் வேறு வகைய நனந்தலை ஈண்டிய = காடும் மேடும் எனப் பல்வேறு வகைப்பட்ட வாய பரந்த நிலங்களில் இருந்து வந்து குவிந்தனவும். மலையவும் கடலவும் = மலைநாட்டிலிருந்தும் கடல் நாட்டி-லிருந்தும் வந்து குவிந்தனவுமாகிய. பண்ணியம் = பொருட்-களை. பகுக்கும் ஆறு முட்டுருஅது = இன்ன துறைக்கு இவ்வளவு எனப் பகுக்கும் துறையில் குறைபாடு செய்யாமல், அறம் புரிந்து ஒழுகும்=அறத்திற்கு உரியனவற்றை விரும்பி மேற்கொள்ளும். நாடல் சான்ற துப்பின் பணைத்தோள் = இவன் இத்துணைச் சிறந்து விளங்குதற்கு யாதுகாரணம் எனப் பகைவரும் பிறரும் ஆராய்ந்து காணற்காம் பெருவலி படைந்த தோள் உடையோனாகிய. நினக்கு = உனக்கு. பாடுசால் நன்கலம் தரூஉம் = பெருமை மிக்க நல்ல பொருள் களைத் திறையாகக் கொடுக்கும் நாடு புறம் தருதலும் கடன் = பகைநாட்டைக் காப்பதும் கடனாகும். ஆகவே அது ஆற்றுக! வாழ்க நின் கண்ணி = உன் கண்ணி வாழ்வதாக!

10. மரம்படு தீங்கனி

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் வாரி வழங்குபன்; அவன் கைவண்மை எந்நிலையிலும் வற்ருது எனக்கேட்டு, அவனைக் கண்டு பரிசில்பெற அவன் தலைநகர்க்கு வந்தாள் ஒரு பாண்மகள்; அந்தோ! ஆங்கு அவளுக்கு ஏமாற்றமே காத்துக் கிடந்தது. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தலைநகரில் இல்லை; தலைநகரில் உள்ளாரை உசாவினுள்; அவர் கூறியது கேட்டு அதிர்ச்சியுற்றுப் போனுள். அடலேறனையான் ஆடுகோட்-பாட்டுச் சேரலாதன்; வாழ்நாளெல்லாம், அவன், தன் மண் காக்கும் போர், பிறர்மண் கொள்ளும்போர் எனப் போர்த்தொழிலிலேயே கழிப்பன்; ஆகவே, அவன், அப்போது அத்தகைய போர்க்களம் ஒன்றில்தான் இருப்பான் என எதிர். பார்த்தாள். ஆனுல், கூறியவர் அவ்வாறு கூறவில்லை; மாருக, நறவு எனும் ஊரில், உரிமை மகளிரொடு இன்ப வாழ்வு மேற்கொண்டுள்ளான் எனக் கூறினர். பாண்மகள், ''மனைவிழைவார், மாண்பயன் எய்தார்; வினைவிழைவார் வேண்டாப் பொருளும் அது'', ''நட்டார் குறைமுடியார்-நன்று ஆற்ருர், நன்னுதலார் பெட்டாங்கு ஒழுகுபவர்'', என்ற வள்ளுவர் வாக்கில் அசையாத நம்பிக்கை உடையவள்.

மாவீரன் அவன்; அதனுல், மாற்ருரை வென்று கைக்-கொள்ளும் மாநிதிகளை எம்போலும் இயவலர்க்கு வாரி-வழங்குவன் என எதிர்பார்த்து வந்த அவளுக்கு, அவன், இளமகளிரோடு இன்பவாழ்வு மேற்கொள்ள எங்கோ சென்று விட்டான் என்ற செய்தி ஏமாற்றம் பயப்பதாக, அவன் சிறந்த வள்ளல்; அதைக் குறைவற நிறைவேற்றவல்ல சிறந்த வீரம் உடையவன் எனத் தாம் கொண்டிருந்த நம்பிக்கையைத்

தகர்த்து விடுவதாக — அமைந்துவிடவே, செயலிழந்து அமர்ந்து விட்டாள் அவள்.

பாண்மகள் நிலைகுலைந்து போனாள்; ஆனால் அவளுடன் வந்த பாண்மகன் அதிர்ச்சியுற்றானில்லை. மாறாக, அது கேட்டதன் மூலம், எந்தெந்த பருவத்தில் எதைஎதைச் செய்ய வேண்டுமோ, அதைத் தவறாமல் செய்கிறான் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்பது உறுதியாகவே, அவன் மகிழ்ந்து கூத்தாடலாயினன். எதிர்பார்ப்பு ஏமாற்றமாகிவிட்ட ஏக்கத்தில், தான் செயலிழந்து கிடக்கும்போது பாண்மகள் மகிழ்ந்து கூத்தாடக்கண்டு பாணனைச் சினந்து நோக்கினாள் பாண்மகள்.

பாண் மகளின் முகத்தோற்றத்தின் மூலம், அவள் அகத்தே நிழலாடும் எண்ண அலைகளை உணர்ந்து கொண்ட பாண்மகன், ''பாண்மகளே! சேரலாதன், நறவு எனும் ஊரில், இளமகளிர் ஆடல் பாடல்களில் ஈர்ப்புண்டு, இன்புற்றுக் கிடக்கின்றான் என்றாலும், அந்நிலையிலும், அவன், தன்பால் வந்து நிற்கும் இரவலர்க்குப் பரிசில் பொருள்களை வாரி வாரி வீசுவன்; அவன் அத்தகையன், என்பதை, உன் கண்களாலேயே காண, இப்போதே ஆங்குச் செல்வோம்; இன்னே எழுக என்றனன். ''இன்னே எழுக'' எனப், பாணன் விரைவு படுத்தினாலும், போர் முயற்சியோ பொருளீட்டும் முயற்சியோ இல்லாமல், இன்பத்துறையில் எளியனாகிவிட்ட அவன்பால், கொடுப்பதற்கு, வளம் இருக்கவா போகிறது? அஃது இல்லா அவன்பால் செல்வது வீணும் என்ற எண்ணம் இடைபுகுந்து தடுக்கவே, பாண்மகள் இருக்கைவிட்டு எழுந்தாள் அல்லள்.

பாண்மகளின் இவ்வுள்ளத்து உணர்வை உணர்ந்து கொண்ட பாண்மகன், சேரலாதன் நறவு அடைந்து நங்கையர்

நலந்துய்த்துக் கொண்டிருந்தாலும், அவன், தன் நாட்டு மக்களும், தன்னை நாடிவரும் இரவலர்களும் இனிது வாழ்வதற்குத் துணைபுரியவல்ல, அழியாப் பெருவளங்களை ஆக்கி வைக்கத் தவறினனல்லன். அவற்றைக் குறைவற ஆக்கி வைத்துவிட்ட மனநிறைவினாலேயே, அவன், இப்போது, இன்பவாழ்வில் சிறிதே சிந்தை போக்கியுள்ளன். எடுத்துக் காட்டுக்கு ஒன்று; பாண்மகளே! அவனை நாடி இவண் அடைய, இடையில் கடந்துவந்த பெருவழிகளில், வருவார்க்கு வழியிடை வருத்தம் தோன்றாவாறு, அவன் வகுத்திருந்த அறப் பணி, உன் அகத்தைத் தொடவில்லையோ? தன்னைக் காண நெடுந்தொலைவிலிருந்து, தலைநகர் நோக்கி வருவார். வெய்யிலின் கொடுமையாலோ, உண்ணுநீர் கிடைக்காமை யால் உளவாம் நாவறட்சிக் கொடுமையாலோ துன்புறுவது கூடாது என்பதால், பெருவழியின் இருமருங்கிலும், நாட்டு நலம்பேணு நயமரங்கள் அரங்கொண்டு அழிக்க முனைந்தால், அரத்தின் வாய்மழுங்குவதல்லது அடியற்று போகாத் திண்மை வாய்ந்த நெல்லி மரங்களை, வரிசை வரிசையாக வளர்த்து வைத்திருக்கும் அவன் அறப்பணி உன் கண்ணில் படவில்லையோ? சின்னஞ்சிறு இலைகளேயாயினும், நெருங்கத் தழைத்திருப்பதால், வருவார்க்கு வெய்யிலின் கொடுமை தோன்றாவாறு, நிறை நிழல் அளித்துக் கொண்டு நிற்பதை நீ உணர்ந்திலையோ? புறத்தே வண்டுக்கூட்டம் மொய்த்துக் கிடப்பினும், அதனால் துளையுண்டு கெட்டுப் போகாத, முட்டை போலும் வடிவினையுடையதான, அகத்தேயுள்ள சிறுகொட்டை தவிர்த்து, முழுவதும் உண்ணும், பக்குவம் உடைய இறுகிய சாறு கொண்ட கனிகள், சிறுகாம்பு முழுவதும் வரிசை வரிசையாகக் கனிந்து கிடக்கும் காட்சியைக் காணவில்லையோ? அக்கனிகள், மரம் ஏறிப் பறிக்க வேண்டிய முயற்சிதானும் செய்ய வேண்டாதே மரத்தடியில் வீழ்ந்து, வழிப்போவார்க்கு உண்ணும் உணவும், பருகும் நீரும் தாமே ஆகிப் பயன்பட்டுக்

கிடப்பதைக் காணவில்லையோ? உண்டார் பசியினைப் போக்குவதோடு, தம்மை உண்டவர் அடுத்துக் குடிக்கும் நீரை, அது, உவர் நிலத்து ஊறி, உப்பேறிய நீரே ஆயினும், அதை இனிப்புடையதாக மாற்றி மகிழ்ச்சி அளிக்கும் அக்கனிகளின் மாண்பினை, வரும்வழியில் அது உண்ட நீ, உணரத் தவறி விடவில்லையே? அவையெல்லாம், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆக்கி வைத்திருக்கும் நிலையான அறப்பணிகள் அல்லவோ? அம்மட்டோ? பெருவழி மரங்களே அல்லாமல், அவன் நாட்டு நன்செய் புன்செய்களும், விளைந்து பயன்தரும் நிலையிலிருந்து என்றும் மாறுபடுவது இல்லை. அதனால் அவன் நாட்டு வளமோ, அவ்வளத்தால் நிறைவுறும் அவன் நாட்டுக் கருவூலங்களோ, என்றும் வற்றுவது இல்லை. ஆகவே, அவன் எங்கே இருந்தாலும், எப்படியிருந்தாலும், வாரி வாரி வழங்கிக் கொண்டே இருப்பன். ஆகவே, அவ்வளம் பெற்று வரலாம், பாண்மகளே! எழுக!'' என விளக்கம் காட்டி விரைவுபடுத்தினான் பாண்மகன். ஆனால், பாண்மகள், அப்போதும் இருக்கைவிட்டு எழுந்தாள் அல்லள்.

ஒருவன், மலைபோலும் மாநிதிக்கு உரியவனே ஆயினும், அஃது உடையவன், அஃது உடையேம் என்ற செருக்கால், மேலும் பொருள் ஈட்டும் எண்ணத்தை அறவே கைவிட்டுச்-சோம்பி இருந்து விடுவனாயின், அம்மாநிதி, ஒரு சில நாட்களுக்குள்ளாகவே இல்லாதிப் போய்விடும்; வாரி வழங்கும் வள்ளல் வழியினன் என்ற குடிப்புகழும் குன்றிவிடும். ''குடி என்னும் குன்றா விளக்கம், மடி என்னும் மாசுஊர மாய்ந்து விடும்''. ஆகவே, உள்ளபொருள் ஒருவனை வாழ்நாளெல்லாம் பொருள் உடையவனாகவே வைத்திராது. மாறாக, பொருள் ஈட்டவேண்டும், பொருள் ஈட்ட வேண்டும் என்ற உணர்வுடைமையே ஒருவனுக்கு அழியாப் பெருவளத்தை வழங்க வல்லதாம்—''உள்ளம் உடைமை, உடைமை;

பொருள் உடைமை நீங்கிவிடும்'' என்ற உண்மைகளை உணர்ந்தவர் பாண்மகள். அதனால் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் குன்றனைய செல்வத்தைக் குவித்து வைத்திருக்கக் கூடும். ஆனால், காரிகையரின் கடைக்கண் வீச்சுக்கு அடிமை-யாகிக்கிடக்கும் இப்போது, கொடுக்கக் கொடுக்கக் குறையா-திருக்கத் துணை புரியும் பொருளீட்டும் முயற்சியினைக் கைவிட்டிருக்கவும் கூடும். அது கைவிட்ட அவனை, அம்-மாநிதியும் மெல்லமெல்லக் கைவிட்டிருக்கும். ஆகவே, அவன்பால் இப்போது வழங்குவதற்கு வளம் இருக்காது, வளம் இலா அவன்பால் செல்வது வீணும்'' என்ற எண்ண ஓட்டத்தின் விளைவால், பாண்மகள், நறவு நோக்கிச் செல்லும் நினைவினைக் கொண்டாள் அல்லள்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், பொருள் ஈட்டும் முயற்சியில்லாதவன்; பொருளுக்கு வழிசெய்யும் போர்முயற்சி-யில்லாதவன் என எண்ணி விட்டதினாலேயே, பாண்மகள், நறவுநோக்கி நடைபோடத் தயங்குகிறான் என்பதை உணர்ந்து கொண்ட பாண்மகன் ''பாண் மகளே! நாட்டை நிறைவளம் உடையதாக ஆக்கிவிட்டதினாலேயே, ஆடுகோட் பாட்டான், பொருள் ஈட்டும் எண்ணத்தை மறந்து விட்டா-னல்லன்; மாறாக நறவடைத்து நங்கையர நலம் துய்த்துக் கொண்டிருக்கும் நிலையிலும், அவனிடத்தும், அவன் நாற்-படையிடத்தும் போர்பற்றிய சிந்தனையே சிறப்பிடம் கொண்டிருக்கும். நாற்படைக்குத் தலைமை தாங்கிச் செல்லும் போர்க்களிறுகள், பகைப்படையைக் கொன்று குவிக்கும் போர்வெறியே கொண்டிருக்கும். நறவில் அவனோடு சென்றிருக்கும் அவன் படைவீரர்கள், தங்கள் விற்களில் நாணேற்றியே வைத்திருப்பர்; அவன் நாற்படை மட்டுமன்று; அவன் நிலையும் அன்னதே; மங்கையரிடை கிடந்து மகிழ்ந்து கொண்டிருக்கும் நிலையிலும், அவன்

உள்ளம் பகைப்படைகளை அழித்துப்பெறும் வெற்றிகளையே நினைந்து கொண்டிருக்கும். போரில் புண் பெரு நாட்களெல்லாம், பயனில் நாட்களாம் என்ற உணர்வுடையனாகிவிட்ட ஒருவனாலும், அவன் படையாலும், போரோய்ந்து ஓரிடத்தே அடங்கியிருப்பது என்பது இயலாது என்பது உண்மை! ஆனால், இது, கூதிர்ப்பருவம். கூதிர்க்குளிரின் கொடுமை தாங்கமாட்டாது, உலகத்து உயிர்களெல்லாம் உணவும் வெறுத்து, தத்தம் உறையுள்களுள், தத்தம் பெடைகளோடு அடங்கிக் கிடக்கும். அது, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுக்கும் பொருந்தும்; கூதிர்ப்பருத்தில், புறம் சென்று போருற்றுவது இயலாது என்பதினாலேயே, அப்பருவம் வரை அவனும், அவன் நாற்படையும் சிறிதே ஓய்வு கொண்டுள்ளனர். மேலும், நறவு கடலைச் சார்ந்திருக்கும் நகராகும். அதனால் கூதிர்ப்பருவத்தின் கொடுமை ஆங்கு மிகுதியாகவே இருக்கும். மலையென எழுந்து அடங்கும் அலைகள், கடல் நீரைச் சிறுசிறு துவலைகளாக்கி ஓயாது தாவிக்கொண்டேயிருக்கும். கூதிர்க்கொடுமை, ஆடவரினும் மகளிரை, அதிலும் கணவனைப் பிரிந்திருக்கும் மகளிரை அதிகமாகவே கொடுமைப்படுத்தும். போர்கொண்டு சென்று பகைவர்களை வெற்றி கொள்வது, பகைப்புலத்தில் கொண்ட பொருள்களை, இரவலர்க்கு வாரி வழங்குவது ஆகியன எவ்வாறு ஒரு பெருவீரனின் கடமைகள்ஆமோ, அவ்வாறே, குளிரால் நடுங்கிக்கிடக்கும் உரிமை மகளிர்பால் சென்று, அவர் துயர்போக்க வேண்டுவதும் அவன் கடமையாம். ஆக, தான் ஆற்றவேண்டிய கடமைகளை அவற்றை ஆற்றவேண்டிய பருவமறிந்து தப்பாது ஆற்றிக் கொண்டிருக்கும் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் கண்டு பாராட்டபாண்மகளே! புறப்படு நறவு நோக்கி; ஆங்கு அவன் பரிசுப் பொருள்களைத்தவறுது வாரி வழங்குவன்; பெற்று மகிழ்வாயாக?" எனக்கூறி வரைவுபடுத்தினன்.

தன்னை ஈன்ற மரம், வாளாங்கொண்டு அறுத்தாலும் அறுபடாத்திண்மை வாய்ந்தது என்ற சிறப்பு, முன் நின்று பெருமை ஊட்ட, உடலெல்லாம், உண்டற்கினிய சாறேஆக, உண்பார்தம் களைப்பினைப் போக்கவல்லது என்ற தன்சிறப்பு பின்நின்று பெருமையூட்ட, இடையில் நிற்கும், ''மரம்படு தீங்கனி'' என்ற தொடரில் அமைந்திருக்கும் இலக்கியநயம் கண்டு இன்புற்ற பெரியார் ஒருவர், இப்பாட்டிற்கு, அத்-தொடரால் பெயர்சூட்டிப் பெருமை செய்துள்ளார்.

60. ''கொலைவினை மேவற்றுத் தானை; தானே
இகல்வினை மேவலன்; தண்டாது வீசும்;
செல்லாமோதில் பாண்மகள்! காணியர்;
மிஞிறு புறம் மூசவம், தீஞ்சுவை திரியாது.
அரம் போழ்கல்லா **மரம்படுதீங்கனி**,
அஞ்சேறு அமைந்த முண்டை விளைபழம்
ஆறுசெல் மாக்கட்கு ஒய்தகை தக்கும்,
மருஅவிளையுள். அருஅ யாணர்த்
தொடைமடிகளைந்த சிலையுடை மறவர்
பொங்கு பிசிர்ப் புணரி பங்குலொடு மயங்கி
வருங்கடல் ஊதையிற் பனிக்கும்
துவ்வா நறவின் சாயினத்தானே''.

துறை : வாகை
வண்ணம் : ஒழுகு வண்ணம்
தூக்கு : செந்தூக்கு
பெயர் : மரம்படு தீங்கனி

உரை: மிஞிறு புறம் மூசவும் = வண்டு புறத்தே மொய்த்துக் கிடக்கவும். தீஞ்சுவை திரியாது = இனிய சுவையில் மாறுபடாமல். அரம்போழ்கல்லா = வாளரத்தால்

அறுக்க மாட்டாத. மரம்படு = தீங்கனி மரத்தில் விளைந்த இனிய நெல்லிக்கனியாகிய. அம் சேறு அமைந்த = இனிய சாறு நிறைந்த. முண்டை விளைபழம் = முட்டை போன்ற முதிர்ந்த பழங்கள். ஆறு செல் மாக்கட்கு ஓய்தகை தடுக்கும் = வழிச்செல்வார்க்கு உணவாகி அவர் இளைப்பைபோக்கும்' மறுஅ விளையுள் = மாறுத புதிப்புது விளைபொருள்களையும். அறுஅ யாணர் = குறையாத புது வருவாய்களையும் உடைய. தொடைபடிகளைந்த = அம்பு தொடுப்பதில் மடிதல் இல்லாத சிலையுடை மறவர் = வில்லையுடைய வீரர்கள். பொங்கு பிசிர் = பொங்கி எழுகின்ற சிறுசிறு நீர்த்திவலைகளை எறியும். புணரி = அலைகள். மங்குலொடு மயங்கி வரும் = மேகத்தோடு கலந்துவரும். கடல் ஊதையின் = கடல் காற்றுல். பனிக்கும் = குளிர்மிகுந்து நடுங்கும். துவ்வா நறவின் = நறவு என்னும் ஊரில். சாய் இனத்தான் = சாயலையுடைய மகளிரிடையே உள்ளான் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். தான்கொலைவினை மேவற்று = அவன் நாற்படையோராகிய கொலைத் தொழில் விரும்பும் இயல்புடைத்து. தான் இகல்வினைத் மேவலன் = அவன் சாயினத்தான் ஆயினும், உள்ளத்தில் பகைவரை அழிக்கும் தொழிலையே விரும்புவன்; ஆதலால். தண்டாது வீசும் = நமக்குப் பரிசில் பொருள்களை வரையாதே வழங்குவன் பாண்மகள் = பாண்மகளே! காணியர் செல்லாமோ = அவனைக் காணச் செல்வோமா?

பேரரசர்களும் பெரும்படைத் தலைவர்களும் தம்புகழ் பாடும் புலவர், பாணர், பொருநர் போல்வார்க்குப் பரிசில் பொருள்களை வாரிவழங்குவதற்குக் கருதியே, ஓயாது போர் மேற்கொள்வர். வழங்குவதற்குப் பொருள் இல்லை என அறிந்த அக்கணமே, போர் முயற்சி மேற்கொண்டு விடுவர் என்பதற்கு எண்ணற்ற இலக்கியச் சான்றுகள் உள.

''இன்றாகப் பிறர் மண்கொண்டு
இனியசெய்தி நின் ஆர்வலர் முகத்தே''
''வேந்து தந்த பணி திறையால்
சேர்ந்தவர் கடும்பு ஆர்த்தும்''.
''யாம் தன் இரக்கும் காலை, தான் எம்
உண்ணா மருங்குல் காட்டித், தன்னூர்
கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே''.

என்ற புறநானூற்றுப் பாடல்களைக் [12, 22, 180] காண்க.

வழிப்போவார்க்கு நிழலும், நல்லகனியும் கொடுத்து, அவர்தம் வழிநடைக் களைப்பினைப் போக்கும் அற உள்ளத்தோடு, பெருவழிகளில் நெல்லி மரங்களை வளர்த்து விடுவது வழக்கம் என்பதைச் சங்க இலக்கியங்கள் பலவும் உறுதி செய்கின்றன; ஒரு சில இதோ.

''அறந்தலைப்பட்ட நெல்லியம் பசுங்காய்''

—குறுந் : 209

''நெடுஞ்சேண்வந்த நீர் நசை வம்பலர்
செல்லுயிர் நிறுத்த சுவைக்காய் நெல்லி''.

—அகம் : 271

''சாத்திடை வழங்காச் சேட்சிமை அதர
சிறியிலை நெல்லித் தீஞ்சுவைத் திரள்காய்
உதிர்வன தாஅம் அத்தம்''. —அகம் : 291

''சுவைக்காய் நெல்லிப் போக்கரும் பொங்கர்
வீழ்கடைத் திரள்காய் ஒருங்குடன் தின்று
வீநனைச் சிறுநீர் குடியினள் கழிந்த''

—நற்றிணை : 271

கூதிர்ப் பருவத்து ஊதைக் காற்றின் குளிர் கொடுமை மிகுந்தது என்பதைப் பின்வரும் தொடர்களும் உறுதி செய்யும்.

''மார்கழி மணிப்பூக் கூம்பத், தூத்திரைப்
பொங்கு பிதிர்த் துவலையொடு மங்குல் தைஇக்
கையற வந்த தைவரல் ஊதை''.

— குறுந் : 55

''மாமேயல் மறப்ப, மந்திகூரப்,
பறவை படிவன வீழக், கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பண்ண கூதிர்''.

— நெடுநல்வாடை : 9-12.

கமலம் பிரஸ், காஞ்சிபுரம்.

WRAPPER PRINTED BY "OLYMPIC" © 584274